உ

வல்லீதேவசேனாசமேத

ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி துணை

# மயூராசலபுராணம்

(இரண்டாம்பதிப்பு)

இஃது

ஸ்ரீமத், ஞானராஜதானியான இனாம், பொம்மயபாளையம்
திருக்கயிலாய பரம்பரை பெரியமடம் சிவகஞ்சி
மயூராசலநிவாச எதீஸ்வரகர்த்தரான மயிலம்
தேவஸ்தானம் ஆதீனபரம்பரை தரும
கர்த்தத்துவம் இனாம்தார்

ஸ்ரீலஸ்ரீ

சிவஞானபாலையசுவாமிகளால்

பதிக்கப்பெற்றது

திருமுதுகுன்றம்

தியாகராஜக்கவிராயரால்

இயற்றப்பட்டது.

பிரமோதூத ௵ மீனரவி

காப்பிரைட்] [விலை ரூபா 1—0—0

1931

சென்னை கேசரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-600 008.
175181
Q26.226
N31
175181

உ

முருகன்றுணை

# முகவுரை

## வெண்பா

இரங்குந் திருவுள்ளத் தேற்றமுற்ற செவ்வேள்
வரங்களெல்லா நல்கு மலைகேள் - குரங்கனைய
பாழ்மனமே பல்கோடி பத்தர் பரிசுபெற்று
வாழ்மயிலத் துள்ள மலை.

## வசனம்

"மயூராசல புராணம்" என்பது ஆறனுருபடியாகப் பிறந்த அன்மொழித்தொகையா யிந்நூற்குக் காரணக் குறியாயிற்று. மயிலாகிய மலையினது பழமையான கதையைச் சொல்லும் நூலென்னும் பொருளைத்தந்து நிற்பதாம். மயூரம் அசலம் புராணம் என்னும் மூன்று பதங்களைக் கொண்ட தொடர்மொழி முடிபென்க.

இதனையியற்றிய ஆசிரியராவார் பழமலை யென்னும் விருத்தாசலத்தலத்தில் வேளாள மரபில் உற்பவித்து விளங்கிய தியாகராஜக் கவிராயர் என்னும் விவரம் இதனது முதற்பதிப்பின் பாயிரத்தில்,

"நிலமகண்முகத்துத் திலகமெனவாங், கங்கையின் வீசம் பங்குபுகழ்மி கூஉந், துதிமணிமுத்த நதிவிளிம்புடுத்த, விருத்தகிரியிற் றிருத்தமாவாழுந், தியாகராசச் செம்மனன் குரைத்த, சூர்முதறடிந்த சுடர்மிகும்வேலோன், மலரயன்றன்னைத் தலைமிசைபுடைத்தோ, னரியருமருக னொருதிரு முருகன், வள்ளி தெய்வப் பிடி யுள்ளநனிமகிழ்வரன், வதிமயூராசல பரிபுராணத்தை, வம்மினென்றனமிடும் பொம்மயநகரினு, முன்மொழிமயிலத் தென்மலையதினும், வீற்றிருந்தருளும் போற்றரும்வீர, சைவசமய சற்குரு ராயன், பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண்டுய்வா, னல்லருள் சுரக்கு நாட்டவானவன், மானிடவுருவை மறைத்தடியவர்க்கா,

மானிடவுருக்கொளு ஞானக்கிழவன், மெய்யைப் பொய்யா விளங் கப் பகருஞ், செய்யவாயினன் றெய்வசிகாமணி, தவமுடையவர்க் குறும் பவமதைப் போக்குஞ், சிவஞான பாலைய தேசிகன் பரி வொடு, மெச்சிடவுலகெலா மச்சிட்டீகென, வரிதெனப்பகரும் பிரதி பலகொடுவந்து, வாய்ந்தவன்போ டாய்ந்துவிரைவினி, லெழு தாவெழுத்திற் பழுதறப்பதித்தனன் ” எனப் பகர்ந்தமைகொண்டு பெறக்கிடக்கின்றது.

இதனை இவர், பாயிரம் நைமிசாரண்யச்சிறப்பு நாட்டுச்சிறப்பு நகரச் சிறப்பு ஆகிய பூர்வாங்கப்பகுதியும், திருக்கைலாயச்சருக்க முதலாகத் தீர்த்தமகிமைச்சருக்க மீறாகவுள்ளபத்துப் பிரிவுமாகச் சூதமுனிவர் கூற்றில்வைத்து மொத்தம், ௬௨௬ திருவிருத்தங்களா லியற்றியுள்ளார். வாழ்த்துப்பா வொன்றுமாம்.

இவரது கவிகள் செம்பாகமானநடையில் சொல்நயப் பொருள்நயம் செறிய யாத்துள்ளதுமன்றி ஒவ்வொரு சருக்கத்து முகப்பிலும், ஸ்ரீ முருகக் கடவுளைத் துதித்திருப்பதால் இவரது பக்தித்திறமை வெளிப்படுகின்றது. தேவராதியர் வருசருக்கத்தில் பத்தாவது கவியில் “மாயவன்றுணைத் தேவியாந்திருவொடும் வளர்சிறைக் கலுழன்மேற் றாயவின்புபாகவதர்கள் சூழ்ந்து நற்றுதிநவின்றிருபாலு, மேயிடக்கதிராழியேமுதலடல் வீறு மைம்படைமல்க............சேர்ந்தனன், என விதந்துள்ளமையால் வயிணவத்துவேஷமில்லாதவர் என்பதும் இதுபோன்றே அம்பிகை விநாயகர் பரமசிவன் முதலிய மூர்த்திகளை ஆங்காங்கு சிறப்பித்து ஓதுவதால் வைதிக சமயங்களாறும், முருகனது ஆறு திருமுகங் களெனக் கொள்ளும் மேல்நிலைக் கௌமாரநிச்சயத்தில் ஒருவாறு பொருந்தியவராகவுந் தெரிகின்றது. தீர்த்தமகிமைச் சருக்கம், ௨௪·வது கவிமுதல் மூன்றுகவிகளில் பாலசித்தர் ஆதீனபீடத்திற் பதினைந்தாவதாக அமைந்த சிவசுப்பிரமணிய பாலையசுவாமிகள் கோபுரத் திருப்பணி செய்தது முதலிய பிரதாபங்களைச் சிறப்பித் துக்கூறுவதாலும், அவரதுகாலம் எழுபத்தைந்து வருடங்களுக்கு முந்தியிருந்திருப்பதாலும், அதேகாலம் இந்நூலாசிரியரான தியா கராஜக் கவிராயருடைய காலம் என்பது நன்கு விளங்குகிறது.

இப்புராணம் அதே காலத்தில் மேற்படி சுவாமிகளது அநுமதியில் முதற்பதிப்பு அச்சிட்டு வழங்கப்பட்டது. இப்போது அந்த ஆதீனத்தில் பதினெட்டாவது பட்டத்திற்கு அமைந்து பொம்மயபாளையம் பெரியமடாலயத்திலும், மயூராசல மடாலயத்திலும், அதைச் சார்ந்த பல கிளைமடங்கள் தேவஸ்தானங்களிலும், தலைமைவகித்து, உலகியல் அருளியல் இரண்டும் ஒருங்கு தழுவி நடாத்தும் தகுதிவாய்ந்து, ஸ்ரீ வல்லிதேவசேனாம்பா சமேத சுப்ரமண்ய மூர்த்தியின் ஆலய நித்தியநைமித்திக தருமபரிபாலனம் புரிந்துவருபவரும், வடமொழிதென்மொழிப் புலமை ஒருங்கு வாய்ந்து ஒழுக்கம் ஆசாரம் சத்தியம் உதாரம் முதலிய உத்தம லக்ஷணங்கள் அமைந்துள்ளவரும் குமாரசாமிஐயர் என்னும் பூர்வீகநாமம் உள்ளவரும் சிதம்பரத்தலத்தில் கந்தசாமி ஐயரவர்களென்னும் வீரசைவ சிரேட்டரது குமாரருமாகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகளால் இரண்டாம் பதிப்பு பதித்து வெளியிடப்பட்டுள்ளது.

மயூராசலாதிபதியாய்த் திருக்கோயில் கொண்டு அடியவர் விருப்பமுடிவுற அளிக்கும் வள்ளலாகிய, ஸ்ரீ வல்லீதேவசேனா சமேத சுப்பிரமண்ய மூர்த்தியின் திருவுருப்படமும், ஸ்ரீ சிவஞான பாலசித்தரது, ஆதீன பீடத்தின் பதினைந்தாவதான சுவாமிகளது திருவுருப்படமும், சேர்த்துப் பதித்துள்ளது அன்பர்களுள்ளத்தை ஆனந்தப்படுத்து மென்பதுண்மை. இஃதன்றியும்.

முதற்பாலசித்தரது திருவருளுக்குப் பாத்திரமாயவதரித்து முருகன்றிருவருளைக் கரதலாமலகம்போற் பெற்று [illegible]தனு சித்திகளியற்றி ஐந்நூறு வருடம் இருந்து அடைந்த இரண்டாவது பட்டத்துச் சிவஞான தேசிக சுவாமிகளது திவ்ய சரித்திரத்தை இப்போதுள்ள பதினெட்டாவது பட்டம் சுவாமிகள். திருவாமாத்தூர்க் கௌமாரமடாலயம், மஹான் வண்ணச்சாபம், திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகளென்கிற ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது குமாரரும் மாணாக்கருமான, செந்திநாயகம் பிள்ளை யென்பவரைக்கொண்டு செய்யுள் நடையாக இயற்றுவித்து, சிவஞான தேசிகப் பிரதாபம் என்னும் பெயரிலமைந்த

நூற்றுப்பத்து விருத்தங்களையும், மயூராசலபுராணத்தின் அநுபந்தமாக ஒன்றின முடித்ததென்னும் உத்திபற்றி அச்சிட்டுத் துலக்கியது மிகவும் அருமையாகும். சுபம்,

வெண்பா

பாலசித்த னுடைவன்ருள் பற்றுசிவ ஞானியுமச்
சீலன் மரபில்வருந் தேசிகரும் வேலணிகைச்
செவ்வேளு மன்னவன்றன் றேவியருந் தொண்டர்களு
மெவ்வேளையும்வாழ்க வே.

இங்ஙனம்

பிரமோதூதவருடம்
கும்பரவி.

கந்தசாமி ஐயர்,
குமாரசாமி ஐயர் குமாரர்
விருத்தாசலம்

வேலுமயிலுந் துணை

---

உ

முருகக்கடவுடுணை

# பதிப்புப்பாயிரம்

---

திருவாமாத்தூர் கௌமாரமடாலயம்

ஸ்ரீதண்டபாணி சுவாமிகளது குமாரர்

தி. மூ. செந்திநாயகப்பிள்ளை யவர்களியற்றியது

அறுசீர்விருத்தங்கள்

பண்பாடும்வண்டுமலி பசுந்துளவத்திருநெடுமால் பரவுசீர்நற், பெண்பாவுமிடப்பாகம் பிறைமவுலிகொளும்பெருமான் பேசுஞ் சொல்லாற், றிண்பாரிலருளுருக்கொள் சிவஞானபாலையப்பேர்ச் சித்தன்றன்னால், வண்பான்மைபொலிந்துகுகன் றலங்களின்மேலா யுளது மயிலக்குன்றம். (க)

அக்கிரிதான்பூருவத்தி லமைந்ததுவுங் கயிலையின்மு னருட் கௌமாரி, மிக்கியல்சொற்படிகாவல் செயத்தவறுங்கணத்தலைவன் வியன்பாரூடு, முக்கியமாந்தவவடிவாத் தோன்றியங்குசேர்ந்ததுவு முருகப்புத்தேள், சக்கினெதிர்திகழ்ந்தருள விழைந்துதவம்புரிந் ததுவுந் தகைசால்வள்ளி. (உ)

குஞ்சரிவந்தெழிற்கிரியி லமர்ந்ததுவுஞ்சித்தனெதிர் குகன் போராற்றி, மிஞ்சநலித்ததற்பினிசம் விளக்கியருளளித்த [illegible] மின்னார்தம்மைக், கஞ்சமலர்க்கரங்கொ[illegible]யணமபுணர்ந்து சித்தனொடு கவின்[illegible]மும், வஞ்சகப்புன்சமயவகை யறுத்துமறை நெறிச்சமயம் வளர்த்துப்பன்னாள். (ங)

சித்தர்பிரான்றிருவருளா டல்கள்புரிந்துகுகன்றளியின் றென் பான்மேவி, நித்தமிமையோர்முனிவர் மனிதர்தொழவிலிங்கவுரு நிகழக்காட்டி, யுத்தமப்பேறளிப்பதுவு மவன்வழிச்சீடர்களறஞ் செய் தொளிரும்வீறும், புத்தமுதமனையசுவைப் புண்ணியதீர்த்தங் களவண் பொலிந்தசீரும். (ச)

திரட்டியொருபுராணமெனச் சிறந்தபழமலைப்பதிவாழ் தியாக ராசன், வரப்பொலிவார்தரவனைந்தா னுத்தமரச்சிட்டுலகில் வயங்க வைத்தார், பரப்புமதுபலநாட்சென் றதனூற்புத்தகங்கிடையாரப் பண்பைநாடி, நரப்படிவங்காட்டியுள்ளி லருட்கடலாக்குலவுமொரு நல்லதூயன். (ரு)

பதினெட்டுத்திருவிழிகொள் பன்னிருகைச் சண்முகன்றாள் பரவிஞான, விதிதொட்டுச்சரியைகிரி யாயோகசாதனங்கள் விளக்கு மேலோன், க்திநட்டுத் தவம்புரிவோர் கல்விவிருப் புறுபுலவோர் களித்துக் காண, மதியெட்டுந் தெளிவுடையோன் பதினெட்டாம் பாலையனு வந்தசீலன். (சு)

இரண்டாவதாம்பதிப்புச் செய்துலகோர்க்குதவுநல மெண்ணித்தாழா, முரண்டாங்குபுறச்சமயர் களும்பயங்கொண்டடங்கு திறன் முருகோன்றண்டைச்,சரண்டாழ்ந்து தருமவழிப் பொருண் மகிழ்வினொடுகொடுத்துத் தகவேசெய்திட், டரண்டாழாமயில மலைத் தலைபலர்க்குமமுதமென வளித்தான்மாதோ. (எ)

உமாபதிகட்கருணையினு லமுதுகடைந்தன்றமரர்க் குள்ளத் தாருஞ், செமாதரத்தா லூட்டுபரந் தாமனதுசெயன்மேலோ திறல் சேர்சைவக், குமாரசாமிப் பெயர்ப்பாலையமுனிவன் மயிலமலைக் குமரன்காதை, சமானமிலாவச்சியற்றிப் புத்தகந்தந் ததுமேலோ தவத்தினேரே. (அ)

தன்னொருநற் பெருமையினை யேதுலக்கிமுன்னிருந்த சான் [illegible]ர், பின்னொருவர்க்கினிதினெடுத் துரையாதோர்பலருல கிற் பிறங்கலுண்டு, பு[illegible]ளிர்ந்தபாலசித்த னவனருள்சேர்சிவ ஞானி முதலோர்சீர்த்தி, பொன்னொளி[illegible]விளக்கே போல் விளங்க விப்பெரியன் புரிந்தான் மாதோ. (கூ)

# பதிப்புப்பாயிரம்

திருவாமாத்தூர்க் கௌமாரமடாலயம்
ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் பௌத்திரர்
தி. செ. முருகதாசபிள்ளை யியற்றியது

## அறுசீர்விருத்தங்கள்

செம்மைய பொழிற்சீர்தாங்கித் திரைகடற் கரையிலோங்கும்
பொம்மைய புரத்தின்முன்பு புனிதவாச் சிரமஞ்சேர்ந்து
வெம்மைய லறுந்தவத்தின் மேவித்தன் பாலடைந்தோர்
தம்மையந் தவிர்த்துவீர சைவதே சிகனாவாழ்ந்து. (௧)

சகத்திர வருடங்கள்ளி தனதுபா லருந்திப்பொல்லா
ரகத்தினாற் கடலிலாழ்த்த வருங்கரைசேர்ந்து மஞ்ஞை
நகத்தில்வந் தருங்கல்கண்டாய் நன்மணல் குளமாச்செய்து
சகத்தினில் யாரும்போற்றத் தக்கபல் விளையாட்டாற்றி. (௨)

பாலைய னெனப்பேர்பூண்டு பகர்சிவப் பிரகாசன்பால்
வேலையன் சென்றுபாடல் விளம்பெனப் பெற்றுச்சைவ
நூலைய மின்றிக்கூறு நுணுக்கமு மமையக்கொண்ட
மேலைய னிணங்கிவாழும் வியனுடைத் தாதலாலே. (௩)

சீர்கொண்ட முகமோராறுஞ் செவிகொண்ட குழையீராறுந்
தார்கொண்ட புயமீராறுந் தயைகொண்ட விழிமூவாறு
மேர்கொண்ட கனிவாயாறு மெழில்கொண்ட பொறியோராறுங்
கூர்கொண்ட வேலுந்தாங்குங் குகன்கொண்ட தலமாறேனும். (௪)

கயிலைம லையுந்தென்றற்சீர் கவின்றரு பொதியையென்னுஞ்
சயிலம லையின்சீர்ச்செந்தூர்ச் சந்தனக் கிரியும்வேலன்
பயிலம லைகளெல்லாமும் பார்த்துள நாணுஞ்சீர்தோய்
மயிலம லையெனுமொன்றே மாண்புடைத் தாகுமன்றே. (௫)

அத்தனி மலையின்காதை யதில்வளர் குமரன்சீர்த்தி
வித்தகப் பாலசித்தன் வியன்பொலி சிறப்புத்தீர்த்தத்
துத்தம மகிமையாவு முரைத்தனன் விருத்தக்குன்றி
னத்தவே வருதியாக ராசநா வலன்முன்னாளில். (௬)

உத்தம ரச்சிட்டங்நா ளுதவின ரிங்நாளந்தப்
புத்தகந் தீர்ந்ததாலே புதுப்பதிப் பியற்றவெண்ணி
மெய்த்தவப் பொலிவாசார மிகுதமிழ்ப் புலமையன்பு
மெத்தமன் னுயிர்கண்மீது விளங்குகா ருணியம்வாய்மை. (எ)

குமரசா மிப்பேர்வாய்ந்து குகன்விழி போற்பன்னெட்டா
வமரருட் பாலையன்று னந்தந்தச் சருக்கந்தோறு
மெமரவர் தாமுந்தேர்வா னியல்கதைச் சுருக்கமுஞ்சேர்த்
தமரரும் வியக்கவச்சிட் டன்பினர்க் களித்தானம்மா. (அ)

வேறு

பாலசித்த னருட் செயலா லுலகிற்றோன்றிப்
பதிந்தசிவ ஞானதே சிகன்றன்சீர்த்தி
ஞாலமுளோர் நன்கறியத் தமிழிற்பாவாய்
நவிலவெழிற் செந்திரு யகப்பேரெந்தை
பாலருளா லுரைத்துமயூ ராசலத்தின்
பழயபுரா ணத்தினநு பந்தமாகக்
கோலமுறப் பதித்தறிஞர்க் களித்தவெங்கள்
குமாரசாமிப் பெயர்ப்பாலையன் சீர்வாழி. (கூ)

ஷை வேறு

தானதத்தனத் தானனதனை

மாதவத்தினிற் சீரியருடனே
வாழ்வுறற்குனைப் பேணினன்வியனர்
சீதளத்துணைத் தாண்முடிமிசையே
சேரவைத்தருட் பேறுறவருள்வாய்
மேதகைத்தவச் சீர்மிகவுடையாய்
வீரநற்சைவத் தோரரசெனவே
பாதபச்சிறப் பார்சிகிமலைவாழ்
பாலையப்பெயர்த் தேசிகமணியே. (க0)

முற்றிற்று

வேலுமயிலுந்துணை.

11

ஸ்ரீ, அருணகிரிநாத சுவாமிகளியற்றிய

# மயிலம் திருப்புகழ்

தனதந்த தானன தான தான தனதான

கொலைகொண்ட போர்விழி கோலோவாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ
குழைகொண்டு லாவிய மீனோ மானோ எனுமானார்
குயில்தங்கு மாமொழி யாலே நேரே
இழைதங்கு நூலிடை யாலே மீதூர்
குளிர்கொங்கை மேருவி னாலே நான விதமாகி
உலைகொண்ட மாமெழு காயே மோகா
வலையம்பு ராசியி னூடே மூழ்கா
வுடல்பஞ்ச பாதக மாயா நோயால் அழிவேனோ
உறுதண்ட பாசமொ டார்ரா வாரா
எனையண்டி யேநம னார்தூ தானோர்
உயிர்கொண்டு போய்விடும் நாள்நீ மீதா அருள்வாயே
அலைகொண்ட வாரிதி கோகோ கோகோ
எனநின்று வாய்விட வேநீள் மாசூர்
அணியஞ் *ச ராசனம் வேறாய் நீறா யிடவேதான்
அவிர்கின்ற சோதிய வாரார் நீள்சீர்
அனலங்கை வேல்விடும் வீரா தீரா
அருமந்த ரூபக ஏகா வேறோர் வடிவாகி
மலைகொண்ட வேடுவர் கானூ டேபோய்
குறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்†டு லாயவள் தாள்மீ தேவீழ் குமரேசா
மதிமிஞ்சு போதக மேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழ பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர் பெருமாளே.

---

* சராசனம் - வில். † உலாய் - உலாவி.

## சருக்க அட்டவணை


| வரிசை | விஷயம் | பக்கம் | கவி |
| --- | --- | --- | --- |
| | பாயிரம் | க | உ௩ |
| | நைமிசாரண்யச் சிறப்பு | ரு | க௮ |
| | நாட்டுச் சிறப்பு | ௮ | எச |
| | நகரச் சிறப்பு | உ0 | ௩௮ |
| க | திருக்கயிலாயச் சருக்கம் | உசா | ரு௩ |
| உ | பாலசித்தர் திருவவதாரச் சருக்கம் | ௩சா | உக |
| ௩ | மலையுற்பவமுரைத்த சருக்கம் | சஉ | சச |
| ச | பாலசித்தர் தவம்புரிசருக்கம் | ருஉ | ௩எ |
| ரு | தேடிவருந்து சருக்கம் | சா0 | கூக |
| சா | யுத்தச் சருக்கம் | எசா | ருகூ |
| எ | அருள்புரிந்த சருக்கம் | ௮கூ | உரு |
| ௮ | தேவராதியர்வரு சருக்கம் | கூச | உ0 |
| கூ | திருமணச் சருக்கம் | கூ௮ | எரு |
| க0 | தீர்த்தமகிமைச் சருக்கம் | கக௩ | ருக |
| | வாழ்த்துப்பா | கஉக | க |
| | சிவஞான தேசிகப் பிரதாபம் | கஉரு | கக0 |
| | ஷை வாழ்த்துப்பா. | கசரு | க |

உ

முருகன் துணை



மயூராசலம்

ஸ்ரீ வல்லி தேவசேனுசமேத

சுப்பிரமண்யசுவாமி

உ

முருகக்கடவுடுணை

# மயூராசலபுராணம்

## பாயிரம்

### கணபதி

பூவி னாதனன் பூவளந் தோனுமா
தேவி னாதனற் றேவர் முனிவரர்
மேவி னாதம் விரும்புங் கரிமுகத்
தேவி னாதச் சிலம்படி யேத்துவாம். (க)

### பரசிவம்

அனைத்துலகுமனைத்துயிரு மவற்றினுணவாதியுமா யலவு மாகி, நினைத்திடுதற்கரிதாகி நிருமலஞானாநந்த நிறையுமோனர், மனத்தினொளிர்பேரொளியாய் மலருமலர்மணமெனவே மருவி நின்று, மெனைத்துணையுமினைத்தனவென் றுணரவொணாப்பரம் பொருளை யேத்துவாமே. (உ)

### பராசத்தி

பாலினுறுநீர்போல வாணவமாதியவகன்று பகருஞ்சித்தஞ், சாலுமறிவுருவாகுந் தனிப்பரனைக்கலந்துவயாத் தரித்தலின்றி, ஞாலமெலாமினிதீன்று காத்தழிக்குமாடறனை நடாத்தியைந்து, கோலமதாயுலகளிக்கும் பராபரையையெமதுளத்திற் கொண்டு வாழ்வாம். (ங)

### சபாநாயகர்

வானந்தங்கடந்திலகு செஞ்சடிலமோடுழையு மழுவுமாடத், தேனந்துமலர்க்கரத்தாற் றொழும்புலியும் பதஞ்சலியுந் தெரிசித் தாட, மீனந்தமாங்கண்ணு னுமைகாடக்கனகமன்றில் விளங்கி

யென்று, மானந்தநடம்புரியு மொருபொருளினிருசரணே யகத்துள்வைப்பாம். (௪)

### சிவகாமியம்மை

மலைவல்லியம்பலவன் வாமவல்லியகிலாண்ட வல்லியென்றுந் தலைவல்லிவேணுபுர மகற்களிக்கப்பால்பெருகுஞ் சாந்தந்தோய்ந்த முலைவல்லியடியவரைக் கருக்குழியாழாதெடுத்து முத்திநல்குங் கலைவல்லிசிவகாம வல்லிபதஞ்சொல்லிநிலை கண்டுவாழ்வாம். (௫)

### தலவிநாயகர்

பத்திவிணுணசலமராப் படைத்தபரனருண்முன்னோன் பனைக்கைவன்கோட், டத்திவிநாசம்பெறவே யொருகோட்டாற்றடிந்து வள மமரர்க்கீந்து, முத்திவிழை வியமுனிவர்க் கருள்புரிந்துமயிலை மலை முகட்டில்வாழுஞ், சித்திவிநாயகனடியை நித்தியநாந்தொழுதுபவஞ் சிதைத்தல் செய்வாம். (௬)

### விசுவேசர்

பசுவேசற்பதியடங்கும் பாசமறிலெனப்பகர்ந்த பாலனுஞ்சித், தசுவேசப்புங்கவனே யேயதற்குச்சான்றுகத் தன்பால்வைத்தோன், முசுவேசிற்பொழிருவு மயிலைமலைவிசாலாட்சி முதல்விபாகன், விசுவேசப்பெயரிலிங்க வடிவுடைப்பெம்மான்சரணம் விரும்பிவாழ்வாம். (௭)

### சுப்பிரமணியர்

முந்தனைமாரறுவர்முலை யருந்தியவாயினனிமய முளைத்தவல்லி, தந்தனையனறைகமழுங் கடம்பணியுந்தடம்புயனுஞ் சாமிநாதன், வந்தனைசெய்பவருளத்தி னமுதமணிமயிலைமலை வாழும் வைவேற், கந்தனைநற்சிந்தையில்வைத் தெந்தமைவாதிக்கும் வினைகளைந்துவாழ்வாம். (௮)

பவமாதித்துயரகற்றி யடைந்தவர்க்கின்பருண்மயிலைப் பருப்பதத்தி, னவமாநற்குறக்கொடியைத் தெய்வானைப்பிடியைமணநயந்துதூய, தவமாமெய்க்கொண்டிலகும் பாலசித்தற்குயருளைத் தந்தன்னேற்குச், சிவஞானதேவனெனப் பெயரருள்சண்முகத்தேவன் றிருத்தாள்சேர்வாம். (௯)

## தெய்வயானையம்மை

கானமுறுங்கலைமகள்செங் கமலமகண் முதன்மகளிர் கருதிப்போற்று, ஞானமகட்கொருபாகந் தருதேகனெங்களைய னாளும்வாழ்த்து, மானமருமகள்சித்தன் மகளெனச்சொன்மாட்சிதருமகணாற்கோட்டி, ஞானமகளிந்திரனுக் கரியமகண்மருமலர்த்தாட்கன்புசெய்வாம். (௧௦)

## வள்ளியம்மை

புள்ளிமயில்வருபாக னிமயவரைமயிலுதவும் புதல்வன்சூரையள்ளியயிலெனவயிலுக் கருளினோ னாறுமுகத் தம்மான்வேண்டத்தெள்ளியயிலெனவிடியைத் தந்தவனுக்குவகையருள் சிறப்பினாளைவள்ளிமயிலைப்பணிந்து கள்ளமயலைத்தணந்து வாழ்குவாமே. (௧௧)

## சரசுவதி

தெள்ளோதப்பயக்கடலி னரவணையிற்றுயில்கூருந் திருமாலுந்தி, யுள்ளோதொணுவுவகைமீக்கொளவந்தவன்வதனமொருநான்கிற்குங், கள்ளோதிக் கயல்விழிச்செவ் வாயினெருமுகங்காட்டிக் காதலூட்டும், வெள்ளோதிமத்தினைநம் முள்ளமெனுங்கமலமதின் மேவச்செய்வாம். (௧௨)

## திருநந்திதேவர்

புந்தியானினைப்பரிதாந் திருக்கைலாயத்திறைவன் புனலார்வேணி, யந்திவான்மதியணியு மண்ணல்மலரடிபணிவா னண்ணுந்தேவர், பந்திமணிமகுடநிரை விலகிடவேத்திரமென்னும் படைகொண்டோச்சு, நந்திதேவற்பணிந்து நந்தமதுவினைதொலைத்து நந்தாதுய்வாம். (௧௩)

## திருஞானசம்பந்தசுவாமிகள்

தழுதழுப்பவழுமகவு பாலருந்துமெனுமொழிக்குச் சான்றேயாகத், தொழுதகுதந்தையைக்காணு தழுதரியபரசுகத்திற் றொடக்குண்டன்பான், முழுமலமாயையைநீக்கு ஞானப்பாலுமையருளமுன்னந்தேக்குங், கழுமலப்பேரூரின்வரும் பிள்ளையடியுள்ளிவினைக்கரிசுதீர்ப்பாம். (௧௪)

## திருநாவுக்கரசுசுவாமிகள்

இப்பிறவிக்கடல்கடப்பா னெண்ணுமனத்தினர்யாரு மினிதாய்மாதர், துப்புறுமாமயலுவரி காராழிநீற்றறையுந் துணுக்கென்

றேறி, மைப்படுவிடோதனமுங் கடந்துமதமலைகடந்து வந்த வெங்க, ளப்பரிருபதங்கருதிற் செப்புவதென்னேயவர்கட் கண்ணுந்தானே. (கரு)

சுந்தரமூர்த்திசுவாமிகள்

அத்தாவென்னுருயிரே யம்பொன்மலைவல்லிபங்கா வரனே யென்ன, வித்தாரம் புகன்றுருகிப் பழிச்சுநருக்கருள்புரியும் விமலன்கேட்பப், பித்தாவென்றரும்பதிக மோதுதிருநாவலூர்ப் பெருமான்றாளை, யித்தேகத்தியாந்துதிக்க வெத்துணைதேகங்கடவமியன்றவம்மா. (கசு)

மாணிக்கவாசகசுவாமிகள்

நாதவூர்விடைப்பாக நஞ்சணியுங்கண்டவரை நங்கைக்கோர் பால், வீதவூர்மூன்றினையும் பொடித்ததிருநகையாள விமலஞான, போதவூர்மதிச்சடில வென்றிருகணீர்வெள்ளம் பொழிய வேத்தும், வாதவூரடிகளடி முடிக்கணிந்துமிடிக்குவிடை வழங்குவாமே.

அறுபத்துமூவர்

உறுபற்றேதேனுமிலா தையனடியாரிடத்தி லுண்மைப் பற்றே, பெறுபத்தர்மனமுதன்மூன் றொருமையுறப்பூதிகற்சாதனங்கள்பேணிச், சிறுபற்றுனவையகலத் திகைப்பற்றெல்லாஞ் சிவமாய்த்தெளிந்துநின்ற, வறுபத்துமூவர்மல ரடிப்பற்றலினிமறுபற் றடாதுவாழ்வாம். (கஅ)

சிவஞானபாலையசுவாமிகள்

மாலயனுதியர்பரவுஞ் சிவகணத்தினதிபனுமை மகிழ்நனேவால்
வேலையுதித்தேமயிலை மலைமேவிக்குமரனுடன் விழைபோராற்றிச்
சாலவவனருடாங்கி யன்னவனேடினிதமர்ந்த தவத்தர்போற்றும்
பாலசித்தனுமெங்கள் சிவஞானதேசிகன்றாள் பணிந்துவாழ்வாம்.

சிவப்பிரகாசசுவாமிகள்

வெங்கையெனுந் திருத்தலத்தில் விழைவுறுசாமுண்டியிலம் விலகவேதம், பொங்குமுதுகுன்றிடைமாங் கனிக்குமுனிந்தோன் வருந்தப் புகன்றவாதின், மங்கிடச்செந்தூர்ப்புலவ னருட்கவி சொல்வீரசைவ மணியாய்வந்த, வெங்கள்சிவப்பிரகாச னிணையடித்தாமரைவாச மெம்முள்வாசம். (உ0)

## பாயிரம்

### வாழ்த்து

வேத மல்குக வேள்வி வளர்குக
சீத மாமுகி றிங்களின் மும்மழை
யோத நீருல கெங்கு மொழுகுக
நீதி யாக நிருபனும் வாழ்கவே. (௨௦)

### நூல்வழி

கண்ணுதற்பிரான் களிகொளத்தோன்றிய கதிர்வே
லண்ணலாடல்க ளளப்பிலவவற்றினு ளறவோர்க்
கெண்ணுஞ்சூதன்முன் னிசைத்திடுமயில்வரைப் புகழை
நண்ணுமாசையாற் சிறியனுந்தென்சொலா னவில்வேன். (௨௨)

### அவையடக்கம்

நன்மையதேயென்ருலு மன்மையதேயென்ருலு நற்ருயீன்ற, தன்மகவைச்சீராட்டிப் பாராட்டுந்தன்மையைப்போற் றமிழ்வல்லோரென், புன்மொழியைநன்மொழியென் றெடுத்தாள்வரென வுளத்திற் பொங்குமன்பாற், றென்மயிலைமலையில்வருங் குமரகுரு திருக்காதை செப்புவேனல். (௨௩)

பாயிரமுற்றிற்று

## நைமிசாரண்யச்சிறப்பு

சீதமேகுடி யிற்பொலிந்துறை திண்மையானுமி யாவையு
மீதலாவிலை வேறுபேறென வெய்தலானுமி ருந்தவர்க்
கேதமுற்றும கற்றியென்றுமி ருக்கையானுமு மைக்கிளங்
காதலன்பத மோதலாநிகர் காவினைமிச மாவனம். (௧)

வாதமேவய மாகநாடொறு மன்னிநிற்பவர் பல்கலை
வாதமார்கலி யோதைநேரவ ழங்குவாருயர் விண்ணினும்
போதுவார்குளி கைக்குணங்கொடு புக்கபேர்நிலை புக்கிட
வோதுவாரெனு மாதவத்தின ருய்யுமாறுதொ னைமிசம். (௨)

### வேறு

ஆலரசசோகுசினை நாகமலிபூகம்வழை யத்தியிலவங்கமாரட
பாலையெழுபாசிலை யுலாவுசரளங்கனி பலாமுகிலுலாவுதாழை
தாலமொடுருத்ரமகிழ் மாதவிபலாசுமிகு சம்பீரமாமலகமார்
வேலன்மகிழ் வாலணியும் வெட்சியுயர்கூவிளம் விராயவனநைமிசவனம்.

கடங்கொளிபமானரி மடங்கலாமாகடமை காருருவமேதிய திகத், திடங்கொளுழுவைகளுடல ரோமநிரையார்கரடி சீறுதறு கட் சூகர, நடங்கொண்மயிலன்றிலுர கஞ்சரபமங்கவரி நாவிபகு வாயாளமோ, டடங்கலு நிறைந்துவயி ரங்கொள்பகை யின்றியவ ணன்பினுறை நைமிசவனம். (௪)

### வேறு

பரவுபெரியோரவையை யடையின்வெய்யதுற்சனரும் பண்பு வாய்ந்த, வுரமுடையராயடங்கி நிற்பரதற்கடுப்பவிங்ங னுரைக்குங் கானத், தரவுகொடியெனும்பெயரை யடைந்துமதன் றிறம்விளக்கா தந்தணாளர், விரவுதிருமுடியின்மிசை யெழிற்பணத்திற்குடைநிழற் றும் வியப்பதோர்பால். (௫)

நிலைபிரியாமலையருவி சொரிவதனைக்கண்டிரண்டு நீண்டதந்த, நிலைபிரியுமலைமாறு கொண்டெழுந்துமுனிவர்குழா நெருங்குஞ்சா ரற், றலையெய்தாவுயர்பனைபோற் கரநீட்டிவானதியிற் சலமுகந் தவ், வலைவில்புலமாதவர்தந் திருமுடிக்கணருவியென வாட்ட லோர்பால். (௬)

வானாட்டுமகவானுக் காயிரங்கண்டந்தமுனி மனைவியாய
கானாட்டுங்குழலகலி கைக்கலுருவந்தவிர்க்குங் கண்ணனுந்தி
மேனாட்டுமலர்ப்புத்தே டருப்பையினாற்பரிதிசெய்து விடவதேகித்
தானாட்டும்பெயரதுவே நைமிசமென்பதுவிங்ஙன் சாற்றுங்காலே.

### புராணவரலாறு

இனையவளஞ்செறிநைமி சாரணியந்தனிலறங்க ளிரண்டின் முன்னா, மனையறநல்லியல்பினொடு மாற்றியுயர் துறவறத்தின் வாய்மைகொண்டோட, துனைவின்மகம்பலவாற்றிப் பேறெய்திச்சிவா

றபவத் தாயோராகப், புனையுமருந்தவம்பூண்ட சவுனகாதியர் மகிழ்ந்து பொற்பினோடே. (௮)

இருக்குமமைதியிற்பரமன் றிருவுருவநினைந்தழலி னிழுதுநேர, வுருக்கமுறுமுளத்தினன்வெண் ணீறுருத்திராக்கத்தா லொளிரு மெய்யன், றருக்கமிடுஞ்சமயகலை யாவையும்பொய்யெனக்கடிந்து சைவமெய்ம்மை, தெரிக்குமுரவோனறுமூன் றூயபுராணங்களெ லாந்தெரிந்த மேலோன். (௯)

வாதராயணற்குரிய மாணாக்கன்சூதனெனு மாதவத்தோ, னாதரத்தோடெய்துதலு மாங்கமர்ந்தமுனிவரெதிர்ந் தன்பிற்போற் றித், தீதறுநற்பகலாய தின்றெமக்குநினைக்காண்டல் செயலா லென்னா, மேதகுநன்முகமனிசைத் தவற்சூழ்ந்துதஞ்சாலை வியப் பிற்சேர்த்தார். (௧0)

தூயமணி யாதனமொன் றமைத்ததன்மே லிருத்திநன்னூல் சொல்லுமாறே, நேயமொடுமருக்கியமா தியவுதவியுபசார நிரலே யாற்றி, யாயிடைச்சூழ்தரவிருந்தி யாஞ்செய்மகப் பேறன்னை யையவெம்பா, லேயவிங்குதந்ததினித் தவப்பயன்பெற்றேம்பிறப்பு மினிதிற்றென்றார். (௧௧)

வேறு

அம்மொழி சூதன்கேளா வாதியம் பரனைப்போற்றிச்
செம்மைசேர் மகங்களாற்றித் திகழ்தரு முனிவீர்தூய
நம்முயர் குழாஞ்சேர்வன்றோ நவலுறு மென்போல்வாருக்
கிம்மையிற் றவங்கள்செய்திங் கெய்தரும் பெரும்பேறென்றான்.

ஆவதக் காலைநைமி சாரண்ய வறவோர்சொல்வா
ரோவரு மறைகடந்த வொப்பிலாக் குரவற்கன்பே
மேவுறு மாணாக்கர்க்குண் மிகத்தெருள் சிறந்தோய்கந்தத்
தேவருங் கதைமுன்சொற்றாய் கேட்டகஞ் சிறந்துளேமால். (௧௩)

அத்திருக் குமரப்புத்தே ளமர்ந்தினி தாடல்செய்யு
முத்திசேர் தலங்களுள்ளு முந்துயர் தகைமைத்தாய
தெத்தல மதனைக்கேட்பா னிசைந்தன மையவின்றெஞ்
சித்தநன் மகிழ்வுகூரச் செப்புதி யறியவென்றார். (௧௪)

என்றலுஞ் சூதன்கேளா வெரிபடு மிழுதேயென்னத்
துன்றுள முருகிப்பொங்கத் தூய்தரு மெய்சிலிர்ப்பக்
குன்றமுங் கடலுமாவுங் குலைந்திடத் தடிந்திலங்கு
வென்றிவேற் குமரன்பாத மென்மலர் பழிச்சிச்சொல்வான். (கரு)

தலம்பல வுளவவற்றுட் சண்முகப் பரமனெய்தி
யலகில்பல் லாடல்செய்தற் கமைந்ததாங் கடைந்தோர்க்கெல்லாஞ்
சொலுமறம் பொருளேயின்பந் தூயவீ டருள்வதாகு
நலமுறு மயிலையோங்க ஜெண்டைநன் னுட்டின்மேவும். (கசு)

வேறு

அம்மலைமேற்சூர்தடிந்த வேற்கரச்செவ்வேள்குறமா னமரர்மானை
நன்மையுறவேட்டெதிர்ந்த சங்குகன்னற் சூர்மாற்றி ஞாலந்தன்னி
லிம்மையினிற்றனைப்பரவு மன்பரகங்கருதுவன வெளிதினீந்தே
செம்மையுறச்சித்தியொடு முத்தியையுந்தரவமர்ந்தான் றெரிதிரென்றான்.

சுகமுதவுஞ் சூதமுனி நகைமுகமா மொழிந்தருளுஞ் சொல்லைக்கேளா, வுகமுடிவுமழியாத நோன்பியற்றுமுனிவரருள் ளுவகைமேற்கொண், டகநெகிழ்வுற்றன்புருவ மெய்தினரா யங்காட்டி னணிகள்யாவும், புகறியெனப்புகழ்ந்துரைப்ப வதுகேட்டுச்சூதமுனி புகல்வான்மன்னோ. (கஅ)

நைமிசாரண்யச்சிறப்பு முற்றிற்று

ஆகு திருவிருத்தம், சக.

## நாட்டுச் சிறப்பு

குமிழ்தடுப்பப்பொருமிணைச்சே ருங்கிமலர்கமலமெனக் குலாமுகப்பொற், சிமிழ்கடுத்தமுலைலோபா முத்திரையின்கணவன்விந்தச் செறுநீள்குன்றை, யமிழ்தலத்துளனவழுத்தி னேன்பெறமாமறைப்பொருளை யருளியின்செந், தமிழ்கொடுத்தவருட்குமரப் புலவனடிக்கமலமலர் தலைமேற்கொள்வாம். (க)

வேறு

திருமுகத்தொகை யாறுபெற்றிலகிய செவ்வே
ளொருமுகத்தினின் றுரைப்பருஞ்சித்தனே டடன்ற

செருமுகத்தகன் றவற்கருள்புரிமயிற் றிகிரிக்
குருமுகத்தெழிற் பெறுதொண்டைநாடுகூ றுவமால். (உ)

வேறு

திருவளர்விசும்பிற் கொண்டலெம்பால சித்தர்கோனடியவர்க் கருள்வெண், டெருணிறங்கொடுபோ யார்சலியயின்று செவ்விய வடியர்பாற்றீர்ந்த, மருளியன்மலமு மாயையுந்திரண்டு மயிலைமா மலையுறைகுமர, குருபரன்றன்பாற் குறைசொலவடையுங் கொள் கைபோன் மீண்டனவிரைந்தே. (௩)

அன்னகாரெழிலி மயிலைமாமலைமே லமரர்சேனாபதியுகைக்கு, நன்னிறமயில்போ லீண்டிமற்றந்த நாயகனசுரரைத்தடிந்த, மின் னவிர்வேல்போற் றடித்தவன்றுவச வெங்குரற்போலதிர்ந்திடித்து, மன்னுமெய்யடியார்க் கவன்செய்நல்லருள்போல் வளங்கெழு மாமழை பொழிந்த. (௪)

மயிலைமாமலைமேன் மின்னுறீஇயிடித்து வான்கரு முகின்மழை பொழிதல், பயில்விசும்பமரர்க் கிறைவனாங்கரிய பாகசாதனனு ளக்கனிவால், வெயில்விரிமகுட கேயூரமொளிர மேவியின்னியம் பலமுழங்க, வயிலெழிற்கரத்துக் குழகற்குநறுநீ ராட்டுறுஞ்செயனி கராமால். (௫)

ஈரநீர்க்கொண்மூ மயிலைமாமலைமே லினியநீர்பொழிவன வெழின்மா, யூரமாய்க்குமரச் சேவகற்றாங்கி யுறுதலைவேண்டிவன் மாவாஞ், சூரனாமசுரன் கனிந்துவானதியிற் றாகறுநீர்கொடு செங்கை, வீரவேலவற்குள் ளுவகைமீக்கூர விழைவினி லாட்டு வான்போலும். (௬)

ஆறு

மலையின்வீழ்புனலாங் காங்குறுமணியின் வகையுடன்செம் பொனுமலரு, மிலகுறுதளிரு நிரைநிரையாக வியற்றியெம்முருக வேட்கிணங்கத், துலைவில்பன்மாலை தொடுத்தணிந்தனபோற் றலங் குறவவ்வயினுலவிக், குலவுறுமருவி யவ்வரையடியிற் கூடியாறாயின வம்மா. (௭)

சந்தனமகிலங் குங்குமந்தேக்கந் தருக்களைமுறித்துமென் காந்தட், கொந்தலர்சிதற்றிச் சிறுகுடில்குலைத்துக் கொடிச்சிமென் மாதர்கள்காக்கும், பைந்தினைக்கொல்லை யழித்துவன்குறவர் பாவையர்வெருவுகொண்டிரியக், கந்தடுமதத்த களிறுபோங்கதியிற் போயதுகடம்புனனீத்தம். (அ)

வய்முறுசீய வாகனிதான்வாழ் வண்புலப்பாலையின்மருவு, மெயினராந்தானை யளப்பிலகொண்டே யெரிமுகத்துமிழ்தருகொடிய, வயினெடுங்கணைவாள் விற்கதையேந்தி யடலுறுமகிடனைப் பொருதே, சயம்பெறவிடுத்த தன்மைபோல்வரன்றிச் சலிலத்தின் பெருக்ககன்றதுவே. (கூ)

முந்தொருதருவைக் கவர்ந்துபார்கொணர்ந்தான் முகுந்தனென்றவனுறையூர்மே, லிந்திரன்படைவந் தடுதல்போற்றருக்க ளெண்ணிலகளைந்தெறிந்திடையர், தந்தனிக்குடில்செற் றணிகலந் துகில்க டயிர்முதலியகவர்ந்துழக்கி, வந்துமற்றவன்ற னிலத்தினர் மகிழ மருதம்வந்தடைந்ததுநீத்தம். (க0)

வானுயர்தருவின் மலர்தளிர்கொண்டு மள்ளர்கள் பல்லியமுழக்கத், தேன்கனிமுகந்து பதுமமுஞ்சங்குந் திகழ்தரக்கொண்டு வானவர்தங், கோனைவார்முலைக்கோட் டியானைதந்தோனைக் குறுகியன்னோன்மகிழ்பூசைக், கானநற்பொருளை யமைத்தல்போன் மருத மடைந்தவனுலவியதன்றே. (கக)

குன்றுறைமயில்கள் பிடிகள்வெம்பாலை குலவுறுபுறவுகண் முல்லை, யொன்றுசெம்மான்கண் மருதவெள்ளனங்க ளூடன்றழீஇ வரும்புனல்காந்த, டுன்றலர்க்குரவ முல்லையங்கமலஞ் சொனுமி வையாதியசூடித், தன்றனிக்கொழுநன் மணந்திடச்செலுநற் றலைவி போனெய்தல்சார்ந்ததுவே. (கஉ)

வானிழிபுனல்யா றணிதிகழ்குறிஞ்சி மருவெழிற்பாலைநன் முல்லை,கானலர்மருத நெய்தலின்பொருள்கள் கடலிடையடைதரச் சேர்த்தன்,ஞானமெய்ப் பால சித்தனுங் குரவ னல்லடியார்க்கருள் புரிந்தம், மானவர்தமைப்பே ரின்பசாகரத்தின் மருவுறச்செய் தலேமானும். (கங)

## மருதம்

அத்தனிவராக நதியெனும்பேரியா றறிவுசான்றோர்தொழும் பால, சித்தர்கோனடியார் பக்குவமுறையிற் சிந்தையின்ஞானந் தேக்குதல்போ, னத்துறுதடங்கள் குளங்கயம்வயல்க ணனிவளம் பெறப்புனனிறைத்தவ், வித்தகச்சித்தன் மெய்ப்புகழென்ன வியன்புவி மேற்பரந்ததுவே. (௧௪)

உடைமனையியல்பிற் கமைவுறுதுயர்ந்தோ ருரையினையகற்றி வெங்காம, நடையினர்பொதுமா தரிற்செலல்போல நன்குறு மடைக்கடங்காது, தடைப்படுகரையைச் சாடிமேற்செல்லுஞ் சலி லத்தைமள்ளர்கள்படையாற், கிடைப்பருமறிவாற் பொறியினைய டக்குங் கேள்வியர்போற்சிறைதடுத்தார். (௧௫)

பரம்புமஞ்ஞான மேவலாலுலகிற் பன்மறைமுறைதிறம் புதல்போ, னிரம்புபோம்புனலாற் கரைவரம்புலைந்த நீள்வயறனின் மறைமுன்னூ, றரம்புரிந்துலகிற் சித்தர்கோனமைக்குந் தன்மை போன் மள்ளர்களுலைந்த, வரம்புகள்புதுக்கிக் குரம்புகளொதுக்கி வயமுறு நல்வளம்படுத்தார். (௧௬)

### வேறு

குரம்புநீண்மடை போம்புனலொலியுமுன் குலைந்த
வரம்பமைக்குநர் கலியுமேருழுநர்வாய் வழக்கு
மரம்பயின்றக னுளைச்சியர்குரவையி னார்ப்பும்
பரம்படிக்குந ரோதையுங்கடலொலி படுக்கும். (௧௭)

நத்துலாம்வயல் வளம்படுத்துநருநன் முளையை
வித்துவார்களும் விளைதருபயன்கொளும் விழைவான்
முத்துலாமுலைக் கடைசியர்மகிழநான் முனைக்கோட்
டத்திவானவன் விழவயர்ந்தாடலி னமைவார். (௧௮)

திறந்தவாவளர் நாற்றினைப் பிடுங்கிநாண் செறித்துச்
சிறந்தவேறுசெய் தனிடத்திகழ்தரு தோற்றம்
பிறந்தகந்தனிற் செல்வத்தின்வளரிளம் பெண்க
ளறந்தவாமணத் தம்மனைவாழ்வுற லாமால். (௧௯)

ஆற்றவேமுகம் வாய்விழிக்கரும்பகை யாகித்
தோற்றுமம்புய மாம்பல்கார்நெய்தல்கள் சூழ்ந்து
சேற்றினர்வய லுறுதலᵃற்கடைசியர் செருத்தார்
மாற்றலர்க்கிடைப் புகுந்தவர்வாழ்வரோ மதிக்கின். (௨௦)

ஆவல்சேர்மனை யவரைத்தீமாதர்சேர் வகற்றி
மேவல்செய்வள நிரப்பியேகாக்கும்வீ ரரைப்போற்
றுவில்பூம்பயிர் களைகடிந்தினியநீர் தகைத்துக்
காவல்செய்குவர் மள்ளர்கள்சுகம்பெறல் கருதி. (௨௧)

நாறுநீள்பயிர் சித்தர்கோ னடியவர்ஞானங்
கூறுகேள்வியின் பயன்கொளல் போற்பயன் கொண்டு
வேறுதெய்வங்க டொழாவவர் நிமிர்வின்மே னிவந்து
வீறத்தேசிகற் றொழுதல்போல்வணங்கின விளைந்தே. (௨௨)

ஈரிரும்புகொண் டுழவர்நெல்லரிகளீர் பொழுதி
லாருமாம்பலும் வனசமுமறுப்புண்டு கிடத்தல்
கூருமன்புறு கொழுநர்மாண்டிடவருங் குறையாற்
சாருங்கற்பினர் தம்முயிர்துறத்தலே சாலும். (௨௩)

அரிகளாமென வுலவுறுமள்ளர்க ளணிநெல்
லரிகளாவன சும்மையிற்களஞ்செறித் தடுபோர்
புரியுமாறுபோ லடித்துப்போர்புரிந்துபொன் னவர்தம்
புரியுமாமணித் தெனவதன்மீமிசைப் பொலிவார். (௨௪)

பெரும்..கட்டெழிற் புயத்தினர்நெல்லரி பெய்து
கரும்பகட்டினுற் றுவைத்துவைநீத்தநெற் கால்போல்
வரும்பகட்டிரும் பண்டியிற்கொண்டுபோய் வானோர்
விரும்பகட்டினன் மனைதொறுங்குவித்துமே வினரால். (௨௫)

மஞ்சளாம்பயிர் காட்டுவவாழைகள் வாழை
மஞ்சளாவுயர் கமுகுகள்காட்டுவ வளர்பூ
கஞ்சமானமாந் தெங்கினந்தெங்குநீர்க் கயத்திற்
கஞ்சமாமுகத் தரம்பையர்பதிபுறங் காட்டும். (௨௬)

மருதமாநிலத் தெய்வதச்சந்நதம் வந்த
மருதமாவென வாடுறுமள்ளரை மகிழ்கா

மருதமாமனைக் கிழத்தியர்தொழுவிழா வயங்கு
மருதமாபலா காஞ்சியஞ்சோலைகள் மலர்ந்த. (உஎ)

இரும்பினன்னகோட் டெருமைகளியானைகட் குரித்தாங்
கரும்பையார்தரு படப்பைபோய்க்குதட்டியே கமழ்பொன்
னரும்புகற்பகஞ் சேர்தருகாகமு மருந்தும்
விரும்புதேவர்கோ ளமுதெனச் சொலுமொழி விளக்கும். ()

நன்னறும்புனற் றடங்களிற்கமலநாண் மலர்மேற்
பொன்னிறச்சிற கன்னங்கடிருவெனப் பொலியுந்
துன்னுபூம்பொழி றொறுமயிறோகையை விரித்து
மின்னுகாஞ்சிபூண் சயமகளெனநட மேவும், (உகூ)

சோலைமென்மலர்த் தேறலுங்கன்னலைத் துகைக்கு
மாலைவாய்வருந் தேறலுங்கனியினின் றமைந்து
நாலுந்தேறலு நற்பழனப்பயிர் வளர்த்தே
வேலைவாய்நிறைத் தங்குளமீன்விருந் தாற்றும். (ஙo)

தாமரைத்திகழ் முத்தமுஞ்சங்கினெண் முத்துங்
காமருங்கழை முத்தமுமயிலனார் கடிந்த
தாமமுத்தமு மிரவிருள்சார்ந்திடா வண்ணஞ்
சேமவொண்மதி யெனத்திகழ்ந்தெங்கணுஞ் செறியும். (ஙக)

## குறிஞ்சி - வேறு

பருமயிலிவர்ந்து கிரியுடனசுரைப் பரிதிமுன்பனியெனத் தடிந்த, முருகவேளரசு புரிவதற்கிடமாய் மொழியுமன்னவன் படை வீட்டு, ளொருபடைவீடா யுமையவடாதைக் கொத்திடுஞ் சுற்றமாயொளிரும், பெருமையிற்சிறக்கு மலையமர்குறிஞ்சிப் பெற்றிமை யெற்றெனவிசைப்பாம். (ஙஉ)

தேக்ககிலாரங் குறிஞ்சியங்கசன்றன் செழுமலர்க்கணைகளி லொன்றை, யாக்குறுமசோக நாகமொண்காந்த ளடர்ந்துவான ளவியேமலரு, மூக்கமேயுயருங் கானவரதனூ டுலவியேகொலைத் திறம்புரியு, மாக்குலந்தடிந்து சீயத்தையெதிர்ந்து மானுடச்சீயத் தின்மலைவார். (ஙங)

கவையுறுகிளைகொள் சந்தனமுதலாங் கான்மலர்த்தருவெ
றிகுநரு, முவையறுபுலங்க ளுழுநருமாங்க ணெளிர்தருபன்மணி
கிளைந்து, குவையுறுத்துநரு மேனலைவனமுற் கொளும்பயன்விதை
கள்வித்துநரு, நவையறுதேற னீர்நிரப்புநரு நாடொறுங்களிப்
பினிற் றிகழ்வார். (௫௪)

ஏனலங்காவற் கொடிச்சியர்தங்க ளிசைமொழியெழில்விழிக்
கிகலே, யானபூங்குயிலஞ் சுகமயில்வாவு மரியமானிவற்றினைக்கவ
ணில், வானவிருடுக்க ளுதிர்ந்தெனவொளிகொண் மணிக்கலின்வீசி
யார்த்தடர்வார், மேனலிபகைவ ரடர்வரேல்வாளா விடுவரோவிய
னிலங்காப்போர். (௫௫)

ஒன்றுமாடியினிற் றேன்றுதம்முருவோ டுளைப்பதுபோற்றம
தொலிகொள், குன்றெதிர்கூவுங் கொடிச்சியர்நறுநீர்க் குறுஞ்சுனை
யாடிமென்மலர்க, டுன்றறற்கருமென் கூந்தலிற்சூடிச் சுவை
கொள்யாழ்செவ்வழிபயின்று, மன்றலம்பொழிலி னடமிடுங்கலப
மாமயிலெனவுலவுவரால். (௫௬)

செறிகுரலேன லறுத்ததனிடியுஞ் செழுங்கிழங்கவியுஞ்சே
ரீக்க,ளெறியடைத்தேனுங் கனிகளுநிறைத்தே யின்னிசைத்தொண்
டகமெழுப்பி, வெறிகொளாட்டயர்ந்து நெட்டிலைக்கதிர்கொள்
வேற்கரத்தெய்வதம்பரவிக், குறிபுகன்றிலகு வேன்மகற்பழிச்சுங்
குன்றவரொலிகடல்கொளுமால். (௫௭)

பாலை - வேறு

அன்பொடு வெறியாட்டி னன்னவர் நடமாட
லின்பமெ லாமுதவு மெழின்மலை நிலமருகாந்
துன்புறு பாலைவளஞ் சொல்லகி னைத்திடிலே
யென்பும்வெ தும்புமெனி லெங்ஙன மோதுவதே. (௫௮)

கன்னியெ னும்பெயரிற் கருதுபொ ருட்கிதுமா
றென்னவு ணர்ந்துவிறற் றேவர்க ளிழிவெய்த
முன்னடன் மகிடனுரம் பொடியமு டித்தரியூர்
மன்னருள் சயமகடன் விழவும லிந்திடுமால். (௫௯)

கற்பொலி திண்புயவெங் காளையர் களுமவர்கை
விற்பொலி நுதலெயின மெல்லியர் களும்விரவிப்
பொற்பு மலர்க்குரவும் புனைதரு பன்மலர்தூ
யற்பொடு பூசைபுரிந் தந்தரி யைப்பணிவார். (௪௦)

கொலைபுரி தருகோபங் குலவுகு றும்பர்களு
மலகில்வ றுங்குழியு மறலறு மாழ்கிணறு
முலைவில் குராமரமு மோமை யழிஞ்சில்களு
மிலகுமி ருப்பைகளு மிசைவுறு மெங்கணுமே. (௪௧)

பகையுறு துடியொலியும் பாலையின் யாழின்வருந்
தொகைபெறு பஞ்சுரமுந் தொலைவறு வெஞ்சமமும்
பகலிடை வருசூறைப் பவனமு முகண்முயலுந்
தகுமிய லறுகள்ளித் தருவும லர்ந்திடுமே. (௪௨)

இலகுறு வெம்பாலை யெழிறிரு மாலயில்பா
ருலகொடு போயவனுள் ளுடலைவெ துப்பியதா
னிலவுமு டற்கருகி நெய்ததி யுண்டுமழல்
குலைவில தாதலினாற் குளிர்கடல் புக்கனனால். (௪௩)

வெய்யது வையமதின் விள்ளவ தற்குநிக
ரெய்துவ தொன்றுமிலை யின்பமு டன்பழகி
யையமி லாதுகுறிப் பறிகுந ரொருவர்தமைக்
கையகல் வுற்றவர்தந் நெஞ்சுக டுத்திடுமால். (௪௪)

முல்லை - வேறு

இன்ன பாலை யிசைத்தன மீதன்றி
யன்ன வூர்தியை யம்புயத் தூந்தியின்
முன்ன மீன்ற முகுந்த னினிதமர்
துன்னு பூம்பொழின் முல்லையைச் சொல்லுவாம் (௪௫)

கொன்றை பூவை குருந்தம் பிடவநன்
மன்றற் பூம்பொழில் வானம ளாவுத
லன்றோர் காவை யரிகவர் வெம்பகை
சென்றி டற்கங்கு சேர்த னிகர்க்குமால். (௪௬)

முல்லை வேய்ங்குழ லூதிமுன் னுயர்தம்
மெல்லி யார்தமை மேவிய மாயனைச்
சொல்லி யாங்கவர் தோகைய ரின்பமா
மல்லன் மேவும் விழவின் வணங்குவார். (சஎ)

சேவி னங்க டழுவித் திருந்திடைப்
பாவை யார்தழு வப்பயில் கோவல
ராவி னங்குழற் பண்ணி லழைப்பரக்
காவி மெய்ம்மலர்க் கண்ண னிகர்ப்பவே. (சஅ)

சாமை யும்பன் முதிரையுஞ் சால்புடைத்
தேம லிந்த விளைவுகள் செய்குவார்
தாம மென்குழ லாரைத் தழுவியே
காமர் சோலை மருவுவர் காதலார். (சகூ)

முதிரை மேய்வன சேவல்கள் மொய்யொலி
வெதிரி னுயர் விளக்கு மிசையொலி
யதிரு முன்கை வளையொலி யாய்ச்சியர்
ததிம திப்பொலி யோடுந் தழைக்குமே. (ருo)

வேறு

பூவைமேனிவர் தோங்கியேபொலியும்விண் மதியைத்
தாவிவெண்ணெயை யுறியிடைக்கவர்ந்திடத் தாவுந்
தேவையொப்பன வன்னவற்கருடரச் சிவனுர்
மேவிநிற்பன வொத்தனகொன்றையாம்விருக்கம். (ருக)

குருந்தினற்சினை மேவுகாயாவெழிற் கோல
மருந்தடுத்தமென் மொழியுளவிடைச்சியர் வனைந்த
வருந்துகிற்கரங் கொடுகிளைதனையணைத் தேறுந்
திருந்துமாயனை யொத்திடத்திகழ்ந்தது முல்லை. (ருஉ)

கானயாற்றிடை யாடுபுகழுமிய குரவை
யானவின்னிசைப் பண்களாற்பாடுமாய்ச் சியர்கள்
பானலம்பெறு மின்சொலாற்பாறயிர் பகரு
மேன்மையேதழைத் தோங்குபுவிளங்குமான் முல்லை. (ருங)

## நெய்தல் - வேறு

மைதவழ்திரையார் கலியினார்கலியும் வால்வளைகுமுறிசைத் தொனியும், பொய்திகழ்மருங்குற் பரத்தியர்புலம்பர் வருணனைப் போற்றுறும்விழவி, னெய்துறும்விளரிச் செவ்வழிப்பண்ணு மினிய வாக்குழுமுமித்தகையா, னெய்தலின்வளங்க ளளப்பிலவவற்றி னிலைமையை நிகழ்த்துவதெவனே. (ருச)

கடற்கருகுயர்பூம் புன்னைநீண்ஞாழற் கான்மலர்நீழலிற்சுறவி, னடற்பருமென்பை நாட்டுபுநெய்த லலரைமென்புன்னையைக்கைதை, மடற்கமழ்மலரை யணிந்துமீனடிசில் வைத்திடவருணனுங்கமையத், தொடற்கிசையாழ்செவ் வழியிசைத்தளவர் தொழவருள் வளநனிதொகுமால். (ருரு)

கண்டகக்கைதைப் பொதும்பருஞாழற் கானமும்புன்னையங்காடுங், கண்டலம்புதரு முண்டகத்திரளுங் கலந்துறுவரஞ்செறி நெய்த, றிண்டிறலளவர் வலைகொடுவீசிச் சிக்குமீன்குழுவினைக்கரையிற், கொண்டுவந்துகுப்ப வளத்தியருணக்குங் கொள்கையிற் புட்களோச்சுவரால். (ருசு)

கயலினைக்கவர வருபறவைகள்பூங் கடிதடநுளைச்சியர்கண்ணைப், பயமுறுமிருபத் திரமெனவெருவிப் படில்வருமுபத்திரமென்னு, நயமுறுமுடலைப் பத்திரநாடி நற்சிறைப் பத்திரம் விதிர்த்துப், பயின்மயிலனையார் கரமெடாதுறவும் பறப்பனநெய்தலம் பாக்கம். (ருஎ)

விளரியாழ்வருடிச் செவ்வழிப்பண்ணை விளம்பிடுமுழக்கமுமுப்பை, யளவர்களளக்கு மொலியுநன்னுவா யதிர்குரற்கோட்பறையார்ப்புந், தெளிதருமுவர்நீர்க் கேணியிற்பரதர் சேயிழையவர்குடைகலிப்பு, மொளியிடுந்தரளங் குளிப்பவர்தெழிப்பு முறுகடற்றுழனியி னொலிக்கும். (ருஅ)

துங்கவின்றமிழ்ச்சா கரப்பலதுறைநூற் சொற்பொருளுளநிறைத்தியற்றுந், தங்கணூல்செறிக்கும் புலவர்போற்பொருள்கடண்கடற்றுறைதொறுநிறைத்து, வங்கம்வந்துரிய துறையினிற்சொரிந்தும் வைகுதலின்றியேயுலவு, மிங்கவாப் பொருளையீட்டுநர்வாளா விருப்பரோபகலு மெல்லியுமே. (ருகூ)

## திணைமயக்கம் - வேறு

பழுத்தநீள்சினைப் பலவுபோய்வேங்கையிற் படரத்
தழைத்தவேடுவச் சிறுமகாரதன்கனி தடிவ
ரிழைத்ததீங்கினைப் பொறுமினென்றதன்விலைப் பொன்னீ
விழுப்பமாகநற் கணிமலர்த்தூவிடும் விருப்பால். (சு0)

ஐவனங்களுந் தோரையுமேனலு மணியா
ரையநுண்ணிடைக் கொடிச்சியரளந்திட வளவத்
தையலார்களொண் டரளநற்பவளந்தந் திடவே
யுய்யுமாறுகொண் டன்னவரிடங்களி லுய்ப்பார். (சுக)

சோகஞ்செய்யும சோகப்பூவரன்மிசை தொடுத்த
வேகவேள்கணை போன்மெனக்கொன்றைமேல் வீழ்ந்தவ்
வேகனுற்கணை யெரிந்தபோற்கரிந்துகீ ழிறைத
லாகியாவதை நகைப்பதையொக்குமென் முல்லை. (சுஉ)

கமுகிளங்கதிர் முத்தமுங்கடலலை யொதுக்கு
முமிழ்சுடர்ப்பொலி முத்தமுஞ்சேர்வுழி யுறையு
மமதைமீக்கொளுங் கம்புளக்கழியிடை வாவி
நிமிர்சுருவினைக் கொத்துமால்சமயநேர் தரவே. (சு௩)

தடத்தினின்றெழும் வாளையங்கமுகினைச் சாடிக்
கடத்திற்கானயாற் றிடைக்குதித்துழக்கவக் கான்யாற்
றிடத்தினின்றுக ளிளவராலிருமலைச் சுனைவீழ்ந்
தடுத்தமீனின மனைத்தையுங்கலக்கிய தம்மா. (சு௪)

## வேறு

வேங்கை யின்னிழன் மேதி யுறங்குவ
தேங்கு சோலையிற் சேர்ந்திடும் வேங்கைக
ளீங்கு நானிலத் தின்னிடஞ் சற்றுப்பெற்
றோங்கு றுங்குறும் பொத்தன பாலையே. (சுரு)

இன்ன வைந்திணை யின்வள மெய்தியே
மன்னு மித்தொண்டை நாட்டிற்கு வானவர்க்
கன்னங் கிட்டுறு வந்தர மாகிய
பொன்னி னாட்டைப் பொருவென லாகுமோ. (சுசு)

## நீதி

வான மல்குவ மான்மத னைம்மலர்க்
கான மல்குவ கண்ணிய மோங்குநற்
றூன மல்குவ சார்வரும் வீடருண்
ஞான மல்குவ நாளுமந் நாட்டினே. (சுஎ)

ஏட்டி னுள்ளன வெண்ணத்தி னுள்ளன
வீட்டி னுள்ளன வேதத்தி னுள்ளன
காட்டி னுள்ளன கண்ணன வித்தொண்டை
நாட்டி னுள்ளன நாடரு நீதியே. (சுஅ)

காலை யாதிசற் கன்மப் பயிற்சியே
மாலை யாதிமென் மாதர் முயக்கமே
சாலை யாவுநற் றன்ம முயற்சியே
மேலை வானினு மிக்கவிந் நாட்டினே. (சுகூ)

வள்ளி தழ்ச்செம் மலரிற் றடங்களிற்
கள்ள மல்லது கள்ளமற் றில்லிதழ்
விள்ளு மௌவனன் மெல்லியர் நுண்ணிடை
கொள்ள லாகுங் கொடியன நாடெலாம். (எ0)

தலமெ லாம்புகழ் சாற்றுமந் நாட்டிற்பா
சிலைகு லாந்தரு வேய்ந்த கொடித்திர
ளலகி லாப்புத லன்னவை காய்கனிக்
குலைய தன்றிக் குலைபிறி தில்லையே. (எக)

வேறு

நிழலுலாம்பொழி லத்தொண்டைநாட்டினிற் றெய்வ
விழவியக்கலி மென்மலர்க்கோதைமெல் லியலார்
மழவிடைக்குநேர் குமரர்கண்மணத்தினுக் கியம்பு
முழவியக்கலி யல்லதேலாகலி மொழியின். (எஉ)

இழுக்க மில்புக ழத்தொண்டைநாட்டினல் லெழிலார்
முழுக்கு பூண்முலைக் கலவையின்சேற்றினும் மதத்த
பழுக்கு லைப்பனைக் கைக்கரிமறுகிடைப் பயின்ற
வழுக்க லின்றிச்சொல் வழுக்கலின்றாகுமாக் கட்டே. (எங)

வேறு

திருவளர் தொண்டையென்னத் திகழ்ந்திடு நாட்டின்சீரை
யொருவித முரைத்தசூத ஞெளிவிடு மயில்வேலேந்திக்
கரிமகள் வள்ளியென்னுங் கன்னிய ருடனேயெங்கண்
முருகன்வாழ் மயிலைக்குன்ற முதுநக ரறைதலுற்றான். (எச)

நாட்டுச்சிறப்பு முற்றிற்று

ஆகதிருவிருத்தம், ககரு.

## நகரச்சிறப்பு

முருகெலாமொரு வடிவெனத்திரண்டெழு முருகனைக்கிளி மஞ்ஞை, யருகெலாஞ்செறிந் திளந்தினையருந்திடு மடுக்கலின் மாச்செந்தேன், பருகலாமெனப் பரிந்திடுமரிவையின் பதமலர் பணிவானை, யுருகலாமுளத் தொடும்பணிந்தவர்பதத் துய்யலாம் பவந்தீர்ந்தே. (க)

நாடெலாம்புகழ் தொண்டைநாடெனச்சொலு நன்மகண் முகமேபோ, லீடிலாதநல் லழகுபெற்றிலங்கிவே ளிலங்குதன் மனைமாரைத், தேடலாம்படி யுறுமயின்மலைகொளுந் திருநகர்ப் பெருஞ்சீர்யாம், பாடலாம்படி துணிந்தனமவனிரு பதமலர் முடிவைத்தே. (உ)

மதில் - வேறு

அளவுகொண்டகன்ற புவியையுள்ளடக்கி யடற்படையுயர் பொறியமைந்து, வளமொடுநூலி னெழுகலானுயர்ந்து மணி யொளிதிகழ்தலாற்பகையைத், தளைபடுப்பதனாற் பல்படைபயிலுந் தன்மையாற்சூக்குமத்தகையாற், களைகணுமரசர் நிகர்க்குமான் மயிலைக் கன்னகர்ச்சூழ்திருமதிலே. (ந.)

உயர்வினன்மாலாய் முகங்கணான்கதனு லோதிமத்தலைவனு யுன்னும், வயங்கொள்வெள்வடிவான் மதிதவழ்தலினுன் மாதொரு பாதனுய்வானிற், புயலினமூருந் தகையிலிந்திரனுய்ப் பொன்னகர்

கடந்துகோளகைபோய், மயன்முதலியபேரியாவருமயங்க வதிருவ தந்நகர்மதிலே. (௪)

## அகழி

அம்மதிற்புறஞ்சூழ்ந் தகலிரும்புவியி னாழமதளந்தறிந்திட வுஞ், செம்மணிச்சுடிகைச் சேடனிம்மயிலேத் திருநகருறைதருமாந் தர், தம்மையொப்பவனே வல்லனேகல்வித் தகைமையாலென மதித்திடவும், பொம்மலோடேகுந் தன்மையினாழ்ந்து பொருவற விளங்கின தகழி. (௫)

நீறிடாரைந்தக் கரத்தையுச்சரியார் நிமலனைப்பணிந்திடார் பவநீத், தேறினும்வீழ்ந்தோ ரேறிடாவகையாழ்ந் தெழிற்சிறை யனக்குழாம்வளைகள், கூறுமீன்குலங்க ளிடங்கர்நீர்முடுவல் குரண் டமின்னனபலகுழுமி, நாறுமாமலர்க ளளப்பிலமலர்ந்து நறைதர விளங்குமக்கிடங்கே. (௬)

## வீதி - வேறு

வாகை யுற்றிடு மறைபயின்மடமுயர் தந்து
பாகமார்மடம் புராணமாகமம்பகர் மடமே
மாகநச்சிய பதிகநல்லிசைவளர் மடமி
யோகர்ஞானிக ளுறைகின்றமடம்பல வுளவால், (௭)

ஆதிசைவரா மந்தணர்வீதியு மலரோன்
நீதிலாமுகம் வருமறைவேதியர் தெருவு
நீதியாயுல காடருநிருபர்தம் மறுகு
மேதமற்றநற் பொருள்பெறும்வணிகர்தம் மிருப்பும். (௮)

அடுத்துளோர்கிரப் படுத்திடாவகையரு நிதியங்
கொடுத்தலன்றியெவ் வுயிர்கட்கும்பசிகொடா ராகி
விடுத்திடாப்புகழ் மேவுவேளாளரு மவர்பா
லுடுத்தவேவன்மாந் தருமுறைதெருக்களு மொளிரும். (௯)

## வேறு

தெள்ளு சாந்திற் றிகழ்மணி மாடங்கள்
வள்ளி யானையை மைந்தன் மணப்பதை
யுள்ளி யீசன் வரப்பல் லுருக்கொடு
வெள்ளி மால்வரை வந்தெண மேவுமால். (௧0)

மாட மேவு மணிக்கொடி பத்தியிற்
கூடி வானிற் குலவுதல் வான்மக
ளாடி யாதவற் காநந்த நண்ணுற
நீடு சாமரை யாட்ட னிகர்க்குமால். (௧௧)

வென்றிப் போரின் விளங்கரி யேறனார்
துன்று பூங்குழற் றோகைநல் லாரைநன்
மன்ற லன்பின் மருவுறு மாடங்கண்
முன்றி றோறு முரச முழங்குமால். (௧௨)

துகிலி னார்கொடி தோன்றிய மாடமே
லகிலின் றாம மளாவிய நாப்பணி
னகில்சு மந்த நகைமுக வல்லியர்
முகிலி னூடொளிர் மின்னென மொய்ப்பரால். (௧௩)

மாட மாளிகை மீது மடநல்லா
ராடு கின்ற சிலம்பொலி யண்டரூர்
கூடி யங்கு நடித்திடுங் கோதையர்
வாடி நிற்க மயக்கம் விளைக்குமால். (௧௪)

மயிலி யற்றிரு மாதர் மதனனார்
செயிரின் மேனிலத் திற்செய் கலவிகள்
பயிலுங் காலைப் பரிந்து கழிந்தெறி
வெயின்ம ணிப்பணி மின்னென வீழுமே. (௧௫)

சந்த னந்திமி ருந்தட மார்பிடை
முந்த னங்கன் விடுங்கணை மோதிட
வந்த னங்களின் வேதொற்ற வாடவர்
வந்த னங்கள் புரிவரின் மாதரை. (௧௬)

தத்தை நாயகர் பேசுசை யோகவா
தத்தை யோதவுந் தையலர் கேட்டொளிர்
முத்தை யொப்ப முறுவல் புரிந்துவாய்
முத்தை யீய முகத்தி லணைப்பரால். (௧௭)

கோட்டு வாரணக் கொங்கையு மோரிரு
கோட்டு வாரண மும்மதங் கொள்வன

கோட்டு வாரணக் கோமத ஞர்தநக்
கோட்டு வாரணங் கூவு மளவுமே. (கஅ)

வேறு

காருலாவுபொற் கந்தவெற்போடுநற் கனக
மேருவாதிய வந்தறுமுகப்பிரான் மேவி
யாருமித்தலத் தமர்தல்போற்பொன்மணி யமைந்த
தேரு யர்ந்துநீள் கோடகஞ்செறிவன திகழ்ந்தே. (கசு)

ஐங்கரத்தனெம் முருவினிற்சிறிதுபெற் றன்றோ
துங்கமூவுல குந்தொழத்துலங்கின னென்று
லெங்கண்மேன்மையை யிசைக்குநருளர்கொலோ வென்னத்
தங்குமால்களி றளப்பிலதருக்கொடு வயங்கும். (உ0)

அரியரீமுதற் பல்வகைப்பிறவியி லாழ்ந்தும்
பெருமை யின்றெனவெம்முரு வெடுத்தபின் பிறவான்
றெரியி னியாங்களே யுயர்வெனமிமிர்ந்துதிண் டிறல்சேர்
பரியி னந்தெரு விடையிறுமாப்பொடும் பயில்வ. (உக)

கடைவீதி

மணிபொன்பீதவத் திரம்வளையாழிமல் குதலாற்
பணிபணம்பொருந் துதலினுற்படியளப் பதனு
லணிகொணீட்சியா லிசையினுலியாரும்வந் துறலாற்
கணிகொளாவணஞ் செந்திருமாலெனக் கவினும். (உஉ)

சந்தனத்தைமென் கலவையின்சாந்தினைக் கொண்டு
வந்தனத்தைநேர் நடையினர்பகர்ந்திட வைப்பக்
கந்தனத்தைநேர் மெல்லியர்வாங்கித்தங் கணவர்
தந்தனத்தைநா டாதுமேற்பூசுவர் தழைப்ப. (உங)

நகையைநாசியைக் கண்களைவாயைநன் முலையைப்
பகைசெய்முல்லைசண் பகநெய்தலாம்பல்பங் கயத்தின்
றொகையைக்கைப்பிடி யாக்கட்டித்தூக்கினர் பகரச்
சிகைமென்காட்டினிற் கொண்டுபோயிடுவர்வாழ் செல்வர்.

## தாசிவீதி

மனம்பொருந்தினும் வாலிபம்பொருந்தினு மதிக்குங்
கனம்பொருந்தினுங் கல்வியைப்பொருந்தினுங் கருதார்
தனம்பொருந்தினர் தந்தனம்பொருந்துறத் தருவார்
வனம்பொருந்துறுங் கணிகையருறைதெரு வயங்கும். (உரு)

அற்பினோடுவந் தரசருமிருநிதி யளித்தெம்
நற்பதம்பணிந் திடச்சுகமருளுவ நாடிற்
கற்புமாதருக் கெவன்சிறப்பியாங்களே கடவுட்
பொற்புமாதரென் றுலவுவர்பொதுமட வியரே. (உசா)

## நீதி - வேறு

பால னங்கம் பருத்திடத் தாயரன்
பால னங்கள் பரிந்தினி தூட்டுவார்
பால னஞ்செயும் பண்புறு நந்தகோ
பால னம்மரு கன்பணி செய்யினே. (உஎ)

ஆர ணங்களை யந்தண ரோதுவா
ரார ணங்கன ரன்னம் வழங்குவா
ரார ணங்கு சடையவ னீறணி
யார ணங்குறு வாரென் றறைவரே. (உஅ)

## வேறு

பேறெனப்பெறும் பொருளெலாம்பெற்றிமை யாக
வீறியேயிருக் கின்றனநம்பரன் விரும்பு
நீறிலாததோர் முகமுமஞ்சிமலனு றெழுத்தைக்
கூறிடாததோர் வாயுமங்கில்லையால் குறிக்கின். (உகூ)

கல்வியாலுய ரனந்தனைக்கீழுறக் கண்டா
ரொல்லுமெய்யுரு வான்மதனுருவினை யொழித்தார்
செல்வமேன்மையாற் றனதனைக்குருடனுச் செய்தார்
மல்லன்மேவுசீர் மயிலையங்கிரிநகர் மாந்தர். (௩0)

தந்தைதாய்மொழி தவறிடாத்தகைமையும் பெரியோர்
வந்துநாடிடும் பொருள்பலவழங்கிடு மனமுங்

தந்தநாயகர்த் தேவெனமகிழ்விர தமுமே
சொந்தமாய்மதித் திருப்பர்வாழ்கற்பகத் தூயோர். (ருக)

அறத்தினன்னெறி யில்லறமாற்றுவ தறமே
புறத்தினன்னெறி போயுறும்பொருளேவ னென்னு
வறுத்திடும்படி மேலவரோதிய மநுநான்
மறுத்திடாதவர் வாழ்க்கையேவிளங்குமந் நகரில். (ருஉ)

தவமுஞானமு மெய்ம்மையும்பொறுமையுந் தயையுஞ்
சிவன்பதாம்புயந் திகழ்தருஞ்சிந்தையுஞ் சிறப்ப
வவமெனப்படு மவற்றையும்பரிகரித் தமர்வா
ருவமையன்னவர்க் கெவரையாமுரைத்திடு வோமால். (ருரு)

வேறு

பூகமா மரங்களெங்கும் போர்மதன் சுரங்களெங்கும்
யாகசா லைகளேயெங்கும் யவனலீ லைகளேயெங்கும்
யோகியர் வாசமெங்கு முத்தமர் நேசமெங்குங்
கோகிலத் தொனியேயெங்குங் கொத்தெழிற் கனியேயெங்கும்.

மறையவர் நடையேயெங்கும் வள்ளியோர் கொடையேயெங்குங்
கறையறு மதியேயெங்குங் கணக்கறு நிதியேயெங்கு
நிறைபுனற் றடமேயெங்கு நிலவன மடமேயெங்கு
மறைதமிழ்ப் பண்ணேயெங்கு மருள்பெறு கண்ணேயெங்கும். ()

வாரண மாவேயெங்கு மணமுறு காவேயெங்குந்
தோரண நிரையேயெங்குந் தூயவ ருரையேயெங்குந்
தாரண வொளியேயெங்குஞ் சகலர்க்கு மளியேயெங்கும்
பூரண மனதேயெங்கும் புலவர்க ளனதேயெங்கும். (ருசு)

அடியவ ருருவேயெங்கு மாறெழுத் தருவேயெங்கு
மிடிதொலைப் பவரேயெங்கும் வினையலைப் பவரே யெங்குங்
கடிமலர்த் தாரே யெங்குங் கனமுடை யோரேயெங்கும்
படிதொழு மயிலைக்குன்றப் பதிதனில் விளங்குமன்னே. (ருஎ)

வேறு

பேறெலாம்பெற வடைந்தவர் தமக்கருள் பெம்மா
ஞறுமாமுகப் பரனுயர்சித்தனே டமர்ந்த
மாறிலாவள மயின்மலைநகரின்மாண் பனைத்துங்
கூறலாவதோ வொருவரோர்நாவினைக் கொண்டே. (௩அ)

நகரச்சிறப்பு முற்றிற்று

ஆ திருவிருத்தம்; கடுங.

---

முதலாவது

## திருக்கைலாயச் சருக்கம்

---

மாதாவெனுஞ்சொற் கிணங்கநிதம் வழுத்திப்பணியும் வகை
யறியாத், தீதார்சிறியர் தமக்குமளி செய்புமுமையா டருபுதல்வா,
போதாதிகிரிப் படைக்கரப்பைம் புயன்மேனியனுண் மகிழ்மருகா,
நாதாசிகரித் தேவாவென் னவைதீர்த்தருள்வ துன்பரமே., (க)

வேறு

பொன்மயூரச் சயிலப் புரிவளஞ்
சொன்ன மாமறைச் சூதனை நோக்குபு
மன்னு நைமிச மாவன மாதவ
ருன்னியுள்ள முவந்துரைப் பாரரோ. (உ)

கங்கை வந்தநங் கந்தன் கணத்துயர்
சங்கு கன்னன்சூர்ச் சாய்த்தன னென்னவே
துங்க மாதவ நீமுனஞ் சொற்றதை
யெங்கண் முன்விரித் தோதுதி யென்றனர். (௩)

இன்ன ணம்பக ரந்தண ரின்புறச்
சொன்ன லம்புணர் சூத முனிவரன்
மன்னு மாதவர் கேண்மினென் றேமகிழ்ந்
தன்ன வண்ண மறையலுற் றனரோ. (௪)

நல்ல செய்யற மேமுத னன்கையு
மொல்லை மெய்யடி யார்க்கரு ளோர்முதல்
வல்லி வள்ளிதெய் வானை மணாளன்றன்
செல்வ மெய்க்கதை செப்பற் கெளியதோ. (ரு)

மாயி ரும்புவி வானம் வரியராத்
தோயு றுந்தல முற்றுந் தொழுதிடுஞ்
சேய ருங்கதை செப்புதற் கோர்பதி
னாயி ரம்பரு வத்தினு மாவதோ. (சு)

திலக வாணுதற் றேமொழி யீர்ங்குழற்
கலக வாள்விழி வள்ளிதன் காதல
னிலகு காதை யியன்றள வோதுவ
னுலகெ லாமுய்ய வுன்னு முனிவரீர். (எ)

முன்ன மேவு முதல்யுகந் தன்னிலே
பன்னு மிக்கடற் பாருளெத் திக்கினுங்
கன்னி பாகக் கடவுண் மறைமுதன்
மன்னு மாகம மாண்பு மறைந்தன. (அ)

இல்ல றத்தி னெறியு மியாகமுஞ்
சொல்ல ருந்துற வின்றவத் தூய்மையு
மல்ல லாருமெண் ணான்கெனு மாண்புடை
நல்ல றங்களு மோய்ந்து நலிந்தவே. (கூ)

வீறு கொண்டுபல் வெஞ்சம யப்புட்கள்
கூறு கொண்டிசை வப்பயிர்க் கோதிட
வாறு கொண்டவி ருஞ்சடை யண்ணறன்
னீறு கொண்டணி யுந்நெறி நீங்கிற்றே. (க0)

முந்தெ ழிற்றிரு மாலுந்தி முண்டகன்
வந்தெ ழுப்புமிம் மாநில மாந்தர்க
ணந்தெ ழுத்தை நவின்றன ராகியோ
ரைந்தெ ழுத்தை யறைமதி யற்றனர். (கக)

இத்தி றங்க ளனைத்தையு மெண்ணுறீஇச்
சித்தர் மாதவர் சேர்ந்தன ரோருழை
யத்த னுக்குரைப் பாமென் றகத்திடை
வைத்த காதல் வழாதுசென் றாரரோ. (கஉ)

வேறு

துள்ளிச்சிலம்பார் மலரடியைத் தூக்கியைம்பான் ஞெழி
னிகழ, வுள்ளிச்சிலம்ப நிருத்தமிடு மொருத்தனுமையாட் கொரு
பாகன், றெள்ளிச்சிலம்பா றணிசடிலன் றிருந்துந்தளியாக் கொண்
டருளும், வெள்ளிச்சிலம்பி னடியடைந்தார் வேதஞ்சிலம்பு நாவு
டையார். (கங)

அந்திமதிச்செவ் வான்சடிலத் தமலன்பொற்று ளணியுமுடிப்
பந்தியுரிஞ்சுஞ் சேவடியான் பரவுகயிலைக் கொருகாவ
னந்தியடிகளடிபரவி நன்குபழிச்ச வவ்விறைவன்
சிந்தைசெய்துய்த் திடவீசன் றிருமுன்றவத்தர் சென்றனரால். ()

வேறு

ஒருகோலங்காணுதற்கொண் ணுதிலகுமலர்த்தாள ஞெப்
பீறில்லா, னிருகோலங்கொண்டதிரு மேனியினன்முங்கோல
னிசைநாற்கோலன், வருகோலைந்துளனடலை யாகவழல்கோவையு
ளான் மனத்துட்கொள்வோர், திருகோலமிடத்திருவோ லக்கத்
தினிருந்தபர சிவத்தைக்கண்டார். (கரு)

கண்டவுடன்புளகமெய்தி யுடல்பனிப்பவுளமுருகிக் கண்ணீர்
வாரக், கொண்டதிருக்கரஞ்சிரத்திற் கூப்பியரகரவென்னக் கூறு
மோதை, தெண்டிரைநீரொலிகடுப்ப வைந்தினுமெட்டினும்வணங்
கிச் சிவாநந்தத்தே, னுண்டதகங்கொளத்தேக்கி மேல்வழித
லெனத்துதிக ளோதலுற்றார். (கசு)

கருங்குவளைநிகர்மிடற்றெங் கண்ணுதலேமுத்தலைவேல்கனன்
மான்கையா, மருங்குவளைந்திடநிமிர்ந்த முலைமலைமாதணிகட
வுண் மணியேசூலா, னெருங்குவளைக்குலமுரனும் பண்ணைதிகழ்
தில்லைமன்றி னிருத்தஞ்செய்வோ, யொருங்குவளைத்தடியரிடர்
முக்குறும்பைக்கடிந்தருளு மும்பரேறே. (கஎ)

மாலயனிந்திரன்முதலாங் கடவுளர்வந்தடிவணங்கி வாழ்த்து மூவா, மூலமுதலாம்பொருளே முனிவருளத்தகலாத மூர்த்தியே நின், சீலமுணர்ந்தித்துணையென் றியாவர்வழுத்துவர்வெள்ளிச் சிலம்பின்மேவும், பாலவிலோசனவரவா பரணசிவசங்கரவெம் பரமபோற்றி. (கஅ)

அன்பருளத்திடையகலா தாநந்தச்சுவைசுரக்கு மமுதே யென்று, மின்புருவமாயிலகுந் தவமேயத்தவமதனு லெய்தும் பேறே, பொன்புணர்மான்முதலமரர்க் காய்ந்திரவியெயிறுகுத்த போரில்வல்லோய், நின்பெருமைசொலற்கெளிதோ பொன்மலை வில்லேந்துதிண்டோ ணிமலாபோற்றி. (கக)

என்றுபலவாறுதுதித் தேத்திநின்றமுனிவரரை யினிதி னேக்கி, நன்றுமதுதுதிவியந்தா மெவன்குறையுற்றீங்கடைந்தீர் நம்முன்னீவி, ரொன்றுதுயர்தமையுரைமி னெனக்கனிவாய்மலர்ந் தனனு லுமையாளோடும், பொன்றிணிமாமணித்தவிசி னமர்ந்திலகுங்கைலைமலைப் புத்தேளன்றே. (உ0)

இத்திருவாக்களித்தவுட னிறைஞ்சிமலர்க்கரங்கூப்பி யெந்தை யேநின்,சத்தியவாகமவேத சாத்திரங்கள்பாடழிந்து தரணிதன்னி, லெத்திசையும்விளக்கமிலா திருத்தலினுலவைதுலக்கமெய்தாநிற்ப, நித்தநினதடியடைந்தே மெமக்கிரங்கியருள்புரிக நிமலவென்றார்.()

அவ்வாறேயருள்புரிந்தா னும்மிருப்பிலேகுமென வமலன் கூறச், செவ்வாய்வெண்ணகைபாகற் றெழுதுவிடைகொண்டகன்ற செய்தவத்தோ, ரிவ்வாறுநலம்பெறுதற் கெத்தவஞ்செய்தனமோ வென் றிறும்பூதெய்தித், தெவ்வாயபலசமயங் கெடுஞ்சமயம் பார்த்திருந்தார் சிந்தித்தாராய். (உஉ)

வேறு

இவ்வணமேகிய பின்னரெமண்ணலி னெண்ணத்தா
னவ்வணமேசிற் சிலபகல்கழிதர வாங்கோர்நாட்
கொவ்வையிளங்கனி வாயிமயந்தரு கொம்பன்னு
ளெவ்வமிறண்புன லாடவுளத்திடை யெண்ணுற்றாள். (உங)

வானவர்விஞ்சையர் கேசரர்சித்தர்கள் வரியாழின்
கானவர் தும்புரு நாரதரந்தணர் களுமேவத்
தானுயரும்பத மேயருள்கைலைச் சைலத்தின்
மேனிலவோரிடை மேவினளுலகை விரித்தாளே. (உச)

வேறு

அவ்விடைக் கற்பக மகிலஞ் சந்தன
மெவ்வமில் சண்பக மாதி யீர்ம்பொழில்
செவ்வையி னமைவுற நடுவண் டம்புனற்
றிவ்விய தடமொன்று சிருட்டித் தாளரோ. (உரு)

சந்திர காந்தத்தின் படிகள் சார்ந்தொளி
ரிந்திர நீலத்தின் கரைக ளேய்ந்ததிற்
செந்துகிர் விளிம்புகட் சேர்ந்த தாமொரு
சுந்தரத் தடத்தெழில் சொல்லற் பாலதோ. (உசா)

தேம்படு பாசிலைச் செய்ய தாமரை
யாம்பலங் குவளைக ளரிய நீலங்கண்
மேம்படு வலம்புரிச் சங்கம் வெண்மதி
சாம்பொளி முத்தமத் தடம லர்ந்தவே. (உஎ)

கோகில மினியதே மாவிற் கூவுத
லேகநா யகன்கணு லேய்ந்த துன்பினை
யோகையோ டுறுமுமைக் குரைத்து மாரவுன்
ணுகம தடைதியென் றழைத்தல் போலுமால். (உஅ)

அத்தனி மதுமலர்ப் பொழிலி னுய்மயில்
சித்திரத் தூவியஞ் சிறைவி ரித்தொளிர்
முத்தரிச் சிலம்படி பெயர்க்கு மோகனக்
கொத்தெழின் மாதர்போ னடங்கு னிக்குமால். (உகூ)

ஆழ்தரு தீம்புன னிரம்பி யாய்மணிக்
காழ்தரு தடந்திகழ் கடிமென் காவினைச்
சூழ்தரு பொன்மதி னிலவித் தூமணிப்
பாழிமால் வாயிலோர் பாங்கர் மேவுமால். (௩௦)

வேறு

இன்ன பொற்பின் றடத்தை யிமைப்பதன்
முன்ன மன்னை முடித்தன ளிச்செய
லுன்னுங் கால்வியப் பீதன் றுலகெலாந்
தன்னு ணின்றோர் கணத்தினிற் றந்ததால். (௩௧)

ஆய பூம்பொற் றடத்தினி லாய்மணி
வாயில் காப்பச் சிவகண மன்னிறை
மேய சீர்ச்சங்கு கன்னனு மேன்மையார்
தூய வன்றனை யேவினள் சொல்லுவாள். (௩௨)

வைத்த காவல் வழாவகை யாம்புன
லித்த டத்தினின் றேகு மளவிவ
ணெத்தி றத்தகை யோர்களு மெய்தற
வுய்த்தி டாதுறை யீங்கென வோதினள். (௩௩)

ஓத வாயிற் புறத்தினி லுற்றன
னாத னல்லுருப் பங்கிடு நங்கைதான்
வேதன் மாயவன் விண்ணவர் தந்தகை
மாதர் சூழத் தடத்தினில் வந்தனள். (௩௪)

வேறு

குன்றா வெழிலே கொளும்வா வியிடைச்
சென்றா டினளஞ் சீரா ருமையாள்
பொன்றாழ் திதலைப் புணர்பொம் மன்முலைத்
துன்றே ரிடையார் துணைசூழ் தரவே. (௩௫)

தெருளே பெறுசித் தர்கடேர் வருமெய்ப்
பொருளா டநலந் தருபொற் பாழி
சுருளார் திரைதூய் புனலா டுதறன்
னருளா ழியிதா மெனலா குமரோ. (௩௬)

திருமங் கைதிகழ்ந் தொளிர்வெண் கமலத்
தருமங் கைமருங் குறவாய் மயிலேர்
வருமங் கிலனங் களுள்வா வுதல்போ
லொருமங் கையுலா யினணீ ரினுளே. (௩௭)

உழுதா டியரிக் கணமொண் கமலக்
குழுமா மலர்மென் மதுகூட் டுணுமச்
செழுநீர் குழறா வினடம் பிறவி
யெழுதா வகையின் னருடூ வனேயே. (௩௮)

தன்னு யகனோர் பெறுதார்ச் சடைமேற்
பன்னு ளினும்வாழ் பாகீ ரதிபே
றென்னு மெனவே யிருதா ளின்மிதித்
தன்னீ ரிடையா டினளா ரணியே. (௩௯)

பாரார் தருபல் லுயிரண் டமெலாஞ்
சீரா யருளுஞ் சிவசங் கரியா
நாரா யணிநா யகியத் தடநன்
னீரா டினணீ டருமன் பினளாய். (௪௦)

வேறு

அறத்தலைவியச்சிலம்பி னமைத்தமலர்த்தடத்தில்விளை யாடுங் காலைக், கறுத்தமணிக்களத்தனந்த வரைச்சாரலெறுநேடிக் கவனங்கூர்ந்தங், குறத்தனித்துவிளங்கியதோர் வாவியைக்கண்டதிசயித்துள் ளுவகைபொங்கி, வெறுக்கையொளியெனத்துலங்கும் வியன்றடமிங்கேதுபுதி தென்னவெண்ணி. (௪௧)

ஆவியெலாம்படைத்தளிக்கு மமலனங்குமேவும்போ தம்மை முன்னம், வாவிமருங்கியாரேனும் வாராமற்காத்தியென வகுத்த மாற்றங், காவல்கொடங்கிருந்தசங்கு கன்னனுலகெங்கணுமே கலந்துநின்ற, தேவனுக்குமோவன்றென் றுரையாடாதிருந்தனன் மேற் செயலையோரான். (௪௨)

பிஞ்சுமதியணிசடிலப் பெருமானத்தடக்கரைசேர் பெற்றி தன்னை, வஞ்சியிமமலையீன்ற மடமயில்கண்ணுற்றெழில்சேர் வாவி நீங்கி, யெஞ்சலிலாதுளத்தெழுந்த பெருநாணத்திடைமூழ்கி யிடருற்றேகி, மஞ்சொலிப்பக்கலைதிருத்தி வஞ்சியரோடொளிப்பதனை வள்ளல்கண்டான். (௪௩)

தையலுளவிருப்பாலிங் கியற்றியநீர்விளையாட்டின் றன்மை தன்னைப், பையநமக்குரையாம லிருந்தனனிச்சங்குகன்னப் பரிவி

லானென், றையன்மிகவுஞ்செயிர்த்து மீளவும்வந்தனையன்முக மத னைநோக்கித், தூய்யவுமைபுனலாடுஞ் செயனமக்கிங்கோதாத துக னிஞலே. (சச)

வந்தவபசாரத்தா னமதுகணங்களிற்றலைமை வாய்ந்தநீதா, னிந்தவுருவிழந்தவனி தன்னினரவுருவெய்தி யியறியென்னச், சிந்தைதெருமந்தினியென் செய்குவனென்றடிவணங்கிச் சிரமேற் கைசேர்த், தெந்தையேயெவ்வுலகும் படைத்தவனேயெனத்துதிக ளியம்பலுற்றுன். (சரு)

வேறு

முக்குணமாய் மூவுருவா யாக்கல்காத்தன் முடித்தலிவை முடித்தருளு முதல்வாபோற்றி, யக்கறுகுகொன்றைதும்பை செக் கர்வேணிக் கணிந்தருளுந்தற்பரனே யரனேபோற்றி, யிக்கு விலைக்கையிலேந்து மதனன்மாள வெரித்தநுதற்கண்ணனே யிறை யேபோற்றி, தக்கவர்களுளமகலா தாநந்தத்தேன் றண்மாரிதூவு சல தரமேபோற்றி. (சசு)

மலைக்கொடிக்கோர்பாலுதவி யிலங்கும்வெள்ளி மலைக்கிழ வனேபவள வண்ணபோற்றி, யலைக்கடுவைமிடற்றடக்கி யமரராவி யழியாமலன்றளித்த வரசேபோற்றி, கொலைக்கரியையலச்கணுற வுரித்துப்போர்த்த கொற்றமிகு மூவிலைவேற் கோவேபோற்றி, சிலைக்கிசையநெடுஞ்சைலங் குனித்தவெற்றிச் சேவகனேபாவகத் தின் சிறப்பேபோற்றி. (சஎ)

விடநாகமணிந்ததிரு வுருவாபோற்றி விடைக்கொடியேந்திய கரத்து வீராபோற்றி, படநாககங்கணனே போற்றிவேதன் பஞ்ச முகத்தொருமுகத்தைப் பறித்தாய்போற்றி, திடமிகுந்தவிடப முகைத் தோனேபோற்றி சிறுமானைத்தரித்தருளெஞ் சிவமே போற்றி, வடநிழலிற்சனகாதி நால்வருக்கும் வாய்மலராதுண்மை யினை வகுத்தோய்போற்றி. (சஅ)

அனந்தகுணனுகியெல்லாந் தானேயாகி யங்கிங்கெனுமலெங்கு மமர்ந்தாய்போற்றி, நினைந்தவடியாருளத்தின் விழைந்தவெல்லா நிறைதரவங்கவர்க்கருளு நிதியேபோற்றி, சுனந்தருக்காவாலவனந்

தன்னில்வானந் தூக்கியபொற்பதநடனத் துரியாபோற்றி, சினந் தருவெம்பிறவியெனுங் கோடைதீர்ப்பான் செறிந்துவருடிக்கு முகிற் றிரளேபோற்றி. (சகூ)

முதுக்குறைவிலாவெளியே னன்பிலேனின் முண்டகத்தாட்டு ணையேத்த முயலுகில்லேன், விதுக்குறைசூடுஞ்சடில வினையேன் றன்பால் விளைவதரிதோபிழைதான் வெகுண்டுநீயே, யதிர்ப்புற விக்கொடுஞ்சாப மளித்தானின்னை யன்றியிதுதீர்ப்பவரா ரடியேற் கெந்தாய், புதுக்குதமிழ்க்கவிபொழிவோர்க் கருள்சுரக்கும் புண் ணியனேயிச்சாபம் போகுமாறே. (ருo)

நாயினேற்கருடருவா யென்றுசங்கு கன்னனங்குநவின்மாற்ற நம்பன்கேளாப், பாயதிரைநீருடுத்த வுலகின்மேவிப் பயன்றருநன் னெறிமருவப் பரந்தவேதந், தூயசிவாகமமிவற்றைத் துலக்கஞ் செய்து தோமறுசைவந்தழைப்ப முயன்றுநந்தஞ், சேயினுடனே யென்று சமமாய்நின்று செருச்செய்வாயோவன்றே தீருஞ்சாபம்.

அக்காலைநமதுருவோ டமர்தியென்ன வரனருளியெழுந்தரு ளச் சங்குகன்ன, னெக்கவருந்துதிபுரிந்தே யிறைஞ்சிநாயே னுய்ந் தனனுய்ந்தனனின்றே யென்றுபல்கான், மிக்கமண்மேற்றாழ்ந் தெழுந்து புளகங்கூர்ந்து விழியிரண்டுந்துளிபனிப்ப விகற்பமின்றி, யக்கணத்திற்புவியதனி லடைவான்வேண்டி யார்வமோடுளத் தினிடை யெண்ணுவானல். (ருஉ)

வேறு

அனைத்துயிருந்தந்தளிக்கு மம்மைசெயுநீர்விளையாட் டதனை யாங்குத், தனக்கறிவியாதிருந்த சங்குகன்னன்றன்னையரன் சபித் தல்சொற்றாம், வனப்புறுமன்னோன்புவியில் வந்தரியபாலசித்த வடி வமாகக்,கனைத்திடுமாழ்கடலிடைநின் றெழுந்தநலம்விழைந்தினிது கழறுவாமால். (ருங)

திருக்கைலாயச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம், உ0௬.

## (வசனம்)

தவச்சிரேட்டராகிய நைமிசவனத்து முனிவர்கள் வினவ, சூத முனிவர் கீழ்க்கண்டவாறு சொல்வதாயினர்.

முனிவர்களே? அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருடார்த்தங்களையும், தமது அடியார்கள் பெற்றுய்யக்கொடுத் தருளும் முதல்வரும், வல்லிதேவசேனசமேதருமாகிய ஸ்ரீ சுப்பிரமண்யக்கடவுளது திவ்யப்ரதாபமானது எவ்வளவு கூறினும் முடிவு பெறாதாதலின், என்னாலியன்றவரை சொல்லுவன்.

முன்னொரு யுகத்தில் பரமசிவனா லருளிச்செய்யப்பட்ட வேதாகமங்கள் அவற்றின் நெறிகள், அனைத்தும் நலிவடைந்து தீயபுறச்சமயங்கள் எங்கும் பரவின. அது கண்ட தேவர் முனிவர் முதலினோர்கூடித் திருக்கைலாயகிரியடைந்து திருநந்தி தேவர் வழிவிட உட்சென்று கருணைக்கடலாகிய ஸ்ரீ பரமேசுரனைக்கண்டு வணங்கித் துதித்துத் தமது குறையை விக்ஞாபித்து, அவர் திருவுள மிரங்கி "அத்துயர்தீர அநுக்கிரகித்தோம், நீவிர் நும் இருப்பிடம் செல்லுக" என்ற அருளுரைகொண்டு சென்றனர்.

பின் சில நாள் கடந்துழி சிவபிரானது திருவருளியக்கத்தால் அருட்சத்தியாகிய அம்பிகை திருவுள்ளத்திற் புனல் விளையாட்டு விருப்பங்கொண்டனளாகி கயிலைமலையின் ஒரு சார் சென்று அங்கு திவ்ய அலங்கார நீர் நிலைத்தடாகமொன்றும், நாற்புறம் சோலை, மதிலும், சிருட்டித்து, அதன் வாயிலில் காவலாகச் சிவகணங்களுட் சிறந்த சங்குகன்னன் என்பானை நேமித்து, "யாம் இத்தடாகத்தில் நீராடி வெளிப்படும்வரை, எத்தகையோர் வரினும் உட் செல்லவிடாது காக்கக் கடவை" என்றோதி, திருமகள் கலைமகள் முதலிய சேடியர் சூழத் தடாகத்துட்சென்று விளையாடுவதாயினள்.

அத்தருணம் நீலகண்டராகிய பரமேஸ்வரன் பார்வதிதேவி க்காணாது தேடி அந்தத் தடாகத்தைக் கண்டு இஃதே எண்ணி உட்பிரவேசிக்குங்கால், காவலிருந்த சங்குகன் செய்யாது வாளா இருந்தனன். தமது கணவராகிய ள்வரக்கண்ட பார்வதி நாணமடைந்து கலைபேணி

ஒளித்தனள். அது தெரிந்த பெருமான் சங்கு கன்னனை நோக்கி "பார்வதி நீராடும் விஷயத்தை எமக்குக்கூறாது மறைத்திருந்தமை யால், நீ இவ்வுரு நீங்கி மனிதவடிவடையக் கடவை" எனச் சபித் தனர்.

அதுகேட்டு அவன் மனங்கலங்கி, "அன்பு அறிவு சிறிதுமில் லாதஅடியேன்மீது தேவரீர் சினந்து இக்கொடுஞ் சாபமிட்டீர். இது தீர்வதெவ்வா" றென்று பலவிதமாகத் துதித்து வணங்க, அது கண்ட பரமேசன், கருணையினால் "நீ பூவுலகிற்சென்று வேதாகம நன்னெறிகள் எங்கும் பரவச் செய்து நமது குமாரனை முரு கனிடம் சமயுத்தஞ் செய்வாய், அப்போது சாபந்தீரும்" என அநுக்கிரகித்து அந்தர்த்தான மாயினர். சங்குகன்னன் பணிந்து மகிழ்ந்து பூவுலகத்தில்வர எண்ணியிருந்தனன்.

---

## இரண்டாவது

## பாலசித்தர் திருவவதாரச்சருக்கம்

---

மலைமுனிக் கருடந்தானை மறலிபா லெனைத்தாரானை
நலமலி வனம்வந்தானை நவையுளோ ரகம்வாரானை
யலைவறந் திடக்கண்டானை யடியர்செய் பிழைகாணானை
யிலைகுலா மயில்வேலானை யிறைஞ்சிநன் மகிழ்கூர்வாமே. (௧)

வேறு

அலகில் சோதிபொன் னம்பலத்தாடுவா னருளா
லிலகுவாண்முகச் சங்குகன்னப்பெய ரிறைவ
னுலகிற்றோன்றிடு கதையினையாமினி துணரப்
பலகலைக்குமோ ருறையுளாந்தலைவநீ பகர்வாய். (௨)

என்றுகூறிய சௌனகாதியர்களுக் கினிதாய்த்
தன்றுநற்புகழ்ச் சூதமாமுனிவரன் றுகடீர்
மன்றலார்கடம் பணிபுயவேலவன் மலர்த்தா
ளொன்றுளத்தினோர் தன்புடன்கேண்மினென் றுரை

உ

முருகன் துணை



இனம் - பொம்மயபாளையம் திருக்கயிலாய பரம்பரை

பெரிய மடம் பதினைந்தாவது பட்டம்

ஸ்ரீலஸ்ரீ சிவ சுப்பிரமண்ய

சிவஞானபாலைய சுவாமிகள்

மாற்றியித்தனு வெத்தனுவாகவிம் மண்மேற்
றேற்றுவாமெனச் சங்குகன்னப்பெயர்த் தூயோன்
சாற்றுமானிட யோனியின்வரினிடர் தருமக்
கூற்றகற்றியே தோன்றுதனலமெனக் குறித்தான். (௪)

வேறு

கயிலைமலைக்கிறை யோனருள்வண்ணங் கடல்புடைசூழ்தரு காசினியூடே, மயிலைமலைக்கரு காயொருதானம் வந்தரிதாகிய மானிடனுகுஞ், செயலையகங்கரு திக்களிமேவித் திரைநரைசேர்தரு மார்கலிசேரா, வெயிலைவிரித்ததி காலையின்மேவும் விரிகதிரோனென வெய்தினனம்மா. (௫)

வேறு

செஞ்சடிலமண்டலமுந் திருச்செவியிற்குண்டலமுந் திருவெண்ணீறு, விஞ்சியகண்மணிதயங்கு மேனியுஞ்சின்முத்திரையும் விளங்குந்தண்டுஞ், சஞ்சிதமெலாம்பொடிக்குங் கற்பமுறுபொக்கணமுந் தன்பான்மேவித், தஞ்சமெனுமடியவர்கள் சஞ்சலந்தீர்த்தவர் தலைமேற் சாத்துந்தாளும். (௬)

அங்கலிங்கசங்கமமு மாகமபாகத்தையரு டருசெவ்வாயுஞ்
செங்கலிங்கமிலகியதோர் திருமெய்யும்புன்னகையுஞ் சீரான்மிக்க
துங்கமுறுந்திருவரையி லிலங்கோடுமடிபணியுந் தொண்டருள்ளச்
செங்கமலமலர்விக்குந் திருநோக்குஞ்சித்தியெட்டுந்திகழுமாண்பும்.

ஐந்தெழுத்தையருங்கலனுப் புனையுமெழிலுத்தலமு மடியருள்ளம், வந்தெழுமெய்ஞ்ஞானபா னுவினொளியுந்திசைவியக்கு மௌனச்சீருஞ், சந்தனத்தென்சைலமமர்ந் திடுமுனிவன்முதலானோர்த் தழுவிவானாட், டிந்திரனைநெடியோனை நான்முகனையொருபொருளி னெண்ணுவீறும். (௮)

வேறு

இத்தகையனைத்தினையு முற்றரியவற்புதவி லக்கணமியைந்துவயதோர், பத்தெனவழுத்துமுரு வத்தொடுகுணக்கடல்ப ரப்பினுள மீன்கடனது, மெய்த்திருவினிற்சிறிது றக்கருணைவைத்துவளை

மேவுகரையண்மியருகே, வித்தகமிகுத்தபொழி லுற்றுறைவதற் குளம் விழைந்தவணிருந்தனனரோ. (௯)

அத்தலமதிற்றுதிகொள் சித்தர்கள்களித்துறையு மாச்சிரம மொன்றுகாணு, வெத்திசையினும்போத மெய்க்கதிர்விரித்திரவி யென்னவவனுற்றுயர்தருஞ், சித்துகள்புரிந்துசிவ யோகநிலை நின்றுமறை தேர்சனகாதியுணர, வித்தகமுணர்த்தியரு ளத்தனை நிகர்த்தடியர் வித்தமுறமேவாதிவருநாள். (௪0)

மானவர்களிற்றகுதி யானமனமுற்றறிவு மாணவுடையோ ரணுகிநீ, தானுயிர்கணத்திறைவ னேவலதுசித்தர்கட மைப்பணி கொளுந்தலைவனே, ஞானமுனிவர்க்கருளு மெய்க்குரவனேவகில நற்றவமிழைத்தவதனு, லேனையுலகத்தினைவி டுத்திவணடைந்த னைகொ லீதருள்கவென்றனரரோ. (௪௧)

நின்றவர்தமக்குளமி னிக்கும்வகையென்றுமுயர் நித்தனுல கத்தையணுகித், துன்றியசிவாநுபவ முற்றிலகுவோமரிய சுத்த வுபதேசமுலகோ, ரொன்றவருள்வாமெனவு மத்தகையபத்தர் மன மொத்துநயபத்திபுரியப், பொன்றுதலில்சைவமறை யின் றிறமுணர்த்தியருள் பொற்பொடுமமர்ந்தனனரோ. (௪௨)

சித்தரினமெத்தவும டுத்தருகிருக்கவவர் சித்திநிலைபெற்றிடு விதஞ், சுத்தசிவதத்துவம றைப்பொருள்செவிக்கதிசு வைக் கொளவுணர்த்தியுணவிற், சற்றெனும்விருப்பமுமொ ழித்துறை யிடத்தின்மிகு சத்வகுணசித்தர்களெலாம், பத்தியுடனுற்றிணையில் சித்தர்செயலைக்கனிவு பற்றியிஃதொன்று புரிவார். (௪௩)

பாலவயதாகவலை வாரிதியின்மேவிவரு பான்மையுமலாதள விலாச், சீலமுறுசித்துபுரி செய்கையினுமேபால சித்தனெனநாம திறவி, யாலவிடமேயமுத மாயவிலுவானிவன லாதிலையெனுநினை வொடுஞ், சாலநலமேவுதுதி கூறிடவவர்க்கினிய தண்ணருள்சு ரந் துறையுநாள். (௪௪)

அத்தனருள்பெற்றவர்க ளுற்றபெருமுக்கன்மலை யாதிய வரைக்கணணுகிச், சித்தர்கடமக்கரிய வற்புதமுறப்புநித சித்திநிலை முற்றுமுதவித், தொத்தலர்வனத்தமரு நற்றவர்களுக்குமொரு

தூயசிவபோதநல்கி, யித்தைமையோடினிய சித்தனுலவிப்பழமை யெய்துமிடமுற்றனனரோ. (கரு)

அங்கணமர்போதினிடை யெங்கள்சிவனுணைவழி யந்தரமுநாகருலகும், பொங்குதிரையாழிசூல வும்புவியுநாடிவரு புந்திபெறுநாரதனெனுஞ், சங்கையறுமாமுனிவன் வந்திடவிசேடமொடு தங்குமுபசாரமாதி, மங்கலமெலாம்விதியி னன்கனிவினுலுதவ மாமுனிவனேற்றுமகிழா. (கசு)

கோலமருவுஞ்சித்தர் கோனிடைமிகும்பத்தி கூடியிவிதங்கூறுவான், சீலமுடனிங்குக்கு மேலைவருணன்றிக்கி றேடரியவின்புற்றிடுஞ், சோலைகணெருங்கிக்க லேலெனநறும்புட்க டேய்மையின்முரன்றெருப்பிலா, மாலையடையும்பொற்பின் மாமயிலெனும்பொற்றை வாழ்குவதினஞ்சொற்றுமே. (கஎ)

அக்கிரியினற்புதமு ரைக்குதலெனக்குமரி தத்தலையினுற்றவரெலா, மெக்கலையுமெத்தவமு மெய்பொருளுமெப்படியெ ணத்திடைகிளைப்பரதுபோ, லொக்கமருவிக்களிசி றக்கவொருபச்சைமயி லுற்றறுமுகக்கடவுளை, மிக்குளமிருத்தியொரு வெற்புருவெடுத்தரிய மெய்த்தவமியற்றியதுபின். (கஅ)

மஞ்சுதவழும்பொதியை யங்கிரியிருந்துதமிழ் மண்டலநிறைந்திடவளர், நெஞ்சகமலர்ந்திலகு கும்பமுனிவன்பணிய நேயவருடந்தகுரவன், கஞ்சனதுகங்குலைய முண்டகமெனுங்கரத லங்களினறைந்தெனதுளத், தஞ்சமெனவந்தருள்செய் கந்தனிவர்வாகனமதாகிமகிழ்வுற்றதெனவே. (ககூ)

வீணைமுனியோதவஃ தேதுமயின்மேவியொரு வெற்புருவமாகியுலகிற், காணவியைகாரணம தேதுபுகலென்றுலகு காதலுறுசித்தன்வினவத், தானுவினுளத்தடல்கொள் கோபமுழுதற்றினளிசாலுளுருகிக்கனியவே, பாணெனுமனைத்துமுயர் யாழொடுபிணைத்தினிது பாடுமுனிவன்பகருவான். (உ0)

வேறு

சங்கு கன்னத் தனிப்பெயர் பூண்டுளான்
பொங்கு வாரியிற் போந்திடு சித்தனு
லிங்க மர்ந்த தியம்பின மாமயி
றங்க மாமலை யானதைச் சொல்லுவாம். (உக)

பாலசித்தர்திருவவதாரச்சருக்கமுற்றிற்று
ஆ திருவிருத்தம், உஉஎ.

(வசனம்)

முனிவர்களே பரமசிவத்தின் சாபத்தைப்பெற்ற சங்குகன்னனென்னும் கணத்தலைவன் கீழ்க்கண்டவாறு கருதுவதாயினன். நாம் பூவுலகத்தில் மனிதவுருக்கொள்வதில், தாயின் கருப்பவாய்ப்பட்டுப் பிறக்கின் துன்பம் நேருமென்று அதனைவிலக்கி, சிவாக்ஞையின்படி மயூராசலத்தின் அருகாக அவதரிக்கக்கருதிக் கீழ்புறமுள்ள கடலினிடத்து, உதய சூரியன்போ லொளிவிடுந்திருமேனியோடு திருவுருக்கொண்டெழுந்தனன்.

சடாமகுடமும் கர்னகுண்டலங்களும், விபூதி உருத்திராக்ஷம் நிறைந்த திருமேனியும், ஞானமுத்திரையும், யோகதண்டமும், விபூதிக்கோயிலும், தன்னையடையும் அடியார்கள் முடியிற்சூட்டும் பாதங்களும், திருமார்பில் தரித்த சிவலிங்கதாரணமும், வீர சிவாகம உண்மைகளை யுபதேச சாரமாகப் பொழியும் திருவாயும், செக்கர்வான்போன்ற காவிவத்திரத்தோற்றமும், பரிசுத்த வெண்ணிற மமைந்த லங்கோடு கௌபீனமும், அடியார்களிருதய கமலத்தை மலரச்செய்யும் அருள்நோக்க மமைந்த திருவிழிகளும், அஷ்டசித்தி விலாசமும், பஞ்சாக்கர ஜெபமியற்றும் திருநாவும், இந்திராதியரது போகங்களைப் பொருட்படுத்தாத துறவு நெறியும், அமைந்து பத்துவயதென்னும் பருவம்காட்டி விளங்கினர்.

ஆங்கு ஓர் ஆச்சிரமம்வகுத்து வசித்து, சித்திகள் நடத்தியும், சிவயோகம் புரிந்தும் சௌனகாதிமுனிவர்களுக்குப் பரம

சிவன் தட்சிணாமூர்த்தமாயிருந்து அநுக்கிரகித்தது போல்., அங்கடைந்த பக்தர் சித்தர்களுக்கு ஞானபோதகம் புரிந்தும் வரும் நாளில், உத்தமத் தொண்டர்கள் பலவாறு துதித்து வழி பாடு செய்து வந்தனர்.

இந்த முனிவர் பல சித்தர்கள் புடைசூழ்ந்திருப்ப அவர்க ளுக்கு மனோலய மார்க்கத்தை உபதேசித்து ஆகார விருப்பம் சற்றுமின்றி ஒழித்து விளங்கினர். அந்தச் சித்தர் முதலியோர் இவரது இளமைவடிவத்தையும், அற்புதச் சித்தியையுங்கண்டு இவ ருக்குப் "பாலசித்தன்" என்னும் காரணப் பெயரிட்டு நீலகண்ட ராகிய பரமேசுரன் உம்மையன்றி வேறில்லையென்று துதித்திருந்த னர். இவர் பெருமுக்கல் மலை முதலிய பல பர்வதங்களுக்கும் பல வனங்களுக்கும் யோகவலியாற் சென்றும், ஆங்காங்குள்ள சித்தர் முனிவர்களுக்கு அநுக்கிரகம் புரிந்து மீண்டும் தமது ஆச்சிரமம் வந்து அமைவதானர்.

அக்காலத்து, நாரதமுனிவர் இவரிடம் வரக்கண்டு, உபசார மொழி கூறியதால் அவர்மகிழ்ந்து, பாலசித்தரைநோக்கி ஈண் டைக்கு மேற்றிக்கில், சுகந்த பரிமளச்சோலைகளால் நெருங்கப் பெற்று மயூரகிரி என்னும் பர்வதம் ஒன்றுளது. அதன் பெருமை என்போலிகளாலும் சொல்லலரிது. முருகக்கடவுளது ஒப்பற்ற மயில்வாகனமானது, ஒருகாரணத்தால் மலைவடிவுகொண்டு தமது கடவுளை நோக்கித் தவஞ் செய்ததாகும். பொதியமலைத் தலைவ ராகிய அகத்தியமுனிவர் வணங்க அவருக்கு ஞானதேசிகரா யமர்ந்து பிரணவ உபதேசம் புரிந்தவரும்,பிரமன் அகந்தைகெடத் தலையிற் குட்டியவரும், ஆகிய கந்தக்கடவுள் ஆரோகணித்தற் குரிய பாக்கியத்தைப் பெற்றது. என்ற விவரங்களை ஓதினர். அது கேட்ட சித்தர் நாரதரை நோக்கி, மயில், மலைவடிவு கொண்டது யாது காரணம்? அதன் விவரம் கூறுக என வினவ, நாரதர் பின் வருமாறு கூறுவதாயினர்.

## மூன்றுவது

## மலையுற்பவமுரைத்தசருக்கம்

---

மதுமலர்க்கடம் பணிபுயமுருகனை மயின்மிசைவருவானை
விதுமுகக்குற வனிதையையநுதினம் விழைந்தமோகனைநீங்கா
ததிர்பொலன்கழ லடியனையடியவ ரகத்திருடொலைப்பானை
நதியணிந்தசங் கரன்மகிழ்குமரனை நாந்தொழுதுய்வாமே. (க)

வேறு

சூதனிவ்வணஞ் சொற்றிடநைமிச வனத்து
மாதவத்தினர் மாமனத்திடைமகிழ் மலியா
நாதனாகிய சித்தற்குநாரத னன்பா
னேதுமாமயி லோங்கலுற்பவக்கதை யுரையாய். (உ)

என்னவத்தவ ரன்புளத்தெய்தியே வினவ
வன்னபாலசித் தாதிபன்றனக்குநா ரதன்றான்
சொன்னவாறினிக் கேளுமின் சொல்லுது மென்னா
மன்னுமாதவ நாயகன்சூதன்வாய் மலர்ந்தான். (ங)

முன்னமாயையென் பவடனைக்காசிபன் முயங்கப்
பன்னுசூரபன் மாவெனப்பகர்தரு மசுரன்
றன்னுசியன்வெந் தாரகனசமுகி துணையா
மன்னுதானையா மசுரரோடுதித்தனன் மண்மேல். (ச)

உதித்தசூர்முத லவுணரோடருந்தவ முஞற்றி
மதிச்செழுஞ்சடை யண்ணல்பால்வரமெலாம் வாங்கிக்
கதிக்குநேமியன் முதற்கடவுளரைவென் கண்டே
யதிர்ப்புறுந்திரை யாழியின்மகேந்திரத் தமர்ந்தான். (ரு)

அமர்ந்துவெய்யகோ லாயிரத்தெட்டெனு மளவிற்
சமைந்தவண்டத்துஞ் செலுத்திவெந்தானையாங் கடலை
நிமிர்ந்துபோர்செய விடுத்தருந்துயருற நெருக்கித்
தமந்தராப்புவித் தேவரைச்சிறையுறத் தளைந்தான். (சா)

ஆற்றவுந்துய ரெய்தியேகடவுள ரானோ
ரேற்றிவர்ந்தருள் கடவுள்பாற்கைலையி னெய்தி
மாற்றருந்திறற் சூரனால்வருந்திய மாற்றஞ்
சாற்றிப்போற்றலு மப்பரன்றண்ணருள் புரிந்தே. (எ)

கந்தவேடனை நோக்கிவல்லசுரர்தங் கணத்தைச்
சிந்துமாறுவென் றிடுதியென்றுய்ப்பவச் செவ்வேள்
வந்தவானவர் தங்களைநோக்கிவஞ் சகர்தம்
வெந்திறற்செருப் பாமினிவெருவன்மி னென்றான். (அ)

அந்தவாசகஞ் செவிவழியமுதெனத் தேக்கி
யுந்துமாநந்த வெள்ளத்தின்மூழ்கிய வும்பர்
கந்தவேள்பத மலரிணையுள்ளுறு களிவான்
முந்தவீழ்ந்துவீழ்ந் திறைஞ்சினர்துதிபல மொழிந்தார். (கூ)

அம்புயத்தின னிடரினியகன்றன னென்றா
னும்பல்வானவ னம்பதிக்குறுகணின் றென்றான்
பம்புவானவ ரெம்முயிர்ப்பன்னியர் களத்தின்
வம்புலாமண மங்கலம்வாழ்ந்தன வென்றார். (க0)

இன்னவாறவ ரிசைத்தெமக்கரியபே றெய்த
மன்னயிற்கரக் குமரநாயகன்றனை வழுத்தி
யுன்னருஞ்சிறப் பணைத்தையும்புரிந்துளத் துவப்பாற்
பன்னலந்தரு பூசனைபன்முறை செய்தார். (கக)

முழுதுமாகிய முக்கணெங்கடவுளுக் கன்பா
யெழுதொணுமறைப் பொருளிணையருள்செயு மிறையோன்
பழுதுசெய்திடு சூர்முதற்கொடியரைப் பாற்றித்
தொழுததேவரைக் காப்பத்தன்னுளத்திடைச் சூழ்ந்தே. ()

வீரவாகுவே முதலியவீரரும் வெய்ய
சாரதப்படைக் கடலும்பின்சார்ந்திட வேகித்
தாரகன்றனைக் கிரியுடனயில்கொடு தடிந்து
சூரன்றன்மிசை மகேந்திரமடுத்தமர் தொடுத்தான். (கங)

அரிமுகன்றனைப் பானுகோபன்றனை யவுணப்
பரவையைப்பல படைகளாற்றடிந்துபன் மாயை
விரவுருக்கொடு சூரன்வெம்போரினை விளைப்பச்
சிரமுரங்களை வருந்தொறுமெழுந்தொறுஞ் சிதைத்தான். ()

இத்திறம்பல வுருக்களையறுமுக னிருப்பக்
குத்திரத்தனல் புனன்முகில்வளியுருக் கொடுபல்
லத்திரந்தொடுத் தசுரனங்குமரன்மே லடர்ந்தா
னெத்திசாமுகங் களும்பலவண்டமு மிடைந்த. (கரு)

அடர்ந்துவெஞ்சமர் புரிந்திடுஞ்சூரையாங் காங்குத்
தொடர்ந்துவெங்கடும் படைகளாற்றடிந்திடச் சூரன்
படர்ந்தசூதமாக் கடலிடையண்டங்கள் பரிப்ப
நடுங்கிளைப்பெருந் தூணெனநின்றன னண்ணி. (கசு)

நின்றகாலைவே லேவினனறுமுக னிமலன்
றுன்றுசூதமாந் தோற்றமதழிந்துமுன் னுருவாய்க்
குன்றிடாவமர் செயவவேல்கூறிரண் டாக்கச்
சென்றுமஞ்ஞையுங் கோழியுமாயினன் சினந்தே. (கஎ)

படர்ந்தமஞ்ஞைமே லிறைபதமூன்றிடப் பரித்தே
யடர்ந்தவெஞ்சிறைப் புடைப்பினாலண்டத்தி னடுக்கு
மிடைந்தவைவகைப் பூதமுங்குலைந்திட வெற்புந்
தொடர்ந்தசூறையாற் றுகள்படவெங்கணுஞ் சுழன்றான். ()

சுழன்றசாரியின் வேகத்துஞ்சிறைகொள் சூறையினு
மழன்றசீற்றத்து மசைவிலாக்குமரனுற் றடர
வுழன்றசூரன்வெஞ் சீற்றமுமாற்றலு மொருங்கே
யிழந்தயர்ந்திரும் புவியினிலிருந்தன னிளைத்தே. (ககூ)

நின்றசூரன்வல் லவுணராங்கடலையு நீண்ட
குன்றமுந்தடிந் திலகியவேற்கரக் குமரன்
மன்றற்பூஞ்சரண் டொடக்கத்தாற்சூக்கும வடிவாத்
துன்றுநல்லுணர் வெய்தியேயின்னணந் துதிப்பான். (உ0)

## வேறு

தனதுதிருவருளினுல குயிர்கண்முழுவதுமருள்செய் தருணி
பகவதிகுமரியெம், பனைகைதிரிபுரையமலை விதுவைநிகர்தருவதனி
பகரரியவிமயமுதவும், புனிதைபுளகிதமிருக மதமகிலினளறுவழி
பொறிதிதலைசிதறுநகிலொண், கனசிகரவெழிலியுமை யவண்மடியி
னருமையொடு கனியமுதமயில்புதல்வனே. (௨௧)

வரியரவமிறுகுதிரு வரையமலனருணமெரி மழுவொலிசெயுந்
தமருகம், பொருவின்மணிவிதியினடு தலைகரியினதளடலை புகலு
மறுபதமிசைதர, விரியுமதுவொழுகிதழி யிவைகளணிதருபரமன்
விழைவினணை தருமுமையவள், பரிவினுடனெனதுசுத னென
மகிழுமொருகுமர பணியுநெறியருடருவையே. (௨௨)

தடமுலவுகுளிர்கமல வறுமுகமுமொருபனிரு தனிவிழிக
ளெனும்வனசமு, மடமையறுமடியரிடர் கெடவவர்கடவமலிய
வளர்பனிருகரமுளரியு, மொடிவில்பலபிறவிதொறு நலியுமுயிர்
மருவவொளி ருபயபதமலர்பதுமமுங், கொடியனெதிருறவெனது
தவமகிமைதனையுலகர் குபிலுவதுமரிதரிதரோ. (௨௩)

கடவிகடகடமதம துலவுகரிமுகவனொடு கனிவுபெறவருதுணை
வனே, யிடமதனிலுறைவிபுதர் மணிமுடிகள்வருடுதலி னிசை
குலிகமுறுசரணனே, பொடிபடவென்மலமுழுது மறுதிசெயும்
வகைதரிச னமதருளவருபுனிதனே, விடையருள விதுதருண
மெனதுமறுவகலவினை விடியவெழுதருபரிதியே. (௨௪)

உனதுதிருநாமமொரு தரநவிலுவோர்பிணிக ளுறுமிடிகளே
தமறலி, யினதுகயிரேதிமம திடையில்வருவேதன்முடி யெழுது
வரியாவுமறவே, புனிதமடைவார்களென மறைகண்முதலாயகலை
புகலுவதுநீதியதுவா, மனதினினைவோர்கள்வினை பொடிசெய்வடி
வேலுருவும் வகையருளினோடுசெயலால். (௨௫)

எனதுடலமதிபுநித மருவியதுனருளின்மிக வெவருமணுகரு
முயர்வுதந், துனதுபதமடையும்வகை யருடியெனவசுரன்மொழி
யுரையதனைமுருகன்மகிழா, நினதுமனதுளவிழைவு புகறியென
வசுரகுல நிருபனுளமகிழ்வினுருகிப், பனகமணிதருபரம னுதல்
விழியின்வருகுமர பசியமயிலுருமருவியே. (௨௬)

மறைமுடியினந்தமுனி வரர்மதியினந்தமொளிர் வனசமல
ரின்பவடியே, நிறையுவகைமுந்தியென துருவிடைவதிந்திலக நெறி
யொடுசுமந்துலவவே, குறையகலவின்றுவர மருளரியயன்பரவு
குணநிதியெனுஞ்சலதியே, துறைபலநெருங்கமுது கவிவலர்
சொலும்பனுவ ருெடையெனவணிந்தபுயனே. (௨௭)

வேறு

என்றனந்தந்துதிகணவின் றசுரகுலாதிபனிசைத்த விசை
யைக்கேளா, நன்றவணமளிப்பமுன மசுரகுலக்கொடுந்தொழிலா
னவையடைந்தா, யின்றவையெலாமகல மயின்மலையாய்த்தவத்
தோராண் டிருப்பையாயின், மன்றவெமைத்தாங்குறுவா கன
மாவாயெனத்திருவாய் மலர்ந்துபின்னும். (௨௮)

எவ்வுயிராயினும்புரிந்த வினைக்குரியபயனனைத்து மெந்நாள்
சென்று, மவ்வுயிரேபிறந்தடையு மாதலினீயிப்பிறப்பி லாற்றி
நின்ற, கவ்வையுறுபவமனைத்தும் பிறந்துதொலைத்தாலலது கழி
வுருதால், செவ்விதினீயுணர்வைமுனந் தேவரையுமேவல்கொண்ட
திறலோயென்ருன். (௨௯)

என்னவுளங்களிதுளும்பி யிகலுலவுந்தகுவர்குலத் தேந்த
லெந்தா, யன்னவிதமேபுரிவ லின்றெனக்குத்தானநிலை யருளு
கென்னக், கொன்னுனைவேலிறைபெண்ணைக் குத்தரமாவிந்திய
மென் குன்றிற்றெற்கா, மன்னியநற்புவியினிடை வைகுதியாலென
வவனும் வணங்கிப்போனுன். (௩௦)

அவ்வாறேயத்தலத்தி னத்தனருள்பூரணமா வகத்துட்
கொண்டு, செவ்வாம்பன்மலர்வயல்சேர் தொண்டைநாட்டுருநாட்
டித் திசைமயங்க, வொவ்வாமலோங்கலுக்குப் பொன்னேங்கல்
விலங்கலெனு முரையைப்பூணத், தவ்வாமலோங்கினன் மயிலோங்
கலெனும்பெயரிற் றகுவர்கோமான். (௩௧)

கற்றண்டரிந்திரன்மா லயன்முதலோர்மனதண்டக் காறு
தோங்கி, யுற்றண்டவடுக்கனைத்துந் துருவியெழுதருசிகர முருவத்
தோய்ந்தே, யெற்றண்டமெனவிலகி யெவ்வளமும் பெற்றண்ட
மென்னநின்றே, பொற்றண்டைக்காலிறைளிர் நற்றண்டபாணி
தனைப் போற்றினனே. (௩௨)

வருவருடயோவாத பொழிலிலகுமயிற்கிரியாய் வனுநோன் பண்ட, ரொருவருடவரையகலா தியற்றியரவிந்தமல ருவப்பின் மேவுந், திருவருடுங்கழலிணையான் றிசைமுகத்தானிவர்துதிக் குஞ் செவ்வேளாகுங், குருவருடனகங்கருதி விழிபனிப்பவரிய துதி கூறிநின்றான். (௩௩)

பொன்வரையின் கன்னியருள் புதல்வனையவ்வரைவடிவன் போற்றிநிற்ப, மின்வரையிற்புணர்தனமா ரிருவரையுமருகில் வைத்த வேலோன்போந்து, தென்வரையினகத்தியற்கு மறைப் பொருள்சொறிருவாயைத் திறந்தருளா, நின்வரையிலருந்தவத்தின் மிகமகிழ்ந்தானிணையடிமை நிலவக்கொண்டாம். (௩௪)

பொறிகலந்துசிறைவிரிந்து வலிமிகுந்தமயிலுருவாய்ப் பொரு ந்திநந்த, நறியமலர்த்தாளடைதி யெனுமளவிலவ்வாறே நண்ணி நிற்பக், கறையகலமயிலிவர்ந்தோ ரறுமுகமுமீராறு கமலக்கண்ணு, முறுவலிகொளொருபனிரு புயவெழிலுமிருபதமு மொளிரநின்றே.

அம்மயிலினுருவாகுஞ் சூரபன்மன்முகமதனை யன்பாய் நோக்கி, யிம்மையினம்பானினக்கு வேண்டுவரநவிலுதியே யென் ணம்போலச், செம்மையுறநாமளிப்ப மெனக்கருணையமாகுஞ் செவ்வேளென்றன், மும்மைமலமறுத்தினிய மெய்ம்மைநலந் தெரித்தருளு முதல்வன்சொற்றான். (௩௬)

வேறு

கூர்வேலேந்துங் கரதலத்தெங் குரிசின்மொழிந்த மாற்ற மதைக், கார்வாய்தலைக்கண் டகவுபசுங் களிமாமயிலா கியசூரன், சீர்வாய்த்ததுவின் றெனக்கென்று சித்தங்களித்து மயிர்பொடிப் பப், பேர்வாய்த்திடுநற் றுதிகள்பல பேசிப்பணிந்து பகரு வனால். (௩௭)

கரிமாமகளை மருவுமருட் கடலேநின்றன் கழலிணையைப்
பரிமாமயிலிற் றாங்கிநிற்கும் பலனைப்பெற்றேன் சலனமற்றே
னிருபாவெனையாட் கொண்டதுவே நியமமாகி லென்னமிசத்
தொருபாலிங்ஙன் மலையுருவா யுறையவேண்டுங் கற்பமுமே. (௩௮)

கற்பாகற்ப முடிவின்றிக் கழறுமயிலை மலையென்றே
நற்பேர்விளங்கக் கீர்த்திபெற்று நாதாநின்றன் மாதருடன்
பொற்பாயமர்ந்தே யடியர்குழாம் போற்றநாளும் வரநல்கி
நிற்பாயுமைபா லாவென்று னீலமயிலாய் நிலைநின்றான். (ங௯)

அறைந்தமாற்ற மலையெறிந்த வயிலோன்கேட்டே யவ்
வணமே, நிறைந்தமயிலை மலையுருவாய் நின்றனமிச மிங்கிருக்கிற்,
குறைந்தமதிவே ணிப்பெருமான் கொடுத்தசாப மகல்வதற்கா,
வுறைந்திம்மலையிற் றவஞ்செய்வா னுறுவான்சங்கு கன்னனென்
போன். (௪0)

அன்னவன்றன் றவவலிக்கா யன்புகூர்ந்தங் கரன்முனிவான்
மன்னுஞ்சாபந் தீர்த்தருள வருவாமிந்த மயிலைமலை
தன்னிலமர்ந்தந் நாண்முதலாய்த் தரணியோர்கட் கருளளித்து
நின்னதெணத்தை யாமுடிப்பா நீயுட்கவனீங் குகவென்றான். (௪௧)

விடவாயரவக் குழுநெளிய வீறும்பதத்தா லேறியெழிற்
படவாயிடத்தைக் கிழித்தெறியும் பசுமாமயிலின் மிசையேறித்
திடமார்கனகத் தடமேருச் சிலையான்வெள்ளி மலையடைந்தான்
கடலாம்பிறவி யிடைவருந்தாக் கதியையருணங் குருபரனே. (௪௨)

அதனாலந்த மயிலைமலை யாழியேழுஞ் சூழ்புவியிற்
சதமாவதிந்து மதிவல்லோர் சதகாலிதயக் துதித்திடவற்
புதமாவிளங்கு மக்கிரியிற் போயங்கதிர்வேற் சேயைநினைந்
திதமார்நோன்பாற் றுறினெய்துமிதயங்கொண்டதெளிதென்றான்

வேறு

தானவன்மயி லைப்பருப்பத மானதுந்தவ மேயதும்
வானவன்பணி வேலவன்முனம் வந்துநல்லரு டந்தது
மானமஞ்ஞையி வர்ந்ததுஞ்சில வாறிசைத்தன மிவையலா
லானவன்பொடு பாலசித்தன ருந்தவச்செய லோதுவாம். (௪௪)

மலையுற்பவ முரைத்த சருக்க முற்றிற்று

ஆ. திருவிருத்தம், உ௪௧.

(வசனம்.)

முனிவர்களே? முன்னொருகாலத்தில் மாயையென்பவளாற் பெறப்பட்ட சூரபன்மன் தனது சகோதரர்களாகிய சிங்கமுகன் தாருகன் முதலியவர்களுடன் அருந்தவஞ்செய்து பரமசிவத்தினிடத்தில் பல வரங்களைப்பெற்று, பிரமன் விட்டுணு முதலிய தேவர்கள் புறங்காட்டியோடச் செயித்து, கடலின்மத்தியிலுள்ள மகேந்திரபுரியில் அமர்ந்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் தனது கொடுங்கோல் செலுத்திக் கடும்போரியற்றித் தேவர்களைச் சிறைப்படுத்தினன்.

அவ்வாறு பலகால் வருந்தியதால் எஞ்சி ஒதுங்கிய, இந்திரன், பிரமன், விட்டுணு முதலிய தேவர்கள் கயிலாயமலையடைந்து சிவபிரான் முன்னிலையிற் குறைகூறித் துதித்தனராக, பரமசிவன் அருள்கூர்ந்து முருகப்பெருமானைநோக்கி "நீசென்று அசுரர்கள் செய்யும் அநீதியை ஒழியும்படி சங்கரித்துத் தேவர்களைக் காக்கக்கடவை'' என்று ஆக்ஞாபித்தனர். அவ்விடைபெற்ற குமாரக்கடவுள் தேவர்களைநோக்கிக் கிருபைகூர்ந்து அபயமளித்தனர். அந்த அநுக்கிரக வார்த்தையைப்பெற்ற தேவர்கள் முருகப் பெருமானை வணங்கி மனமகிழ்ச்சியுடன் துதித்தனர்.

திரிநேத்திரங்களையுடைய பரமேஸ்வரனுக்கு ஞானோபதேசஞ் செய்தருளிய முருகக்கடவுள் சூராதி அசுரரை யழித்துத் தேவர்களைக் காக்கத் திருவுளங்கொண்டு வீரவாகு முதலிய மகாவீரர்களும் பூதசேனையும் உடன் வரச் சென்று மாயாபுரியில், தாரகனையும் கிரவுஞ்சத்தையும் அழித்துப் பின் வீரமகேந்திரத்திற் சென்று சூரபன்மனிடம் யுத்தமியற்றி, சிங்கமுகன்முதலியோர் அழிந்தபின் சூரன் பலவித வடிவுகொண்டு போரியற்றி, முருகன் யுத்தஞ் செய்து அழிக்க முடிவில் அண்டகோளகையை அளவிய உன்னதக் கிளைகளோடு அடர்ந்து நெருங்கிய மாமரமாய்ச் சூரன் நின்றனன். அது கண்டு முருகப்பெருமான், தமதுஞானசத்தி வேலாயுதத்தையேவினர். அது சென்று மரத்தை யிருபிளவாக்கத் தனது சுயவடிவாய் முன்வந்தனன். அதனையும் பிளந்ததால் மயிலுஞ் சேவலுமாய் வடிவுகொண்டு எதிர்த்தனன். அது கண்ட சுவாமி, மயிலின் மீது திருவடி யூன்றி ஆரோகணிக்க, மிகுந்த

வேகத்துடன் பலதிசைகளிலும் சிறையடித்துச் சென்று அயர்ந்து பூமியில் வந்து இறைவன் அருளால் உண்மையறிவு சிறிது தோன்ற அறுமுகக் கடவுளை அன்புடன் துதிப்பானாயினன்.

சர்வமங்களகரமுள்ள பார்வதியின் பாலமுதருந்தியவரே! அக்னி, தமருகம், கொன்றைமாலை, முதலியதரித்தபரமசிவத்தின் அன்புக்குரிய உமையவள் தனது குமாரனென்று அருமை செய்யும் குமரக்கடவுளே! உமது தாமரை மலர் போன்ற ஆறுமுகங்களும்,பன்னிருகரங்களும், இரண்டு திருவடிகளும், தெரிசிக்கப்பெற்ற எனது தவம் அளவிறந்ததாகும். கணபதியின் துணைவரே! தேவர்கள் முடியிடறும் திருவடியுடையவரே! அடியேனது மும்மல வாதனை முற்று மொழியக் காட்சி தந்தருளிய பரிசுத்த சொரூபரே! எனது வினையிருளகல உதயமாகிய ஞான சூரியனே! உமது திருநாமத்தை ஒருதரம் செபித்தவர்களுக்கும் தேகப்பிணிகள், வறுமை, குற்றம், ஏமபாசம், பிரம்மலபி, எல்லாம் நீங்கிப் பரமசுக மடைவார்களென்று வேதங்கள் சொல்லுவது உண்மையேயாகும். உமது கையிலுள்ள ஞானசத்தி வேலாயுதத்தின் பரிசப் பெருமையினால் எனது சரீரம் பரிசுத்தத்தன்மையடைந்தது. உமது திருவருளால் யான்எவரும் அடைதற்கரிய உமது திருவடித்தொண்டு அடையப் புரிக என்றனன். அவன் மொழிகேட்ட முருகக்கடவுள் திருவுளமிரங்கி உனது விருப்பம் யாதென்று வினவ, யான் இப்போதுகொண்டுள்ள மயில்வடிவோடிருக்கவும், வேதங்களின் முடிவிலும், தவமுனிவர்களது அநுபவ முடிவிலும் விளங்குகின்ற உமது திருவடிகள் என்மீது பொருந்தியிருக்கவும், யான் அதனைச் சுமந்து திரியவும், குறைவில்லா வரங் கொடுத்தருள வேண்டும். அடியார்கள் பரவும் தோத்திரமாலையணிந்த புயங்களை யுடையவரே?

என்று பலவாறு துதிப்பதைக்கேட்ட குகக்கடவுள் நீ விரும்பியவாறு அளிப்போமாயினும் நீ அசுரப்பிறவியிலமைந்து பலதீங்கு இழைத்துள்ளாய். அவை முற்றுங் கழியுமாறு மலைவடிவமாய் ஒரு வருடம் இருந்து தவஞ்செய்வையாயில் எம்மைத் தாங்கும் பேறு பெறுவாய் என்று திருவாய்மலர்ந்தனர். அதுகேட்டசூரன் தேவரீர்திருவாக்கின்படி செய்வேன். அது எவ்விடத்திற்செய்வதுஎன,

பெண்ணையாற்றிற்கும்விந்தியபர்வதத்திற்கும், மத்தியில் என்றோத லும் அவன் வணங்கித் தவஞ்செய்யச் சென்றான். சென்று தொண் டைநாட்டியினிடத்து மயில்மலையாய்வடிவுகொண்டு சூரன் விளங்கி முருகப்பெருமானை நோக்கித் தவஞ்செய்துகொண்டிருந்தான்.

சூரபன்மன் இவ்வாறு மலைவடிவாய் வழிபட்டு நிற்கையில், வல்லி தேவசேனை சமேதராகிய முருகக்கடவுள் காட்சியளித்துப் பொதியமலையில் விளங்கும் அகத்தியமுனிவருக்குப் பிரணவப் பொருள் விரித்தோதிய தமது அற்புதத்திருவாய்மலர்ந்து நீ இங்கு செய்த தவத்திற்கு யாம் மிகவும் மகிழ்ந்தோம். உன்னை நமது அடிமையாக ஏற்றுக்கொண்டோம். பலவித நிறபேதச் சிறப் பமைந்த தோகைவிரித்து வல்லமை மிகுந்த மயில்வடிவுகொண்டு நம்மைத் தாங்குக என்றருளியது கேட்டு, அவ்வாறே நின்றனன். முருகப்பெருமான் அதன்மீது ஆரோகணித்து மயில்வடிவாய் விளங்கும் சூரனைநோக்கி உனக்குவேண்டும் வரம் இன்னம் யாதெனச் சொல்வையாகில் அளிப்போமென்றனர்.

அது கேட்ட சூரன் மனமகிழ்ந்து உமது திருவடியைத் தாங் கப்பெற்றேன். மனோவாதனையற்றேன். எனது தவமும் உமது அருளும் விளங்கும்பொருட்டு, எனது ஓர்கலை இங்கு மலைவடிவா யமையவும், அது மயிலமலை என்று பேர்விளங்கவும், அதன் மீது தேவரீர் தேவிமாருடன் எழுந்தருளி நின்று, வணங்கும் அடியார் கள் விரும்பியவரங்களை அநுக்கிரகிக்கவும் வேண்டும் என்றனன். அது கேட்ட முருகக்கடவுள் உனது அமிசம் இங்கு மலைமடிவா யிருக்கில் ஈசுரசாபத்தால் பின் ஒருகாலத்தில் சங்குகன்ன னென்பான் தவஞ்செய்ய இங்கு வருவான். அவனுக்கு அருள் புரிய யாம் வருவோம். அதுமுதல் இம்மலையில் தங்கி ஆன்மாக் களுக்கு அருள்புரிந்து உனது எண்ணத்தை நிறைவேற்றுவோம் என்றருளி மயில்வாகனத்துடன் திருக்கயிலாயமலையின் சார்பான கந்தகிரியடைந்து விளங்கினர். ஆதலால் அந்த மயிலமலை உலகத் தில் நித்தியமாய் விளங்கி அறிஞர்கள் மனமாரத் துதிக்கப்படும். அங்கு சென்று வேலாயுதந்தரித்த குமரக்கடவுளைத் தியான சிந் தனை புரிந்து வழிபடுவோர் எல்லா நன்மையும் பெறுவார் என நாரதர் கூறி முடித்தனர்.

## நான்காவது

# பாலசித்தர்தவப்புரிசருக்கம்

தண்டை கொண்ட தனித்தொடை பூண்டுளான்
தண்டை செய்பவர் தம்மைத் தடிந்திடத்
தண்டை யங்கரந் தாங்கிய மொய்ம்பினன்
தண்டை யங்கழற் சந்தத மேத்துவாம். (௧)

என்ற சூத முனிவர னின்னரு
டுன்று பாலசித் தன்றவத் தூய்மையை
யன்று நைமிசத் தாய தவத்தர்க்கே
யொன்று மன்பி னுரைத்திட லாயினன். (௨)

### வேறு

என்றியாழின் முனிவரனு மிசைத்துப்பின்ன ரவ்வுழியி
னின்று விடைகொண் டெழுந்தருளா நின்றானந்த முனியுரைத்த
வன்றேமகிழ்கொண் டடியர்குழா மருகிற்சூழ்ந்து வரவெழுந்து
சென்றான்மயிலை மலைநோக்கிச் சீலமுயரும் பாலசித்தன். (௩)

தேங்கும்பலவுஞ் சூதமுமுட் செறிமாதுளையு நரந்தமுந்தா
றோங்குங்கமுகுங் கதலிகளு மொருங்குநெருங்கும் பொழில்சூழ்ந்த
பாங்குதோறு முனிவர்குழாம் பயிலுந்தவச்சா லைகள்பலவா
யாங்காங்கமுதத் தடநிறைந்த வணிமாமயிலை மலைகண்டான். (௪)

கணியாயுருவ மெடுத்துமுனங் கன்னிவள்ளி தன்னைமணந்
தெணிவந்தடையுந் தொண்டர்குழு வெல்லாந்துலங்கக்கதியருளித்
தணியாவருள்கொண் டிலங்கியநந் தாயாஞ்சேயன் புடனமர
வணியார்ந்தொளிரு மலைச்சார லார்ந்தவளங்க ணோக்குவனால் (௫)

இடியேறொளிப்ப வளிசலியா திருப்பவுறையை மாலகலத்
தடியானதுவுஞ் சொலிப்படங்கத் தபனன்கிரணந் தனையொடுக்கப்
படியிலதிர்த்து மூச்செறிந்து பரவுமதநீர் சொரிந்திரண்டு
வடிவாந்தந்தம் விழிகாட்டி மஞ்சையிகழ்குஞ் சரங்கண்டான். (௬)

நமதுமரபி லொருபுலிக்கு நன்மையளித்த வொருமுதல்வன்
றமதுபொருட்சேய் வரிலன்றன் றளைவணங்கிக் கதிபெறுதற்
கமைதியுடனிங் குறைவமென வண்ணுந்தகைபோற் குயவரிகள்
சுமதிபெறுமா முனிவரைப்போற் றுன்னுமுழைக ணோக்கினனால்.

காலையடக்கிப் பொறிபணத்தைக் காணுதடக்கி யதிகரிக்கு
மாலையடக்கி யறிவொண்ணு மாந்தர்தம்மை வாயடக்கித்
தோலையடக்கா துதிர்த்துவளர் தூயதவஞ்செய் முனிவர்கடம்
பாலையடக்கு மாசுணங்கள் பயிலுமழைகைப் பார்த்தனனால். (அ)

எங்களரிவை மணவாளர்க் கின்பந்தந்திவ் வுலகமுயத்
தங்கவிருத்து மலையிதுநீ சார்வாயென்று நெறிகாட்டி
யங்கத்திசையிற் றனைமுன்னு வழைத்துக்கொடுபோ வனபோல
வங்கப்பொறிய செங்கோட்ட வாமானினமுன் செலக்கண்டான்.

கயிலைக்கிழவ னருளிளஞ்சேய் கானக்கிழத்தி முலைதழுவிப்
பயிலுங்குமர னவுணனெனும் பரிமாமயிலை யுகைத்ததனற்
செயலெத்திறமோ யாமெல்லாஞ் சேர்ந்திங்கணித்தா யிருப்பமெனி
லயிலானிவர்வ னென்றிடல்போ லகவுமயிலி னினங்கண்டான்.(௧௦)

கொய்யும்புனத்தி லஞ்சுகமே முதலாங்குருகு குழாங்குழுமிப்
பையமுதிருந் தினையருந்திப் பரிந்தங்கன்று பாரின்க
ணுய்யுமாறு தமைப்புரந்தார்க் குழுகணுறுங்கா லொருவிவிடும்
வெய்யருரிமை பாராட்டும் வியப்பைக்காட்டக் கண்டனனால். (௧௧)

முல்லைத்திணையிற் பலகானு முதிருமமுதிற் குழலூதி
யெல்லைதோறும் போயுலவு மெழிலானிரையை யொருங்காக்கிப்
புல்லார்வித்துப் புனல்காட்டிப் போற்றுமசோதை மகன்போலச்
செல்வப்பொதுவ ருறைந்திருக்குந் திருவைப்பார்த்தான் சித்தர்பிரான்.

எங்கள்பெருமான் சின்னளி னெய்துவானிக் கிரித்தலத்தி
லங்கண்ணவற்குக் கனிநீழ லரியசுகந்த மளிக்கவெனத்
துங்கவலாரி யைந்தருவைச் சுவர்க்கமொரீஇக் கொணர்ந்திங்ஙன்
றங்கநிறுவுந் தகைபோலத் தளிரார்தழைபூம் பொழில்கண்டான்.

முருகன்வருவா னிம்மலைக்கு முப்போதினுமன் னோன்மார்பிற்
றெரியலாக வேண்டுமெனச் செழித்துமலரேந் தினவனைய
மருவுமதுவும் பொதிந்திருக்கும் வண்ணக்கடம்பு வரிபாட
வருகிற்செறிதல் சுருதிநிலை யறியுமுளத்த னோக்கினனால். (௧௪)

ஒருவர்க்கேனு முதவாம லுண்ணுமற்றன் னுடல்வருந்தி
யரிதிலீட்டி வைத்துநிதி யலைக்கப்புகுந்தோர்க் கீகுநர்போன்
மருமாமலர்தோ றுங்கவர்ந்து வந்தோர்தம்மைக் கடிந்துமது
பெருகவீட்டி யிழந்திடுமீ பேய்போலலைகின் றனகண்டான். (௧௫)

கண்ணுற்றினைய வளனனைத்துங் கருதுமுள்ளங் களிகூர்ந்து
விண்ணுற்றண்ட மேவுதலான் விண்ணோர்க்கணித்தா யவர்பரவுந்
தண்ணுற்றிலகும் பொழிற்றோகைச் சைலப்பொலன்மாமுகட்டேறி
வண்ணக்கமலச் சுனையருகில் வந்தவ்விடத்தின் வளநோக்கி. (௧௬)

வேறு

ஆங்கணச் சுனைநீராடி யரும்பொடி பூசியக்கந்
தாங்கிநன் மலர்களாதி தான்கொடு பூசையாற்றி
நீங்கரு பொழிலினுப்ப ணெடுநிலா மணிக்கற்பாறைப்
பாங்கினி தமர்ந்துவைவேற் பரமனைப் பரவியேத்தி. (௧௭)

வலமிட மெனுங்குறங்கின் மற்றக்கால் மாறியேற்றி
நலனுறு பதுமமென்னு மாதன நண்ணியோர்கை
யிலகுறு மருமஞ்சேர்த்தி யிலங்குமுத் திரையோர்கையிற்
றுலங்குற வமர்ந்திலங்குந் தாமலர்க் கண்முகிழ்த்தே. (௧௮)

பயிலிய மானன்றன்னைப் பரிதியொண் மதியிற்பண்பா
வியலுற முறையிரேசித் தேற்புழிப் பூரித்துள்ள
மயலறக் கும்பித்தோங்கி வளர்தரு மூலத்தீயை
யயமதி மண்டலத்தின் முட்டியின் னமுதமார்ந்தே. (௧௯)

இன்னணம் பிராணாயாம மியற்றியைந் தவத்தைநீங்கி
மன்னிய மானனுள்ள மருவிய காட்சிதன்னிற்
றுன்னிய பிரத்யாகாரந் தூயித யாதியைந்தா
நன்னிலை பொருந்தவுள்ள நாட்டுதா ரணைபுரிந்தும். (௨௰)

இந்திரி யாதிமாறுந் தத்துவச் சேட்டையெய்திப்
பந்தமா ருடலினுற்றும் பற்றக லான்மா தன்னை
யந்தமாய் நோக்கவெய்திச் சமாதியு மினிதினுற்றி
நந்தலி றனுவினன்மா நலம்பெற வினிதிருந்தும். (உக)

வருபுறக் கரணமுள்ளா மாண்புறு கரணஞ்சேர்த்தி
யொருமையா மனத்தைத்தூயான் மாவினி லொடுக்கியின்ப
மருவுமான் மாவைமுத்தி வரதனுங் குமரனென்னும்
பரம்பொருட் கூட்டியின்பம் பயிறவ யோகத்தற்றான். (உஉ)

வேறு

இன்னணமோர் முப்பானைந் தாண்டுகாறு மினியதவ முணவின்றி யியற்றிநின்று,மன்னுமெழிற்குமரன்வரா திருப்பப்பின்னும் வலியதவஞானவபி ராகந்தன்ன, லன்னவனையுளச்சிறையி லடைத்தன்பாகு மடற்கயிற்றாற் கட்டியிமைப் போதுமாறு, துன்னியுற நோக்கியழ னுப்பணின்றே யொப்பரியதவம்புரிந்து முறுமையாலே. (உங)

பெருமானைக்குமரனையன் பாகமேவும் பெண்மானைவனமானுட் களிக்கமுன்னம், வருமானைக்குறவர்குலம் வளர்த்தமானை வடிவெல்லாந் திரண்டுருவாய் வந்தமானைத், திருமானைக்கலைமானை யேவல்கொண்டு திருவருள்செய்திடுமானை யிடத்தில்வைத்து, மொருமானைக்கரத்தணிந்தோன் மருகியாகி யுறைமானையுளமனையி லுவப்பவைத்தே. (உச)

வானையொரு குடைநிழலிற் செங்கோலோச்சு மகவானைக் கண்மணியா மகளைச்செந்தேன், சோனைமலர்க்கொன்றைமுடி வதனமோரஞ் சோனையகமலர்த்துமரு மகளையெம்பெம், மானை யொருகுருபரனை வசனப்பொற்பூ மானைமணந்தோற்குமரு மகனை வேற்கை, யானைமனமகிழ்த்துமின்ப வமுதைத்தெய்வ யானைதனை யுளமெனுஞ்சே வகத்திருத்தி. (உரு)

இருகரமுந்துவா தசாந் தத்தின்மேலே யேற்றியிருநிலத் திடைக்கா லங்குட்டத்தை, மருவநிறீஇக்கண்ணுகும் புலத்திற்சற் றும் வந்தடையாதிமையிரண்டு மலர்த்தியுள்ள, மொருமையதாப்

புற்கலனி லொடுக்கிமூலத் துறுங்கனலைமதித்தலத்தி லோங்கமூட் டிக், குருபரனுங்குமரனுக்கா ருயிராமந்தக் கோதையரைக்குறித் தரிய தவம்புரிந்தான். (உசா)

அரியுருகவயனுருக மசவான்வாறு ரண்டர்களெலாமுருக வருக்கன்சோமன், றெரியுமழன்முதலியவைம் பூதம்யாவுஞ் சித்த மெலாமொத்துருகத் திங்கள்சூடுங், கரியுருகக்கணங்களெலா முருக வைவேற் கந்தனுளமுருகாத விந்தைதன்னைத், தெரியும்வள்ளி நாயகியா ளுருகியெம்மான் றிருச்செவியெலாமுருகச் செப்ப லுற்றாள். (உஎ)

வேறு

இன்னல்செயுமவுணர்சமர்க் காற்றாதுகற்பகநா டிழந்து வானோர், மன்னவன்மண் ணுலகினிடை வேணுவனந்தனிற்புகுந்து மலர்த்தாளேத்தப், பொன்னுலகந்தனையளித்திந் த்ராணிதிருமங் கலத்தைப் பூணச்செய்த மின்னவிருமிலைவடிவேற்சுமந்தமலர்க் கரத்தானே விண்ணோர்கோவே. (உஅ)

பதினாறுகலைமதியை யோராறுமுகமதியாற் பழித்தவேந்தே, விதிநாறுமலர்முடிக ளொருநான்கும்பொறிகலங்க விசைந்து குட்டி, யதினாறுவலையெறியுஞ் சடைப்பரனுக்கோம்பொருளை யரு ளுங்கோவே, வதிநாறுங்கமலவெழி லழித்திடும்பொன்னடிக்கமல வாழ்வேபோற்றி. (உகூ)

என்னவருந்துதிநவின்று தேவர்சேனாபதியை யினிதுநோக்கி, மின்னுலவுஞ்செங்கதிர்வேற் கரத்தோனேகைலைமலை மேவுஞ்சங்கு, கன்னன்மயிலோங்கறனி னமைக்குறித்தங்கரியதவங் கடினமாகப், பன்னெடுநாளாய்வருந்தி யுஞற்றுகின்றானதனாற் பரிவுகூர்ந்தே.

அம்மயிலைக்கிரியிடைநா மெய்தியவனுளவிருப்பை யளித்தல் வேண்டுஞ், செம்மையொடுமெனக்குறவர் மடமானங்குரைத்திட வச் செவ்வேள்கூறுங், கொம்மைமுலையுமைபாக னன்னவன்பாலப சாரங் குறித்துமுன்னம், வெம்மையினிற்றருஞ்சாபத் தானரனைப் புவியினிடை மேவினனால். (ஙக)

சங்கரன்றனருமதிக்கு முரணாகவம்மயிலைச் சயிலத்தேகி, யங் கவனுக்கருளன்முறை யன்றெனமேனிகழ்வெண்ணி யண்ணல்கூற, மங்கைசிகாமணியணங்கு மாநிதியாங்குறவர்குல மடமான்பின் னுஞ், செங்கமலக்கரங்குவித்துப் பதந்தொழுதுள்ளூரிமையுடன் செப்பாநிற்கும். (௩௨)

எவ்வண்ணங்கொடுஞ்சாப மெய்தினையினுநம்மை யினிதிற் போற்றி, யொவ்வரியதவமியற்றி வருந்தலுற்றனைதமின்மிக் குவ கையெய்தி, யெவ்வமிலாதவன்பரித்த சாபமின்றேசென்றகற்றி யினிமைசெய்தல், செவ்விதெனவுரைத்துமுளத் தன்பினொடு மெந்தைசிந்தை செய்யான்போல. (௩௩)

நங்காய்நீநவின்மாற்றந் தக்கதன்றுநாமதனை நயவோநீமற், றிங்கினிமேற்பகரலென வுரைத்துமொருவிளையாட்டி னெந்தாய் பின்னு, மங்கலமாமநந்தமொழி கூறியுளங்களிசெய்தும் வருந்திப் பல்கால், சங்குகன்னற்கருஞ்சாபந் தவிர்த்தருளவேண்டுமெனச் சாற்றிநின்றாள். (௩௪)

அண்டமெலாந்தனதருளாற் கண்டவனையாரணத்துக் கப்பா லானைப், பண்டென்னைப்பாலகனைப் பயந்தருமைசெய்தானைப் பர மன்றன்னைக், கண்டநிலையிற்களங்கங் கண்டுவிண்டாதியர்களையாங் கண்ணாற்காண, மண்டலத்தில்வைத்தானை மனம்வருந்தவைத்தானை மதிவைத்தாயால். (௩௫)

ஆனதனாமதருகி னில்லாதிங்ககறியென வண்ணல்சீற்றந், தானடைந்துநவிலவதை மானறிந்தவ்விடையகன்று தகுதெய்வா னைத், தேனையுந்தன்னோடுவரும் பான்மைசெயவிருவோருந் திகழ் வளஞ்சேர், மானமயிலைக்கிரியிற் றவம்புரியுஞ்சித்தனிடம் வரநினைந் தார். (௩௬)

வேறு

சித்தன்மயிலைவெற்பினிடைச் சிவன்மாமகனை யுள்ளத்தின், புய்த்துப்புரிந்த தவமுரைத்தா முயர்வாமயிலைப் பொருப்பி னிடைத், தத்தையனைய மொழிவள்ளி தந்திமகிழும் பைந் தொடியோ, டொத்துமுருகற் கிதமுரைத்து முறுதால்வருவ துரைப்பாமே. (௩௭)

பாலசித்தர்தவம்புரி சருக்க முற்றிற்று

ஆக திருவிருத்தம், ௩௦௮.

(வசனம்.)

முனிவர்களே ! இவ்வாறு கூறிய நாரத முனிவர், பாலசித்தரிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றனர். அது கேட்டுமனமகிழ்வுற்ற பாலசித்தர் அடியார் புடைசூழ மயூராசலம் செல்ல நினைத்து, தமதாச்சிரமம்விடுத்து, தென்னை பலா மாதுளை கமுகு வாழை முதலிய சோலைகளால் நெருங்கப்பெற்று, ஆங்காங்கு தவசிகள் கூடித் தவம்புரியும் சாலைகள், அமிர்த நீர்த்தடாகங்கள் நிறையப்பெற்ற அழகிய மயிலமலையைக் கண்டனர். அவ்விடத்துப் பல மான்கள், யானைகள், உலாவுவதையும், புலிகள் முழையுள் அடங்கியிருப்பதையும், சர்ப்பங்கள் அடைகிடப்பதையும், மயிற் கூட்டங்கள் அகவி நடமிடுவதையும், கிளிக் கூட்டங்கள் கொஞ்சிக் குலவுவதையும், பசுக்காப்பு இயற்றிவேய்ங்குழல்ஊதிக் கண்ணனைப் போல் இடையர்கள் விளங்குவதையும், தேவலோக தருக்களையொத்த மலர்விருக்ஷங்களையும், உலோபிகள் உண்ணாமலும், உதவாமலும், பொருளீட்டிக்கள்ளராலிழத்தல்போன்று தேன் சேர்க்கும் ஈத்திரள்களையும், பர்வதசிகரத்தில் அமைந்த தாமரைத் தடாகங்களையும் கண்டு மகிழ்ந்தனர்.

அந்தச் சுனையிற் பாலசித்தர் மூழ்கி அரியதிருநீறு, உருத்திராக்கம் தரித்துப் பலசுகந்த புஷ்பங்களால் தமது நியமமான அங்கலிங்கபூசை முடித்துச் சோலையின் நடுவில் சந்திரகாந்தப்பாறையொன்றில் பதுமாசனமாயுட்கார்ந்து மார்புசேர்ந்தவலக்கையிற் சின்முத்திரையும், துடையின்மீதமைத்த இடக்கை அமைப்பும் கொண்டு பிராணவாசியை ரேசகபூரகங்களால் சமப்படுத்திக் கும்பித்து மூலாக்கினியைச் சந்திரமண்டலத்துக்குச் சுவாலிக்க வைத்து அமுதமருந்தி இவ்வாறு பிராணாயாமமும், அதன்பின் பிரத்தியாகாரம், தாரணை, சமாதி, முதலிய அங்கங்களுமமைந்த மகா யோகத்தில் நிலைத்து மோக்ஷகர்த்தாவாகிய குமாரக் கடவுள் என்னும் பரம்பொருளை வழிபட்டிருந்தனர்.

இவ்வாறு முப்பத்தைந்து வருடம் ஆகாராதிகளை விடுத்துக் கடுந்தவமியற்றியும் காட்சிதராமையால் ஞானவைராகமிகுந்து அந்த அறுமுகப்பரமனை உள்ளச்சிறையிலடைத்து அன்பெனும்

கயிற்றுற்கட்டி இமைப்பொழுதும் மாருமல் தியானபாவனையிற் கொண்டு நிற்பதாகிய இணையற்ற தவத்தையியற்றியும் அப்பெருமானது தெரிசனம் சித்தர் பெற நேரவில்லை. அதன்பின் ஸ்ரீ கந்தக்கடவுளது இருபுறத்தும் இச்சை கிரியை வடிவாய், அமைந்து விளங்கும் அருட்சத்திகளான வல்லி தேவசேனு என்னும் தாய்மார்களை இருதய கமலத்தில் அன்போடு சிந்தித்து வழிபடுவதானுர். இருகரமும் தலைமேற்றாக்கி, பூமியிற் காற்பெருவிரல்களை யூன்றிக் கண்ணிமைபொருந்தாமல் மேனுற நிமிர்த்தி மூலாக்கினியை மூளச்செய்து யோகத்தைப் புரிந்தனர். அவ்வாறிருக்குங் காலத்து, கந்தகிரியில் தாய்மாரிருவரும் முருகப்பெருமான்திருவுள்ளம், பாலசித்தரது தவத்திற்குச் சிறிதும் நெகிழாதிருப்பது கண்டு அவரது திருச்செவியில் மனமுருகும்படி பலவிதத்துதி கூறிகயிலாயத்திலிருந்த சங்குகன்னன் மயிலமலையில் வந்து நம்மைக் குறித்துக் கடினமாகப் பலநாள்வருந்தித்தவம் புரிகின்றுன். அம்மலையில் அவனுக்கு எதிரிற்காட்சி கொடுத்து அவன் விருப்பையளித்தல் வேண்டும் எனக் கூறிய உரையைக் கேட்டு முருகக்கடவுள் பரமசிவனுக்கு அபசாரஞ் செய்து சாபமேற்றதால் அவன் மனிதனுக அமைந்தான். ஆதலால் நாம் அவனுக்கு அருள்வது முறையன்று என எதிர்கால நிகழ்ச்சியை யுத்தேசித்துக் கூற பின்னும் பன்முறை பணிந்து அவன் எத்தகைய சாபமடைந்திருப்பினும் நம்மை அன்போடு வழிபட்டு வருந்துகின்றுனதலின் அவனது சாபத்தை நிவிர்த்தித்தருள்வதே நலமென உரைத்தும் அதைக் கருதாதவராகி, நீங்கள் சொல்லும் வார்த்தை முறையன்று என மறுத்தனர். பின்னும் வள்ளியம்மை பல முறை வேண்டலால், பரமேசுரனை மனம்வருந்தச் செய்தசங்கு கன்னனுக்கருள மனம் வைத்ததால் நமது அருகுவசித்தல்தகாது செல்க எனக்கோபத்தோடு கூற, அஃதறிந்த வள்ளிநாயகி அப்புறம் விலகி, தெய்வயானையம்மையையும் உடன் அழைத்துக்கொண்டு இருவருமாக, வளம்பொருந்தியமயிலமலையில் வசிக்கும் பாலசித்தரிடம் செல்லத்திருவுளங்கொண்டனர்.

ஐந்தாவது

# தேடிவருந்துசருக்கம்

---

கொங்கையாகிய கிண்ணமும் வண்ணமென் கொவ்வையஞ் செவ்வாயிற், றங்குமாரமிர் தங்குவளைக்கணிற் றங்குமாரருட் டேனு, மெங்களன்னையாம் வள்ளிநாயகியிடத் தேற்பதற்கன்பாகத், துங்கவேனலஞ் சாரலிற்றிரியும்வே டனையடிமறவேனே. (௧)

வேறு

இன்ன வண்ண மியன்றசித் தன்றவம்
பன்னு மாதவச் சூதனைப் பார்த்தெழி
றுன்னு நைமிசத் தூமறை யந்தணர்
பின்னி யன்றமை பேசெனப் பேசுவான். (௨)

வேறு

காதுலாவுமிரு கண்களுலாவக் கண்டுலாவுமிள மானெழில் கான, மீதுலாவுமட வோதிமமுற்றும் மேவிவந்துகதி யின்றிற நாடித், தாதுலாவுமலர் வாவியுலாவுந் தகையுலாவுதனி நடையி னுலாவிச், சூதுலாவுநகின் மாதிருவோருஞ் சுபமுலாவுமன தோடு நடந்தார். (௩)

நிலைவருந்திறம ருந்தவநாளு நெஞ்சகங்கொடுவ ருந்திநெகிழ்ந் தம், மலைவருந்துநெறி நின்றவன்மாடே மயில்வருந்துமிகு சாயலி னல்வன், சிலைவருந்துநுத லாரிருவோருந் திகழிளம்பிடிக ணடை யின்வருந்தக், கலைவருந்தியுணர் வோரும்வருந்தக் கால்வருந்தி யதர் மேயினரன்றே. (௪)

கனிநெருங்குசினை யிற்சிறைமேவுஞ் சானெருங்குபற வைக் குலமெல்லாந், தனிநெருங்குவன மீதுபசந்தத் தளிரெனும்பரிசு தாவிநெருங்கப், பனிநெருக்குகுரன் மேயினகிள்ளைப் பண்ணெ ருங்கமுலை யாமலைபார, மினிநெருங்குமென வேமயிலைப்பே ரில கிடுங்கிரிநெ ருங்கவணைந்தார். (௫)

கண்டுகண்டுமுனி பத்தினிமாருங் கானகத்தில்வளர் கன்னிகையாரு, மண்டொணாதமகி மைப்பெறுசூரு மங்குதங்கிவளர் மற்றுளபேருந், தண்டனிட்டடிப ணிந்துவழுத்தித் தங்கள்கண்குளிர நாடினரேக, வண்டுகிண்டிமது வுண்டகடம்பன் மங்கைமாரிருவருங்கிரிகண்டார். (௬)

மாவினிற்குயிலெ லாமிவர்தம்மை வாவெனும்பரிசு கூவிடவன்பர், நாவினிற்றுதிசெ யும்பரிசென்ன நாதமாரளிகள் கீதமிசைப்பக், காவினிற்குலவு மன்னவர்சாயல் கண்டுதன்றுசிறை மஞ்ஞையிரிந்தப், பூவினிற்பொலிபொ தும்பருலாவப் பொற்புலாவுமலை மீதிலிவர்ந்தார். (௭)

அஞ்சலித்துமுடி யேறியகையு மரியசித்தனது நீறணிமெய்யும், விஞ்சிவிஞ்சிவிழி யூறியநீரும் வெந்தணற்கொடியின் மாறியசீரு, நெஞ்சினிற்படிய நின்றிடுவீறு நிச்சயித்துவகை யம்புனன்மீறும், வஞ்சிவள்ளிதெய் வானைமினடி மனமகிழ்ந்ததிச யித்துரையாடி. (௮)

முத்தையொத்தமணி மூரலுநீருண் முகிலையொத்தளிக ணிறைகுழலேருந், தத்தையொத்தமுத மூறியசொல்லுஞ் சாருநற்புருவ மாமிருவில்லுங், கொத்தையொத்திடுப யோதரமெய்யுங் கொண்டிளம்படிவ மாயருள்செய்யுஞ், சித்தகன்னிகைய ராய்மயிலேறுந் தேவனுக்குரிய தேவியர்நின்றார். (௯)

சித்தனுக்கெதிரி னின்றிடுமாதர் திவ்யநல்லுருவை நாடிவியந்தே, யித்தகைக்கொளிவ ரேமுருகன்ற னினியதேவியர்களென்றுநினைத்துப், பத்தியோடவர்கள் பாதமிறைஞ்சிப் பன்மலர்த்திரள்க டூவிவணங்கி, வித்தகத்தரிய நீவிரியாவர் மேயகாரணமெ னோதுமினென்றான். (௧௦)

அந்தநல்லுரையை யெந்தமையாளு மன்னைமாரிருவருஞ் செவிகேளா, வந்தவன்பதிக ரித்துயர்சித்தன் மாமுகத்தையினிதாயெதிர்நாடி, யெந்தைமார்களுயர் சித்தர்களிங்ங னெய்துவார்களென வுள்ளமுவந்தே, விந்தையாகவுறை யுஞ்செயலுன்னி மேவினங்கனிவி லென்னவிளம்பா. (௧௧)

அன்னைதந்தையர்கள் போலவிரும்பி யாதரித்திடுவை யென்ன வியந்தே, மன்னுமெய்த்தவமி யற்றியநீரான் மங்கைமாரிருவ ருங் களியெய்தி, யிங்கிலைக்கணை யாடருமாறே யின்றுவந்ததென மன்றவுணர்ந்து, சொன்னவாசகம றுக்கிலனும்பாற் றெண்டுசெய் குவலெ னத்துதிசெய்தான். (கஉ)

அற்றைநாண்முதலதாயிருவோர்க்கு மந்தமாமயிலை நற்கிரி தன்னிற், கற்றுணர்ந்தநெறி நின்றிடுசித்தன் கனியுநீர்மையுப சார மதாக, நற்கனிக்குவைகி ழங்குகளாதி நாடொறுந்தவறி டாது கொணர்ந்து, சிற்றடிக்கணவை வைத்துவணங்கத் திவ்யநல்லமுது செய்துமகிழ்ந்தார். (கங)

வள்ளிநாயகியெ னும்மடமானும் வானநாயகியெ னுங்கனி தேனும், விள்ளொணாவுவகை வெள்ளமழுந்தி விச்வகன்மனவன் மேவநினைந்தே, தெள்ளியோர்பரவு மம்மகமேருச் சிகரநீண்முடிக ளென்னுநிவப்பின், வெள்ளைமேகவுரு வெள்கிடும் வண்ணம் வேள் வியப்பவொரு மாளிகையோடும். (கச)

சூளிகைப்பயிலு நிர்த்தவரங்கந் துப்புணற்குரிய தாகியவில் லங், தாளுலாவிவரு தற்கொருகூடந் தனையுமுன்புதரு கென்ன வியந்தே, கோளுலாவிவரு மாறுயர்வாகக் குலவுமாமணிகு யிற்றி விளங்க, நாளுநாளுமிவை நிலவுறுமாறு நற்சிருட்டியிலி யற்றின னம்மா. (கரு)

அந்தமானுபரி கைத்தலமீதே யரிவைவள்ளிதெய் வானை யெனும்பே, ரெந்தமன்னையர்க ளன்பின்வதிந்தே யேழ்புவிக்குநல னெய்துறுவண்ணந், தந்தையென்றருகு நின்றிடுசித்தன் றன்முகத் தைநனி யன்பொடுநோக்கி, யிந்தமாளிகையி லீசனயன்மா லியா வராயினும்வ ராதுதடுத்தே. (கசு)

காவல்கொண்டமர்க வென்றதிகாரங் கருணையோடினிய கட் டுரைகூற, வாவலாயதனை மேற்கொடுசித்த னத்திறம்புரிவனென்று களிப்பா, யோவிலாமலிர வும்பகலும்மவ் வுபரிகைக்கெதிர்து வார நிலைக்கண், முவராயினும்வி டாதுதடுப்ப முன்னினன்பதிய நின் றனனன்றே. (கஎ)

காலைமாலையுச் சிப்பொழுதென்னக் கழறும்வேளைகடொ றுங்கனி வாயப், பாலசித்தனறு மென்கனிமுதல பரிவினல்கினன ருத்து புகாப்பச், சீலமிக்குமகிழ் வோடெழில்வள்ளி தெய்வயானையெனு மாதிருவோருஞ், சோலையாருமயி லைக்கிரிமீதே துன்னிவைகியபி னேயொருநாளில். (கஅ)

வேறு

வெள்ளி யங்கிரி மேவியி ருப்பவன்
புள்ளி மாமயி லூர்ந்திடு புங்கவன்
வள்ளி யானை மணுளன் களங்கிலாத்
தெள்ளி யோருள மேநடஞ் செய்பவன். (கசு)

பந்த முற்றும் பறித்தருள் செய்பவ
னெந்தை யாகவந் தெந்தமை யாள்பவன்
கந்த மொய்க்குங் கடம்பணி திண்புயன்
முந்து சஞ்சித முற்று மகற்றுவோன். (உ0)

சத்தி யத்தலை நின்ற தயாபரன்
சத்தி வித்தையில் வைத்த சமர்த்தினன்
சத்தி முத்தந் தருமெழிற் புத்திரன்
சத்தி தந்தெமை யாடருந் தற்பரன். (உக)

நங்க ளங்க நலியக் கடிந்தவன்
செங்க ளத்தி னசுரரைச் செற்றவ
னங்க ளங்க மரியபெண் ணுக்கினேன்
மங்க ளங்கவி மாலை யணிபவன். (உஉ)

முக்க ணக்கற்கு மூல முரைத்தவன்
பக்கு வத்தினர் பக்கலி னிற்பவ
னிக்கு விற்கொ ளிரதிம ணாளனுஞ்
சொக்கு மெய்யெழி லேந்திய சுந்தரன். (உங)

உதய செங்கதி ரொத்த வொளியின
னிதய செங்கம லத்தினிப் பேய்ந்தவன்
சிதைய மூல மலந்தெறு சிற்குணன்
சுதையெ னத்திரு நீறணி சோதியன். (உச)

சென்னை-600 008

சித்தி யெட்டையுஞ் சித்தர்க் கருள்பவ
னத்திமாமுக னன்புறு சோதரன்
முத்தி யீந்தருண் மோனப் பராபர
னித்தி யன்னிம லன்னிக ரற்றவன். (உரு)

ஒருத ரந்துதி செய்பினு மோங்கருள்
கருத ரங்கமென் றெண்ணக் கனிந்தவன்
பொருத ரம்பயி லாப்படை பூண்டுளா
னிருத ரங்க நிலைக்கரி யானவன். (உசு)

வந்த சென்மம் வராம லளிப்பவன்
கந்த நாறுங் கமலத் துறைபவ
னெந்தை யென்றடி யேத்திடக் குட்டிடுஞ்
சந்த னப்புய மாஞ்சயி லத்தினன். (உஎ)

கருத்தி ருத்திவைக் கும்படி காதலைப்
பொருத்தி விட்டவன் பொங்கும் புகழினன்
வருத்த முற்று மகற்றிடு மைந்துளான்
பருத்த மாமயி லேறிடும் பார்த்திபன். (உஅ)

இவ்வ ணம்புகழ் தங்கிய வெந்தைதான்
செவ்வி தேக்குயர் வள்ளிதெய் வானையாங்
கொவ்வை வாயிளங் கோதையர் காதலா
லெவ்வ மாறுமுன் மத்தம தெய்தியே. (உகூ)

வெள்ளி வெற்பிடை நின்றுநம் மெல்லிய
ரெள்ளி யெங்ஙன மேகின ரென்றுள
முள்ளி யங்க ணொருவிளை யாட்டுறீஇ
வள்ள றேடி வருந்தி வருவனால். (௩0)

மாய வன்பதி யேகவம் மாதவன்
றாய வன்பிற் றுலங்கி யெதிர்கொளீஇச்
சேயி வண்செலுஞ் செய்தியெ னேவெனத்
தாயி னென்னை யளித்தவன் சாற்றுவான். (௩க)

கான கத்திற் கிடைத்திடு கன்னியும்
வான கத்திடை வந்திடு பொன்னியும்
போன திக்கையிப் போது புகலென
யான றிந்தில னென்றிசைத் தானரோ. (௩௨)

வேதன் வாழிட மேவின னங்கவன்
பாத தாமரை சூடிப் பழிச்சியெந்
நாத னேவந்த தென்னென நம்முயிர்
மாத ராரிங்கு வந்தன ரோவென்றான். (௩௩)

மான வேடர் வளர்த்திடு மன்னையும்
வான நாட னளித்த மடந்தையும்
யானுய் தற்கிவ ணண்ணுவ ரோவெனாத்
தேன லம்புறு சேவடி போற்றினான். (௩௪)

அந்த ரந்தனி லேகின னங்குறை
யிந்தி ரன்மல ரேந்தி யெதிருறீஇ
வந்த டித்தல மன்னியிங் கெய்தின
தெந்த வண்ண மிசைத்தருள் கென்றிட. (௩௫)

மான ளித்திடு மானுமோர் தெய்வத
யானை தந்தரு ளானையு மிங்ஙனம்
போன வோவெனப் * போகியும் போனதை
யான றிந்தில னென்ன விறைஞ்சினான். (௩௬)

ஆத வன்பதி யண்ணின னங்கவன்
பாத தாமரை சூடியிப் பக்கலி
னாத னேயெய்தும் வண்ண நவிலெனத்
தாதை யாயெனை யாள்பவன் சாற்றுவான். (௩௭)

குறவர் தங்குல தீபமுங் கோவினுக்
கிறைவர் தங்குல மேத்தருஞ் செல்வியு
முறுத லிங்ஙன முண்டெனிற் கூறென
வறிகி லேனென் றவனடி வீழ்ந்தனன். (௩௮)

* போகி - இந்திரன்

இந்து வின்றல மெய்தின னங்கவன்
வந்த ருச்சனை மாண்பி னியற்றியே
சிந்தை யாலுந் தெளிவருஞ் சோதிநீ
யெந்த வண்ணமிங் கெய்திய தென்றனன். (௩௯)

உன்னை வேணியில் வைத்தவ னெண்கர
மன்ன வைத்திடு மானின மானையும்
பொன்னி லத்தர சன்றரு பொன்னையு
முன்னி யென்னவிங் குற்றில ராலென்றான். (௪0)

இன்ன னம்பல தேவ ரிருப்பெலாங்
கன்னி தந்தருள் காதல னடியே
துன்னு யாழ்கடல் சூழ்தரும் வையகந்
தன்னில் வந்தனன் றெயென வந்தவன். (௪௧)

பத்ர பீடநே பாளம்பி ரமாண்டஞ்
சித்த ராச்சிர மஞ்சிவ லோகமே
முத்த மா* ரவிமுத்தங்கங் காநதி
நற்று வாரந்தூ நாசிமா நைமிசம். (௪௨)

மந்த ரக்கிரி வாரிச மாவரை
யந்த ரத்துய ராடர வக்கிரி
சந்த்ர தானஞ் சுமிந்திர மோடய
வந்திசொன்ன மலையொ டிராவதி. (௪௩)

குல்லை யின்பெயர் கொண்டெழி லார்வன
மெல்லி சாரதை மேவி யிருப்பிடஞ்
செல்லு தற்கரி தாஞ்சிகண் டம்மொளிர்
சொல்லொ ணுப்புகழ்ச் சூல வரையுடன். (௪௪)

ஸ்ரீசைலம் - திருக்கோகர்ணம்

மடன்ம லர்ச்சுனை மல்கு பருப்பத
முடியைக் கண்டவர் மூளும் பிறவிதீர்த்
தடரு மோக்கந்தந் தாண்மல்லி கார்ச்சுன
மடல்கம் பத்த னசைத்திளை நற்றலம். (௪௫)

---

* அவிமுத்தம் - காசி

### திருவாலங்காடு

முஞ்சி கேசியு முன்பொரு நாகமு
நெஞ்ச நெக்கு நினைந்தவ சங்கொள
வஞ்சி நீலியு ணுண மருவவு
நஞ்சி வன்னட னம்புரி நற்றலம். (௪௬)

### திருவொற்றியூர் - திருமுல்லைவாயில்

ஐந்த ருக்குழு வங்கண் மகிழதாய்
வந்த ருந்தவ மாற்றிய மாதல
மெந்தை முல்லைச் செடியின் முளைத்தெழுஞ்
சுந்த ரத்திற் சொலித்திருக் குந்தலம். (௪௭)

### திருவச்சிறுபாக்கம் - திருமாற்பேறு

ஆற ணிச்சடி லன்னெமை யாள்பவ
னேறு தேரச் சிறுத்திய நற்றலந்
தேறு மாயன் றிகிரியைத் தாங்கிடப்
பேற ளித்துப் பிறங்கிய மாதலம். (௪௮)

### காஞ்சீபுரம் - திருவண்ணுமலை

நாக மீன்றநன் ஞரி யிருந்தரு
யோக பூசை யுஞற்றிய நற்றல
மேக வண்ணனும் வேதனுங் காணருஞ்
சோகந் தீர்க்குநற் சோண கிரித்தலம். (௪௯)

### திருக்காளத்தி - திருக்குறுக்கை

பைய ராவும் பகடு முரண்கொடு
செய்த பூசையிற் சித்தி பெறுந்தல
மைய னென்றுண ராம லலர்க்கணை
யெய்த வேளை யெரித்த பெருந்தலம். (௫0)

### திருக்கழுக்குன்றம் - திருப்பெருந்துறை - திருக்கோவலூர்

அந்த ரத்துய ராரண மாமலை
யெந்தை யார்முனி வோர்களுக் கேமறைச்
சந்தை வைத்தன்று சாற்றிய மெய்த்தல
மந்த காசுர னுவி யடுந்தலம். (௫௧)

திருவிரிஞ்சை - சீகாழி

மாணி யர்ச்சனை பன்ன முடிவளைந்
தூணி னின்றெழி லுற்றிடு மெய்த்தலங்
காணி விட்டயன் முன்னோர் கழுமிடத்
தோணி விட்ட துலக்க முறுந்தலம். (ருஉ)

திருவதிகை - மாயூரம்

தம்மை நிந்தை செயுந்திருக் கேய்புரம்
வெம்மை யாக நகைத்த விழுத்தல
மம்மை முன்மயி லாக வருந்தவ
மெம்மை யாள வியற்றிய மெய்த்தலம். (ருங)

விருத்தாசலம் - திருக்கண்டியூர் - திருவிற்குடி

வித்த கன்விப சித்துக் கருடர
வத்த னார்வளர் வன்னி யடித்தலஞ்
சுத்த னேர்சிரங் கொய்திட்ட தூய்தலஞ்
சத்தி யம்மில் சலந்தரற் காய்தலம். (ருச)

திருச்செங்கோடு - திருவஞ்சைக்களம் - திருவானைக்கா - மதுரை.

வாச மாமலர் மாடச்செங் குன்றமே
மாசு தீர்த்திடு வஞ்சைக் களத்தல
மாசி லாக்கரி யன்புசெய் நற்றல
மீச னாரர சாளு மெழிற்றலம். (ருரு)

திருப்பூவணம்

பூவணத் துறும் பொன்னனை யாண்முன
மாவ ணத்தில் வகுத்த வரனுரு
வாவ லிற்கிள்ளி முத்த மளித்தலைத்
தூவ ணத்திற் றுதைந்தெழி லுந்தலம். (ருசு)

திருநெல்வேலி திருச்சிராப்பள்ளி.

தோயு நீர்மழைத் துன்பமை யாவிதங்
காயுஞ் செந்நெலைக் காத்த திருத்தலந்
தாயுமாகி யரிவையைத் தாங்கிய
நேய நம்பர னேசித் துறுந்தலம். (ருஎ)

### திருக்கோணமலை - வேதாரணியம் - திருவாரூர்.

சீரி னூர்கயி லாயத் திருமுடி
நீரி னன்மறை பூசை நிகழ்தலந்
தேரி னூற்சிறந் தேதிரு வேத்திய
பேரி னூற்றுதி யேறும் பெருந்தலம். (ருஅ)

### திருவைகாவூர் - திருவழுவூர்.

இடப மெய்யுறு மெந்தைக்குத் தன்னுரு
வடைவுடன்பர னன்றருு ணற்றலங்
கடக ரக்கரி காய்ந்தே யுரித்தணி
படன்மி குந்தே யழகுல வுந்தலம். (ருகூ)

### திருப்பறியலூர்-திருக்கடவூர்.

அக்க ணிந்தவ னன்று மகஞ்செயுந்
தக்க னங்கந் தடிந்த பெருந்தலம்
புக்க வேமன் புரண்டழப் பாதத்தா
லுக்கி ரத்தி னுதைத்த வுயர்தலம். (கூ0)

### வைத்தீசுரன்கோயில்.

தான வேதனுந் தாவு சடாயுவும்
வான வொண்கதி ரும்மலர் கைக்கொடு
பான லங்கண் டனைப்பணிந் தேத்திய
மேனி லாவி விளங்கிய நற்றலம். (கூக)

### சிதம்பரம்.

உலக மேத்திநின் றுய்யவு நற்றவப்
புலியு ஞானப் புயங்கமு நின்றெதிர்
மலிமகிழ்ச்சி மருவவும் பொன்மன்று
ணிலவு சோதி நிருத்தஞ்செய் நற்றலம். (கூஉ)

இன்ன நற்றல மேமுத லியாவுமே
யன்ன வாவி யகன்சுனை யாழ்தடந்
துன்னு மாநதி சுற்றுங் கிடங்குகண்
மன்னுங் கூவல் வளாக முழுதுமே. (கூ௩)

வானு லாவிய மாமலைச் சாரலுந்
தேனு லாவுஞ் செழுமலர்ப் பொங்கரு
மானு லாவு மருங்கட ழும்மிள
மானு லாவும் வனத்தின் வெளிகளும். (௬௪)

மாத வத்தினர் வைகிய தானமுஞ்
சாத கத்தினர் தங்கு மிடங்களு
மேத மற்ற விருடிக ளின்புறு
மோது மாத ருலாவு மகங்களும். (௬௫)

அஞ்சு கங்க ளடருஞ் சினைகளு
மஞ்சை யாரும் வனத்தும் பொதும்பரு
மெஞ்ச லின்றி விளங்கும ரன்னெழில்
வஞ்சி யார்தமை நாடி மயங்குவான். (௬௬)

என்னு யிர்க்குயி ராகி யெயினரின்
றன்னு யிர்க்குயி ராயுனைத் தந்திடு
மன்னமானுக்கு மாருயி ராய்வள
ரன்னமேயெங் ககன்றனை யென்றனன். (௬௭)

ஐந்த ருக்க ணறுதின மும்பயி
றந்த நற்கிளி யேதணந் தாயென்றன்
சிந்தை கொண்டெங்கு சென்றனை யென்பத
நொந்தி டும்படி யென்று நுவன்றனன். (௬௮)

வேறு

மலையா சலநின் றுலவும் வளியே
யலையார் தருமம் முனிவன் னகிலத்
திலையா மெனவிங் கயிலா ததெவன்
கொலையே புரியக் குலவா வணமே. (௬௯)

மயிலன் னவர்மா முகநா ணியிரா
வியலும் மதியே யுனையே யெளிதா
யயிலும் வணமெண் ணிவிழுங் குமரா
பயிலும் படிகால் பரிசே துரையாய். (௭0)

நந்தந் தொனிமுற் றினுமே நவியச்
சந்தம் பெறுதை யலர்மே யினரென்
றுந்தம் மகிழ்ோ வியகோ ரகைகாண்
முந்துந் திசையே மொழியீர் மொழியீர். (எக)

நாட்டந் தனைநா ளுநகைத் தெழிலால்
வாட்டஞ் செயுமங் கையரெய் தினரென்
றேட்டஞ் செயுநல் லுழையீ ரவரைத்
தேட்டஞ் செயலுங் கடிறத் ததுவே. (எஉ)

நஞ்சா யலைநா ணவுலா வுமவர்
தஞ்சா யன்மறைந் ததெனத் தகையா
லெஞ்சா திவணே பயிலும் மயில்காண்
மஞ்சார் குழன்மா தரைநா டுமினே. (எங)

சொல்லிற் சுகமென் பதுதீ ருங்வணஞ்
சொல்லிப் புகழ்பெற் றவர்தூ ரமெனுச்
செல்வக் கிளவிப் பயிலுஞ் சிறையார்
செல்வக் கிளிகா ளவரைத் தெரிமின். (எச)

வேறு

தன்றன்பதியைப் பிரியாது சலசத்தலரி லுறுமனங்கா, ளொன்றிக்கலவி யான்மகிழ்ந்தே யுறையுங்கருத்தை யறிந்தன மான், மன்றற்குழலார் நடைக்குடைந்து வதிந்தேமவரிங் ககன் றதனு, லின்றைக்குயர்ந்தோ மென்றேவவ் விருவரிருக்கு மிடம் புகல்வீர். (எரு)

உங்கள்வதனக் கோலமெலா மொன்ருய்த்திரட்டி யொளி காட்டு, மங்கையாரைத் துறந்தமெனு மகிழ்ச்சி யதனுன் மலர்ந் திருக்கும், பங்கேருகங்கா ளிங்கவர்கள் படருந்திசையைப் பகர் மினின்றிச், சங்கைவைத்தி ரெனிலும்மைத் தாவுமரையென் றுரைப்பேமால். (எசா)

மீனந்திரைசை வலங்குமுத மிளிருங்கமலம் வெண்முத்தம்
பானந்துயருஞ் செம்பவளம் பனிக்கண்கரங்கே சஞ்செவ்வா

யானனம்பல் கழுத்திதழ்க ளமைந்ததடமா மணங்கரசே
மானுங்கரியுங் கூடியிங்ஙன் வந்தமாற்ற மறியாயோ. (எஎ)

அருவித்திரளே மணிவடமா யணிகார்முகிலே மணிவாரா, யுருவத்துயர்ந்தெம் மடந்தையர்பா லொளிருந்தடமா முலைநிகர்த்தீர், பருவத்தினிலிங் கெமைப்பிரிந்து படருமவர்வை கிடம்பார்த்துத், தெரிவிப்பதற்கோ வோங்கலெனத் திருநாமங்கொண் டெழுந்தீரே. (எஅ)

கும்பத்தலத்தி னெழிலழிக்குங் கொங்கையாரை நீங்கினமென்
றும்பர்க்கறிவிப் பதுபோல வுயரும்பனைக்கை யெழில்காட்டிக்
கம்பமதநீர் விடுங்கரிகாள் கரமைந்துடனே வளர்களிற்றின்
றம்பியெனவுள் ளுணர்ந்தவர்கள் சார்ந்தவிடம்பார்த் துரைப்பீரே.

எமதுமடவார் புக்கவிட மெவணென்றறிந்திங் குரையாம
லுமதுவலியை யுளங்கருதி யுழல்வீராயி ஞெண்புலிகா
ணமதுதாதை முவிலைவே ளுட்டிச்சிதைத்தங் குரித்திடுவான்
மமதையொழிமின் புல்லெனும்பேர் வையமொழியத் தரித்தீரே. ()

கடத்திற்பயிலும் விலங்கெவைக்குங் கவின்சேரரசாய்விறல்பெற்றீர்
திடத்தினமது சொற்கேளீர் தேவிமார்கள் பிரிந்துறையு
மிடத்தைத்தெரிந்திங் குணர்த்திடுமி னின்றேலால காலமெனும்
விடத்தையயில்வோன் சரபமதாய் மேவியடுவான் காணீரே. (அக)

கருமாவெனும்பேர் தரித்திருக்குங் கானவிலங்கி ரிதுகேளீ
ரொருமாமதுரைப் பதியதனு ளோரீரா று கோலமுமப்
பெருமான்வழுதி யவையதனிற் பிறங்குமமைச்சத் தொழிலினராய்
வருமாறளித்தோன் சேயெனது மடந்தைமார்வை கிடந்தெரிப்பீர்.

இன்னவண்ணஞ் சராசரங்க ளியாவுமிரங்க வினவினனு
லன்னமறியாத் தனிமுதலுக் கறியொணுத்தா ரகப்பொருளைப்
பன்னுங்குரவ னெவ்வுயிரும் பரிவாய்விளங்கப் பரித்திடுவோ
னென்னவிளையாட் டோவறியே மின்னற்கடலின் கரைகாணுன். ()

வேறு

தண்ணே யெனுமைக் குழலுங் கியொளிர்
பெண்ணே யெனுமென் பிழைபே னுமிரு
கண்ணே யெனுமென் கனிவா னிறையு
மெண்ணே யெனுமேந் திழையே யெனுமால். (அச)

கிளியே யெனுமென் கிளருட் கமலத்
தளியே யெனுமற் புதமா ரமுதத்
துளியே யெனுமா மணியிற் றுனுநல்
லொளியே யெனுமோ வியமே யெனுமால். (அரு)

மருவே யெனுமியா வும்வழங் கிடுபைந்
தருவே யெனுமென் றனிநா யகமா
முருவே யெனுமுன் னுவதற் கரிதாந்
திருவே யெனுமென் செய்வே னெனுமால். (அசு)

நிதியே யெனுமென் றுயர்நீக் குபெரு
நதியே யெனுநற் கலையா யிரமார்
மதியே யெனும்வந் தெதிர்நிற் கவிது
தகியே யெனுமித் தடையே னெனுமால். (அஎ)

நானத் துயர்நற் குழலா யெனுமால்
கானத் துயர்கா ரிகையே யெனுமால்
மீனத் துயரும் விழியா யெனுமால்
வானத் துயர்மா தரசே யெனுமால். (அஅ)

வேறு

என்றுபல வாகமொழிந் திளங்குமர னின்புதரு
மன்றன்மலர்ச் சோலையுலா மாமயிலைப் பொருப்பினிடைச்
சென்றனனப் பருப்பதத்தின் செவ்வியெலாங் கண்களினு
லொன்றவியப் பொடுநோக்கி யுவகையெனுங் கடற்படிந்தான். ( )

முத்தநகை யார்வள்ளி தெய்வானை முகங்காணச்
சித்தசன்ற னெழிலழிக்குஞ் செவ்வேளிங் குற்றதனல்
வித்தகஞ்சேர் பாலசித்தன் வெஞ்சமர்செய் குதல்பாரா
தித்தருண மகல்வோமென் றெண்ணினன்போற் கதிர்மறைந்தான்.

வேறு

பொருந்தாவசுர ருடற்குருதி பொருந்தவடிவேற் கிரையாக்குங்
குருந்துமயிலை மலையடைந்த கொள்கையுரைத்தா மக்குமரன்
வருந்தாரையினிற் பாலசித்தன் மறிப்பச்சினந்தங் கருஞ்சமரம்
புரிந்தார்கதிர்வே லினைவிடுத்த புகழையினிதாப் புகலுதுமே. (கூக)

தேடிவருந்துசருக்கமுற்றிற்று

ஆ திருவிருத்தம், நகூக.

(வசனம்)

முனிவர்களே? கந்தகிரித்திருக்கோயிலினிடத்து முருகப் பெருமானால் விலக்கப்பட்ட வள்ளிநாயகி தெய்வயானையம்மை யிருவரும், மிகுந்தமனமகிழ்வுடன் பலவனங்களையும், நீர் நிலைகளையும் கடந்து திருவடி வருந்த நடந்து, கடுந்தவஞ் செய்யும் பாலசித்தரிடம் வளப்பம் நிறைந்த மயிலமலை வந்தடைந்தனர். மாமரங்களின்மீது குயில்கள் இருந்து கூவுவதும், அடியார்கள் துதிகூறுவதுபோல் வண்டுகள் இசைபாடுவதும், இவர்கள் சாயலைக் கண்டு மயிற் கூட்டங்கள் சோலையில் மறைவதும் ஆகிய சிறப்புகளைக் கண்டு அம்மலையின்மீது ஏறினர். ஆங்கு அரியதவம்பயின்றுள்ள பாலசித்தரது, முடிமேற் குவித்தகையும், திருநீறணிந்தமேனியும், கண்களில்வடியும் ஆனந்த பாஷ்பமும், முதலியகோலங்களை வள்ளி தெய்வயானையிருவரும் கண்டு வியந்துகூறித் தமது தெய்வீக உருவத்தை மாற்றித் தவக்கோலமமைந்த சித்தகன்னிகைகளாக வடிவுகொண்டு நின்றனர். அது கண்ட பாலசித்தர் தமது தவ வலியால் இவர்களே நமது முருகப்பெருமானது தேவிமார்களென்றெண்ணி அவர்களது திருவடிகளை வணங்கிப் பலமலர்களா லருச்சித்து, துதித்து நீங்கள் யாவர்? இங்கு வந்தகாரணம் யாது என வினவினர். அம்மொழி கேட்டு அன்னை மாரிருவரும் அன்புடன் சித்தரை நோக்கி யாங்கள் சித்தகன்னிகைகளென்றும் எமது தந்தையார்களாகிய சித்தர்களிங்குவருவார்களென்று தங்க வந்தோமென்றும்கூறி, "எங்களைத் தாய்தந்தையர்போல் நீ காக்கக்

கடவை" எனக்கூறலும் வியந்து நமது தவத்தால் இவர்கள் நம்மைக்காக்க வந்தவர்களென்று உணர்ந்து அவர்கள் மொழியை மறுக்காது உமது தொண்டுசெய்யக் கடவேனென்று துதித்தனர். அன்றுமுதல் அவ்விருவர்க்கும் அம்மலையினிடத்துப் பாலசித்தர் கனிந்த மனத்துடன் கனிவர்க்கங்கள் கொண்டுவந்துதவி வணங்க அதனை யுண்டு மகிழ்ந்தனர். சித்த கன்னிகள் தேவதச்சனைத் தமது மனத்தில் நினைத்து உன்னத சிகரங்களமைந்த அலங்கார மாளிகை ஒன்று அமைக்கக் கட்டளையிட்டவண்ணம் அவன் மந்திர வலியா லமைத்தனன். அந்தத் திருமாளிகையில், வசித்துச் சித்தரை நோக்கி பிரமன் விட்டுணு சிவன் யாவராயினும் உள்ளுற விடாது காவல்பூண்டு இருக்க ஆக்ஞாபித்துற்றனர். அவ்வுத்தரவைச் சிரமேற்று, இராப்பகலாய் யார்வரினுந் தடுக்க எண்ணித் திருவாயிலைச் சித்தர் காத்துவந்தனர்.

இவ்வாறு இயலும் நாளில் திருக்கைலாயகிரிச் சார்பான கந்த கிரியில் விளங்குபவரும், மயில்வாகனக் கடவுளும், வள்ளிதெய்வயானை கணவரும், ஞானிகளுளத்தில் நடிப்பவரும், அடியார் பந்தபாசத்தைத் தவிர்ப்பவரும், மணமிகுந்த கடம்பமாலை யணிந்தவரும், சத்தியத்தில் விளங்குபவரும், பார்வதி முத்தமிடுங் குழந்தையும், யுத்த களத்தில் அசுரர்களை யழித்தவரும், ஞானசம்பந்தராக வந்து எலும்பைப் பெண்ணாக்கியவரும், பரமசிவனுக்குப் பிரணவ மந்திரமுபதேசித்த குருநாதரும், பக்குவிகள்காண விளங்குபவரும், மன்மதனுங் கண்டு பிரமிக்கும் அழகரும், உதய சூரியன் போன்ற ஒளியினரும், வெள்ளிய திருநீறணிந்த விளக்கத்தினரும், சித்தர்களுக்கு அஷ்டமாசித்தி யருள்பவரும், விநாயக சகோதரரும், நித்தியரும், நிகரற்றவரும், அன்பர்களுக்கு மறு பிறவியில்லாத கதியளிப்பவரும், பிரமன் கதறும்படி குட்டிய மலைபோன்ற புயங்களையுடையவரும், ஆகிய ஸ்ரீ முருகக்கடவுள் தமது தேவியர்களான வள்ளி தெய்வயானையின் பிரிவாற்றாதவராய், தாம் எல்லாமுணர்ந்தவல்லவராயினும் திருவருளாடலின் நிமித்தம் கயிலாயத்தினின்றும் அவர்கள் எங்கு சென்றனரோ என்னும் ஐயத்துடன் வருந்தித்தேடிச் செல்வதானார். அவ்வாறு சென்ற கந்தக் கடவுள் விஷ்ணுபுவனமாகிய வைகுண்டமும், பிரம்ம

புவனமாகிய சத்தியலோகமும். இந்திரபுவனமாகிய சொர்க்கலோகமும், சூரியமண்டலம் சந்திரமண்டலம் முதலிய தானங்களெல்லாமும் சென்று தமது தேவிமார்களைத் தேடிக் காணாமல், பூவுலகத்திற்கு வந்து, பத்ரபீடம், நேபாளம், காசி, அரித்துவாரம், நைமிசாரண்யம், பிருந்தாவனம், ஸ்ரீசைலம், திருவாலங்காடு, திருவொற்றியூர், காஞ்சி, அருணை, திருவதிகை, விருத்தாசலம், திருவஞ்சைக்களம், மதுரை, திருஆனைக்கா, திருநெல்வேலி, வேதாரண்யம், திருவாரூர், வைத்தீஸ்வரன்கோயில், சிதம்பரம் முதலாகச் சொல்லப்படுகிற பல புண்ணியத்தலங்களிலும் அநேக நதிக்கரை மலைச்சாரல்களிலும் முனிவர் இருக்கைகளிலும் சோலைகளிலும் தேடி மயங்குவாரானார். பிரிவாற்றாது பலவாறு தேவிமார்களை முன்னிலையாய் வைத்துப் புலம்பியும், தென்றல், சந்திரன், மயில்கள், கிளிகள், அன்னப்பக்ஷிகள், தாமரைமலர்கள், தடாகங்கள், பருவதங்கள், யானைகள், புலிகள், சிங்கங்கள், வனப்பன்றிகள் முதலிய சராசரப் பிரபஞ்சப் பொருள்களைச் சுட்டிப் புலம்பியுமேங்குவதானார். பிரமதேவனு லறியமுடியாத தனிமுதலாகிய பரமசிவனுக்குப் பிரணவப்பொருளை யுணர்த்தி யருளிய ஞானசாரியராகிய முருகக்கடவு ளிவ்வாறு புரியும் அருள்விளையாட லென்னென்று கூறுவது? மனத்தளர்ச்சியுடன் பலவாறு தன்மை முன்னிலைபடர்க்கைகளில் இரங்கல் மொழிகள் கூறிக்கொண்டு வாசனை மிகுந்த மலர்ச்சோலைகள் நெருங்கியுள்ள மயிலமலையை யடைந்து ஆங்குள்ள வளப்பங்களைப் பார்த்துக் களிக்கடல் மூழ்கினர்.

---

## ஆறுவது
## யுத்தச் சருக்கம்

---

அன்னமுந்தரு மணிபலவுந்தரு மமரர்தம்போகமெலா, முன்னவுந்தரு மூதறிவுந்தரு முறையொடுமூதுலகோர், மன்னிவாழ்த்திடும் புகழ்தருந்தன்பத மருவினர்பின்னுமொரு, சன்மம்வேண்டினுந் தருகிலாக்குருபரன் சரண்மலர்சிரம்வைப்பாம். (க)

வேறு

அகனமர்ந்தபாலசித்த னருந்தவத்திற்கிரங்கியரு ளன்னை மார்கண், முகமலர்ந்தேபணித்ததனை மொழிந்தனைபின் னடந்த கதை மொழிவாயென்று, சகமதித்தம்பிரமதித்த மேனத்தேர்ந்த சவுனகா தியர்கள்கேட்பப், புகலருஞ்சூதன்கனிவோ டம்முனிவர் முகநோக்கிப் புகலாநின்றான். (உ)

வேறு

விரும்புமடியா ருளமென்னும் வெற்பிலிவர்ந்தஞ் சலியாகு, மரும்புங்காந்தண் மலர்தோன்ற வானந்தத்தேன் மாரிசொரி, கருங்கொண்டூவாங் குமரனந்திக் காலேமயிலே மலேமுகட்டின், வரும்போதரிவை மார்கள்பயின் மணிமாடத்தை நோக்கினனால்.

இம்மாளிகைமே லெனக்குயிரா யிலங்குமின்னா ரிருப்ப ரெனி, லம்மாமுகங்கண் டுய்வலென வகிலமாளு மரசனைப்போற் செம்மாந்தணிகே யூரமுடி செய்யமதாணி வெயில்விரிப்ப, வெம் மான்றநுவா ளயிலேந்தி யிவர்ந்திட்டானம் மலேமீதே. (ச)

கானவேடர் வளர்த்தவெழிற் கன்னியுடனே நான்மருப்பி, னானைமகளு முறைமாடத் தருகம்முருகன் வருங்காலைப், பானற் களத்தன் றருஞ்சாபப் பரிசான்முருக னென்றுணரா, தேனித் தலம்வந் துற்றான்கொ லென்னாச்சித்த னெண்ணுவனால். (ரு)

பொருந்தார்மதின்மூன் றையும்பொடித்த போர்வெள்விடையா னழற்கண்ணா, லெரிந்தவனங்க னுருத்தாங்கி யெய்தினனோ விந்திரன்றான், றரும்பாலகனுஞ் சயந்தனெடு சத்தசுரகீதங்களெலாந், தெரிந்தவழகார் கந்தருவச் சேயோமாய மருவுருவோ. (சு)

யாவனோவென் றுளமயங்கி யணிமாளிகையின் முகவாயிற்
காவல்புரியப் பாலசித்தன் கடிதினேகி யாரையிங்கு
மேவனின்னில் லெனவறைந்து தடுத்தான்வெயிலால் வருந்தியவ
ராவல்கூர்ந்து நீர்த்தடத்தை யடுக்குங்காலைத் தடுப்பான்போல். ()

சித்தனிவ்வா றெதிர்தடுத்துச் சென்றுவடிவே லேந்து செங்கை, முத்தன்முகத்தை நோக்கியிந்த முழுமாளிகையிற் காவல்

புரிக், தத்தன்முதலோ ரணுகாம லண்ணுவேனிம் மாடமதிற், சித்தமடவா ரெமைக்காக்குந் திருநோக்கத்தா லமர்கின்றார். (அ)

நின்னை நோக்குங் காலுலகா ணிருபன் றனைப்போ லிருக்கின்ற, துன்னோடெதிர்த்துச் சமர்புரிவா ரொருவரிலையிக் கிரித்தலத்தின், மன்னுமவர்க டவநிலைக்கண் மாறுதிருக்கு முனிவர்களாந், தன்னை நிகர்த்தோ ருடன்பொருத றரணியாள்வோர்க் கறனன்றே. (கூ)

வாளும்வரிக்கட் டுறுதநுவும் வடிவேலுஞ்சேர்ந்திருக்குமிகற், றாளும்பொலிய நிற்கின்றாய் சொல்வதென்னே மறுமுறையை, யாளுந்தன்மை யகத்திடையோர்ந் தகல்வாயென்ன வதற்கொரு சொல், வேளங்குரையா தரிவையர்கள் விரகாக்கினியின் விறல தனல். (க0)

அம்மாளிகையிற் செலச்செருக்குற் றணுகுங்காலைப்பாலசித்த, னிம்மாநிலங்க ளுய்யவரு ளீயுந்தாய்மா ரிருவரையுஞ், செம்மாம னத்திற் கருதுதலுந் தெரிவைமார்கள் வந்தருவாய், மெய்ம்மாத வனுக் கருளியின்ன மாற்றமெடுத்து விளம்புவரால். (கக)

அன்பின்றலைநின் றடிமைசெய்தே யருளின்றலைநின் றகிலத் தோர்க், கின்பமளிக்கும் பாலசித்த னெனும்பேர்புனையுங் குண வானே, யுன்பங்கிருப்ப மியாமுன்ற னுளத்திற்றேன்றுங் கவ லொழிந்தே, நின்பாங்கெதிர்க்கு மரசனொடு நேர்ந்துகடும்போர் புரிகென்ன. (கஉ)

வேறு

அத்திரசத்திர வித்தையனைத்தையு மன்பாகச்
சித்தனுளத்திலி ருத்தியடற்படை சிட்டித்தே
யத்தமளித்திர தத்தைவிதித்தும ளித்தார்கள்
பத்தருளத்தினி னைத்தவிருப்பும் பழுதாமோ. (கங)

அருளுடனிருவரு மருளியமொழிசெவி யணுகாமுன்
றெருளியமனதொடு பலபலதுதியுட னடிசேவித்
திருளறவொளியிடு பலபடைகளுமுய ரிருதோளிற்
பொருளெனவழகுற வரைபொருகவரியின் மிசைபோனான். (கச)

தன தரிவையரு ளியரதமிசைவரு தகையோனை
வினையிரிதரவரு மறுமுகனிகலொடு மிகநோக்கி
மனமதிலுயர்சின வனலுறவவனொடு வலியாக
வுனியமர்செயவொரு திகிரியைவரும்வண முளம்வைத்தான். (கரு)

அகமதிலுனவரு குயவினிலழகுற வவனேறச்
சகவிருளறவொளி விடுகதிரவன்வெயி றனுஞணப்
பகைகொடுவருதவ சியுமவன்மிசைமுகில் பயமாகப்
புகைவிடுமனலுமிழ் கணையடர்விதமிகு போர்செய்தான். (கசு)

அயனரியிமையவ ரசுரர்கண்முதலிய ரடர்போரி
லுயர்கொடியறமுடி யறவிடியெதிரர வெனவோடிப்
பயமடைவர்களல திலையிவனமதெதிர் படையேவிச்
சயமுறவதியிகல் புரிவதுமிகவதி சயமென்றே. (கஎ)

புகலருமொருமறை முடிவெனுமொருபொருண் மிகுபோத
மகமுறவரனுயர் செவியிடையருளிய வணிவாயா
னிகல்பெறுமசுரர்கண் முடிபொடிபடவயி லெறிதோளான்
றகைமலரிருகர மிகுசரமழைசொரி தரநின்றான். (கஅ)

வேறு

காற்றெனு மொருகணை கந்த னேவிட
நாற்றிசை யுயிர்களு நகமு மெண்டிசைக்
கூற்றினைப் பரித்திடுங் குஞ்ச ரங்களு
மாற்றிடா வணஞ்சுழ லாழி யொத்தவே. (ககூ)

பன்னக வாளியைப் பால சித்தனு
மங்கிலை தனிற்சொரிந் ததனை நீக்கிட
வன்னியாம் பத்திரம் வள்ள லேவினு
னிங்கில வுயிரெலா மெரியச் சென்றதே. (உ0)

அம்பெனு மம்பினை யவன்வி டுத்தமல்
வெம்பினை யகற்றினன் வெகுண்டு பின்னரு
மெம்பிரான் மோகனத் திரத்தை யேந்தியே
யும்பரும் வெருவுற வுடன்று விட்டனன். (உக)

சித்தனு ஞானமாங் திறல்கொள் வாளியாற்
செற்றன னறுமுகன் செயிர்த்து நோக்கியே
வெற்றிகொண் மடங்கலாம் விசிகம் விட்டனன்
மற்றதைச் சரபமாம் வண்டின் மாற்றினான். (உஉ)

இங்கிலை யறுமுக னேவும் வெஞ்சரந்
தன்னையக் கணத்திடைச் சார்த ராமலே
யன்னசித் தாதிப னகற்றுங் காலையி
லென்னையா ளுடையவ னீது செய்குவான். (உங)

ஒவ்வொரு பாணம துன்னி யுன்னியே
யிவ்வயி னிவன்மிசை யெறித றீதினிப்
பவ்வநீ ரருந்திய பயோத ரம்மென
வெவ்விய வாசுகம் விடுது மாலென. (உச)

வேறு

ஆதவன்கணை யிந்துவின்கணை யண்டர்தங்கணை கொண்டனேர்
மாதவன்கணை சீதமேவிய வருணனெண்கணை யிவையெலா
நாதனெங்களை யாளவந்திடு நாயகன்கதிர் வேலவன்
றீதில்சித்தன துடலைமூடுபு சிந்தினான்வினை சிந்தினான். (உரு)

இந்தவாளிக ளியாவுமாமழை யென்னமெய்யினி லெங்கணும்
வந்தடர்ந்திடும் வேளையிற்செயன் மாறிவெந்துய ரெய்தியே
பந்திகழ்ந்திடு மந்தனத்தெழில் பரவுதாயர்க ளிருவரைச்
சிந்தையங்கம லத்திருத்துபு செய்தனன்றுதி செய்தவன். (உகா)

வேறு

தெள்ளியமெய்ப்போதமுடன் பாலசித்தன் சிந்திக்குந்தன்மையினைத் தெரிந்தன்பாக, வள்ளிதெய்வயானையெனத் திருப்பேர்தாங்கி வந்தருளுங்கோதையர்கண் மழைபோற்றுவு, மொள்ளியநற்கணைகளெலாங் கணநேரத்தி லொப்பறுதஞ்சத்தியினா லொதுக்கியந்த, வள்ளலறுமுகன்மிகவுஞ் சோபங்கூர வருத்தினாரவர்களன்றி மறுப்பரியாரே. (உஎ)

தான்விடுத்தவாளியெலாம் புலப்படாமற் றணந்ததுமக்கணைகளினாற் றனக்கீடாக, வானடுக்குஞ்சயந்தனத்தின் மிசையேநின்று

மழைபோலுந்தொடைசொரியு மாதவத்தோ, னானடுத்தமெய்யி
னுக்கோர் நவையிலாது மும்பர்குழாமம்பரத்தி லொளிவேற்கந்
தற், கேனடுத்ததிவ்வணமென் றுரைக்குஞ்சொல்லு மெந்தையறிந்
தான்சினந்தா னெழுந்ததம்மா. (உஅ)

அலைகடலெலாஞ்சிவக்க வவுணமாத ராரமுலைத்தடஞ்சிவக்க
வண்டத்தோங்கு, மலைமதிவாளுடுவெளியுஞ் சிவக்கச்சூரன் மனதில்
வயிரஞ்சிவக்க வடிவேலேவுந், தலைமையுளோனென்றென்றுஞ்
சிவக்கும்பாத சரோருகத்தையடியேன்றன் றலைசிவக்க, நிலைமை
யின்வைத்தோனாறு முகஞ்சிவக்க நெறியருளீராறுகண்ணுஞ் சிவ
ந்தவன்றே. (உகூ)

ஆதவனீதேதுவிப ரீதமென்ன வவனுறைமண்டலத்திடைநின்
றப்பாலேற, மாதவன்வேதன்மகவா னண்டவாணர் வளர்பதத்தி
னின்றப்பால்வருந்தியேறத், தீதகன்றவன்பர்துதி செவியிலேறத்
தினமுமவரிதயசிங்கா தனத்திலேறு, மேதமிலான்புருவமெனுஞ்
சிலையிரண்டு மிருங்குளத்தில்வருஞ்சலத்தா லேறநின்றே. (௩0)

மதிதவழுஞ்சடைமுடியான் வனத்தில்வாழு மான்றழுவுங்கர
தலத்தான் வாமந்தன்னி, லதிகவிருப்பொடுதழுவும் பிராட்டி
முன்ன மரும்பாலனெனத்தழுவி யணைத்துமுத்தம், புதியநறுங்
கமலச்செவ் வாயிற்றந்து பொருதசுரர்குலமுழுதும் பொடிப்பா
யென்று, நிதியெனமுன்பருள்சத்தி வேலைக்கையா னின்றுதழுவிப்
பூசை நியதியாற்றி. (௩க)

வேறு

அயிலைத்தருமுலையஞ்சிட வவளுக்கிடமதனைத்தரு மரனஞ்
சிட வவருக்கிடமாம், வெயிலைத்தருகயிலைக்கிரி மிகவஞ்சிடவதனுக்
கிட மெனுமித்தரணியுமஞ்சிடவே, பயிலப்பனகமுமஞ்சிட நிலை
பெற்றிடுமிபமெட்டொடு படமுற்றிடுமரவஞ்சிடவே, சயிலத்துற
வர்களஞ்சிட வலையஞ்சிடவதனுள்ளுறை தருமுத்தரவனலஞ்
சிடவே. (௩உ)

எச்சத்தியுமிதனுக்கெதி ரிலையற்றிடுமெனவற்புத மெய்திக்
குருபரன்விட்டிடவே, யச்சித்தனதுளமுட்கிட வனல்கக்கியவயின்

முற்றவு மடுதற்கெதிரமையத்திடையே, கச்சுக்கிழிபடவுற்றெதிர்
வெற்பைக்குனிதருவித்தைகள் கற்றொருப்பறு தனவித்தகியார், பச்
சைப்பரி மளமொய்த்தமர் பத்மப்பதமலருட்கொடு பத்தித்துதி
செய்துற்றனனால். (௩௩)

வேறு

திரைவேலைப்புனன்முழுதுங் கொதித்திடவண்டத்தலைவர்
சித்தமெல்லாங், கரைகாணாத்துயர்வேலை மடுத்திடச்சித்தன்புரியுங்
கடும்போர்வேலை, யுரைவேலையுணர்வடங்கப் படர்வேலையுயர்
தவமே யுருவமாகிப், பெருவேலைதனில்வந்தோன் பிடிந்தனைமார்
திருமுன்னர் பிறங்கவைத்தான். (௩௪)

வள்ளிதெய்வயானையெனு மங்கைநல்லாரிருவர்களு மகிழ்ச்சி
கூர்ந்தே, யொள்ளியவேலைக்கரத்திற் பற்றினராயங்கிருப்ப வும்ப
ரேத்தும், வள்ளலிஃதென்னையிறும் பூதெனத்தன்னுள்ளமதில்
வருந்திச்சோர்வுற், றெள்ளலிலாக்கணங்கடமை யெய்தநினைத்தா
னவையு மெதிர்ந்ததம்மா. (௩௫)

நின்றகணமுகநோக்கி யிச்சித்தனோடமரை நீவிர்செய்ம்மி,
னென்றலுமங்கவைபணிந்து வடிவாள்சூலம்பலகை யெழுமுன்னாக,
வொன்றியநற்படைக்கலங்க ளாலமர்செய்திடுகாலை யுவந்துசித்த,
னன்றிதுவென்றதிசயித்துச் செங்கலிங்கந்தனையுதறி நாட்டம்
வைத்தான். (௩௬)

அக்காவித்துகிலிடைநின் றனந்தமாய்ச்சிவகணங்க ளடர்ந்து
மேவி, முக்காலமுந்தெரியுஞ் செவ்வேடன்கணங்கடமை முட்டி
தன்னாற், றக்காமற்புடைத்தகலத் துரத்தியபினத்துகிலின் றலை
வந்தெய்தும், பக்குவமதறிந்திந்த மாயமதென்னோவென்று பரிவு
கூர்ந்தே. (௩௭)

அண்டமெலாந்தனதருளாற் கண்டளிக்கும்பூரணியை யத்
தன்பாகங், கொண்டகலாத்தவக்கொடியை யானந்தவல்லியெனுங்
கோமளத்தை, வண்டார்பூங்குழலாளை யருந்தாதமுலையாளை வறி
யேன்முன்னந், தண்டாமல்வருவாளை யெனதிதயகமலமெனுந்
தவிசினாளை. (௩௮)

கண்ணடங்காத் திருவுருவைக் கண்டிமயன்கனிந்துருகுங் கன்னிதன்னை, நண்ணுமடியார்கடம தெண்ணமெலாங்கைகூட்டு நாயகத்தை, யண்ணலுளவிருப்பகலா தடிக்கடிநாடற்கெழில்செய் தமரும் பெண்ணைப், பண்ணகலாமொழியாளைப் பார்ப்பதியைச் சிலம்பணியும் பாதத்தாளை. (ந௬)

மஞ்சாரும்பொழிலடருந் திருக்கைலைமலையிலென்றும் வாழ் வாடன்னை, நெஞ்சாரநினைப்போர்க ளஞ்சாமலெதிர்நிற்கு நிமலி தன்னை, யஞ்ஞானமொழித்தருளு மருள்விளக்கையாகமத்தி னங் கத்தாளை, மெய்ஞ்ஞானவித்தகியை வேதாந்தத்துள்ளிருக்கும் விமலிதன்னை. (௪0)

பலசமயந்தொறும்விளங்கு மொருமுதல்வியென்னுமெழிற் பசும்பூங்கொம்பை, பலகில்சராசரமனைத்து முதவியுங்கன்னிப் பருவ மாயினளைக், கலைமகளுமலர்மகளு நாடோறும்புகழ்ந்தமை யாக் காட்சியாளை, யுலகிலெனக்குயிர்த்துணையாய் நின்றளைச்சிவ யோகத் தொளிரும்பொன்னை. (௪௧)

தனையளித்தங்கருமையுடன் முத்தமிட்டு வளர்த்தெடுக்குந் தாயைத்தன்னு, ணினைவினிடைப்பணிந்தேத்தி யிச்சித்தன்சால மெலா நீக்கியென்றன், மனைவியரைத்தருதியென வருந்தினனவ் வேளையின்ம ரோன்மனித்தாய், தனையனுக்குள்ளிரங்கிவந்து தழுவிமுத்தமிட்டுமடி தன்னில்வைத்தே. (௪௨)

கண்ணேயென்கண்மணியே கந்தனெனுங்காதலனே கடம்பு லாவுந், தண்ணமரும்புயசயிலத் தனிக்குருந்தேயினிவருந்தே றவத் தான்மிக்கோன், றிண்ணியனச்சித்தனெனுஞ் சங்குகன்னப்பெய ரினன் செயலெலாநின், பண்ணியலுமொழிவள்ளி தெய்வானை யெனுமடவார் பரிசென்றேராய். (௪௩)

உனதிளங்கோதையர்களையின் னுஞ்சிலவேளையிற்கண்டங் குவந்திருப்பாய், றனியகலக்கடவாயென் றுடன்முழுதுந்தைவந் தஞ் சொலித்திருக்கு, மினிமையுளமணமுலவும் பொற்கமலமாலை தனையீந்தின்போதி, யனையாகியருளாகி யெனையாளும் பெரு மாட்டி யகன்றளன்றே. (௪௪)

வேறு

உமையாளித்திறமருளி யகன்றதற்பி னுயர்குமரன்மனத்தினி
டை யுவகையாட, விமையோர்மாமுனிவரர கரவென்றுட வெவ்
வுலகுங்களி துளும்ப விருகாதூடு, மமையாநின்றொளிவிடுகுண் டலங்
களாட வளிமுரன்றுடுங்கடப்பந் தாருமாடத், தமைவழுத்துமன்ப
ரெலாந் துதிசெய்தாடத் தன்மடவார்விளையாடுந்தலத்தைநோக்கி.

அம்மைதருமலர்ச்சரத்தை முடித்தோமின்றே யரியசித்தன்
விடுஞ்சரங்க ளனைத்துமொன்றாய், வெம்மையுடன்முடித்துவள்ளி
தெய்வயானை மெல்லியர்தம்மூடலையு முடிப்பாமென்றே, யெம்
மனதிற்சலிப்புளயா வையுமுடித்தே யிருவினையுமறமுடிக்குஞ்
சாமிநாதன், செம்மையொடுமாகாய நெறியிற்சோதிச் செழுங்கதி
ரோனெனவுலவித் திகழ்ந்தானன்றே. (சசு)

வேறு

திருமுடிதனின்மணி முடியொருகோடி தினகரரெனவொளி
செயவகன்மார்பிற், பருநவமணிமய முலவியவாரம் பரிதிகளொரு
சதமிலகியதென்னக், கரமதிலெழில்பெறு மாழியுலாவுங் கடலிடை
யுதயம துறுமதியென்னப், பரிபுரமணிமண மருவியபாதம் பவமற
வருமெழிலிமகரனெனவே. (சஎ)

தனுவொடுவருசர வணனபிராமந் தனைமிகுதவநெறி நிலை
யமர்சித்தன், கனிவுடனிருவிழி யமுதெனநாடிக் கடிதினிலரிவை
யர் முகமதைநோக்கி, முனமுறுமொருபதி யறுமுகனெனவே
மொழிவதுநிசமும திடம்வருவடிவே, லனையவனதுநிலை யகமது
நினைமி னடியவனெணமிஃ தென்னவறைந்தான். (சஅ)

தாயர்களலவென மேனிலைவாயிற் றலையரணங்கடி தலைகொடு
நிற்பச், சேயவனுளமிகல் மருவிடவிந்தச் சித்தனைநிலைபெய ரச்
செய்தலாமற், போயவர்மாளிகை யுறலரிதென்னப் புதுமலர்மழை
யம ரர்கள்சொரிதரவொண், காயமதிடையொரு கோடியதென்னக்
கணைமழையுறைபல வேவினனம்மா. (சகூ)

இந்நிலையேயவ னேவியபாண மேகுமுனேமட மாதர்கள்பாற்
சென், றென்னையளித்திடு மன்னையரேயிங் கெய்தியமன்னவ னிங்

நிலமாரு, வுன்னதவும்பரி னின்றனனுக வொளிவிடுகணைசொரி கின்றனனதனு, னன்னிலைகண்டமர் செய்திடுமாறு நானறியே னெனை யாளுகவென்றான். (ருo)

இத்தகையாவுயர் சித்தனுரைப்ப வேதமிலாதொளிர் பாதுகையொன்றை, யத்திறல்சித்தன்ம னத்தில்வியப்ப வளித்திதனிற் பத மண்ணியகாலை, வித்தகமிக்கெதிர் வானையடுத்தே வீறொடு போர்புரி வாயெனலோடுஞ், சித்தனவண்ணமி யற்றுவனென்றே சேதனமோடமர் பாதுகையேறி. (ருக)

அந்தரமேசம ரம்புரிவானை யண்டியனேனெதிர் வன்படையேவ, நொந்திலனுகியும் வெஞ்சினமுற்றே நொடியினுனுவியை விண்டிடுவேனென், றுந்தினனம்புகள் பைம்புயலென்ன வும்பரி தேமடி வென்றுரையாடச், சிந்தினனூழ்கட லுந்தணலாகச் செந் தமிழ் மாலைகொள் கந்தனடர்ந்தே. (ருஉ)

வேறு

அக்கணஞ் சித்தனு மஞ்ச லின்றியே
தொக்கபல் கணைகளாற் றுணித்தல் கண்டுள
மிக்கவெஞ் சினங்கொளா வேலன் றன்னிரு
கைக்களி னீறுக்கின னுடலங் கன்றவே. (ருங)

பற்றினன் கரங்களாற் பாரில் வீழ்தரக்
குற்றினன் சித்தனுங் குப்புற் றேவிழுந்
தெற்றினன் றுவியன் னவனை யிவ்வண
முற்றவு மற்சமர் முயன்றிட் டாரரோ. (ருச)

சிங்கமுஞ் சிங்கமுஞ் சீறிற் றேவெனப்
பொங்குறும் புலியுடன் புலியு டன்றென
வெங்கயத் துடனொரு வேழ மேற்றெதிர்
தங்கிய நிலையெனச் சமர்பு ரிந்தனர். (ருரு)

மலையொடு போர்செயு மலைய தென்னவு
மலையொடு போர்செயு மலைய தென்னவுந்
தலையுடன் றலையது தாக்கவே யிடித்
துலைவிலாத் தொனியெடுத் துருமி னாரரோ. (ருசு)

சித்தனிவ் வாறுநஞ் சேயு டன்பொர
மெத்தவுஞ் சினத்தொடு வேலு டைப்பிரான்
குத்தின னுரத்தினிற் குழைந்து நெக்குக்
கைத்திறத் தான்முகில் கான்ற வேறென. (ருஎ)

அன்பெலாந் திரண்டொரு வடிவ மாயினோ
னென்பெலா நைந்திட வியற வத்தினன்
றுன்பிலாச் சித்தனுஞ் சோப மெய்தினு
னின்புறு காலம்வந் திறுத்த தாலரோ. (ருஅ)

வேறு

நந்தாதொளிர்வேற் கரவேளு நமதுசித்தப் பெருமானு
முந்துபடைகொண் டருஞ்சமர முனுற்றிவிளைந்த பரிசுரைத்தா
மெந்தையாமவ் வேள்சித்தற் கிரங்கியருடந் ததுமலர்ப்பூங்
கொந்தார்கோதை யரைவிழைவு கூரக்கண்ணுற் றதுமுரைப்பாம்.

யுத்தச்சருக்கமுற்றிற்று

ஆ. திருவிருத்தம், சருஅ.

(வசனம்)

முனிவர்களே ! அன்புடன் வழிபடும் அடியார்களது இருதயமென்னும் பருவ்தத்தின்மீது அவர்களது அஞ்சலி குவிக்குங் கைகளாகிய காந்தண்மலர்கள் தோன்ற ஆனந்த மழை பெய்கின்ற அருள்மேகமாகிய நமது குமரக்கடவுள் மாலைப்பொழுதில் மயிலமலை முகட்டிலிவர்ந்து செல்லுந்தருணம் வள்ளிதெய்வானையம்மை வசிக்குந் திருமாளிகையை நோக்கினர். இந்த மாளிகையினிடத்து நமது உயிர்த்துணையாகிய தேவிமார்கள் இருப்பார்களெனத் திருவுளங்கொண்டு அவர்களைக் காண விரும்பி ஓர் அரசன்வடிவங் கொண்டு நவரத்தின கேயூர மகுடமதாணி முதலிய ஆபரணங்கள் ஒளிவீச, வில், அம்பு, வாள் முதலிய ஆயுதங்கள் ஏந்தி மலையின் மீது சென்றனர். திருமாளிகையின் அருகுமுருகன் வரும்போது பாலசித்தர் சிவபிரான் சாபத்தால் முருகனென்றுணராது,இவன் ஏன் இங்கு வருகின்றான், இவன் யாவன், மன்மதனோ, தேவகந்தர்

வனோ, மாயை வடிவனோ, என்றெண்ணி, திருவாசலில் நின்று கொண்டு 'இங்குநுழையாதே நில்' எனத் தடுத்தனர். சித்தர் இவ்வாறு தடுத்துக் கூறி, சிவன் முதலிய மூவரேனும் இங்கு நுழையாமல் யான் காக்கக்கடவேன். சித்த கன்னியர் இங்கு வசிக்கின்றனர். உன்னைப் பார்க்கும்போது அரசன்போல் இருக்கின்றனை உன்னோடு யுததம செய்பவர் யாரும் இலர் என்றுகூற முருகன் விரகமிகுதியால் மாளிகையுள் செல்லத் தொடங்கினர். அது கண்ட சிததர் விரைந் துட்சென்று, தாய்மாரைக்கருதலும், அவர்கள் முன்வந்து, அநுக்கிரகித்து, நீ மனக்கிலேசம் நீங்கி உன்னெதிர் வந்த அரசனோடு போர்புரிவாய், யாம் உன்பக்கம் இருப்போம் என்று அஸ்த்ரசஸ்த்ரங்கள் அனைத்தும் உதவி, இரதம் ஒன்றும் அமைத்துக் கொடுத்தார்கள். அதைப்பெற்றுச் செல்லும் சித்தரை முருகப்பெருமான் மிகுந்த கோபத்துடன் நோக்கி ஒர் இரதத்தை உண்டாக்கி அதன்மீது ஆரோசணித்துக்கொண்டு இருவரும் போர் செய்தனர். அந்த யுத்தத்தைக் கண்டு பிரமன், விட்டுணு, இந்திரன், தேவர்கள், அசுரர்கள் முதலியோர் மனம் பிரமித்தார்கள். இவ்வாறு அனந்தவகையான பாணங்களால் யுத்தம் செய்த முடிவில், முருகப்பெருமான் சூரியாஸ்த்ரம், சந்திராஸ்த்ரம், தேவாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம். வருணாஸ்த்ரம் முதலிய மந்த்ராஸ்த்ரங்களைச் சித்த்ர்மேனி முழுவதும் தைக்க ஏவினர். அப்போது சித்தர் சோர்ந்து தாய்மார்களைக் கருதித் துதித்தனர். உடனே அத்தாய்மார்கள் சித்தர்மீது இருந்த அம்புகளை விலக்கித் தெளிவித்து முருகன் சோகம் அடையும்படி செய்தனர் சிறிதுநேரத்தில் அச் சோகந் தெளிந்து கோபம் பெருகித்தனது தாயாகிய அம்பிகையாற் கொடுக்கப்பெற்ற வேலாயுதத்தைப் பூசித்துச் சகல புவனங்களும் அஞ்சும்படி முருகப்பெருமான் ஏவ, அவ் வேலானது பாலசித்தர்மீது அக்கினிச் சுவாலையாய்ச் செல்லுந் தருணம் வள்ளி குஞ்சரி என்னும் இருவருடைய தாமரைமலரொத்த திருவடிகளை அன்போடு சிந்தித்துத் துதித்தனர். அது சமயம் பாலசித்தரானவர் முருகப்பெருமானது சமத்துவத் தன்மையடைந்து வேலாயுதத்தைத் தமது கரத்தாற் பிடித்துத் தனது தாய்மார்கள் திருமுன்பு வைத்தனர்.

அந்த வேலாயுதத்தை வள்ளி குஞ்சரி என்பா ரிருவரும் கரத்தி லேந்தியிருந்தனர். அதுகண்டு முருகன் மனம் வருந்தித் தமது கணங்களை நினைக்க, அவை வந்து தலைவன் குறிப்பின்படி சித்தரிடம் போரியற்ற அதுகண்ட சித்தர் தமது கல்லாடையை எடுத்து உதறினர். அதினின்றும் அநந்த சிவகணங்கள் தோன்றி முருகனது கணங்களைப் புறங்காணத்துரத்தின. அதுகண்டு குமாரக்கடவுள் தனது அன்னையாகிய பார்வதியை நினைத்து வணங்க, அவள் தோன்றி முருகனை மடிமேல்வைத்து முத்தமளித்து, குழந்தாய் நீ வருந்தாதே. அந்தச் சித்தன் சங்குகன்னனுவான். அவன் செயலெல்லாம் வள்ளிதெய்வயானை என்னும் இருவரது பலமேயாகும். இன்னுஞ் சிலநேரத்தில் உனது தேவிமார்களைக் கண்டு துன்பநீங்கி இன்ப மடையக்கடவாய். என ஓதிப் பூமாலை யொன்றருளி அந்தர்த்தான மாயினள்.

உமையவள் இவ்வாறு கூறி மறைந்தபின் குமாரக்கடவுள் மனக்களிப்படைந்து தனது தேவிமார் விளையாடும் இடத்தை நோக்கி, நமது தாய்கொடுத்த மாலையை முடித்தோம். இந்தச் சித்தனது யுத்தத்தை முடித்து, நமது தேவிமார்களது ஊடலையு முடிப்போம், என நினைத்து ஆகாயத்திலெழுந்து ஒளிவடிவான தமது தெய்விகவடிவத்தைக்காட்ட, கண்ட சித்தர் மனமகிழ்ந்து தாய்மார் முகத்தை நோக்கி, முன்புவந்து போரியற்றியவர் நமது அறுமுகக்கடவுளே யாவர். உம்மிடம் உள்ள வடிவேல் அவரது ஞான சத்தியேயாம். இது கருதுமின் என்றனர். அதுகேட்ட தாய்மார் மேல்நிலை வாயிலினின்று பார்க்க, அது கண்ட முருகன் அதிவீரத்துடன் இந்தச் சித்தனை நிலைபெயர்த் தல்லது உட்புக முடியாதென் றெண்ணிப் பல்லாயிரம் பாணம் தூர்த்தனர். அவரேவிய பாணம் தம்மிடம் வருமுன் சித்தர் தாய்மாரிட மடைந்து இங்குவந்த மன்னவன் அந்தரமாய் நிற்கின்றுன். என்மீது அநந்த பாணம் பொழிகின்றுன். அவனேடு போரியற்ற யானறியேன். என்னை யாண்டருள்க என்றலும் ஓர் பாதுகை யளித்து இதனிற் காலூன்றியவுடன் அந்தரமாய் நிற்குந் திறமைபெற்று அவனேடு போரியற்றுவாய் என்றனர். அவ்வாறு சென்று பொருதனர். ஆயுதயுத்தமும் பின் மல்யுத்தமும் புரிந்தவிடத்து முருகனது திறத்தில் சித்தரது திறம் குறைந்து மூர்ச்சித்து நின்றனர்.

---

## ஏழாவது

# அருள்புரிந்தசருக்கம்

மாயையரவைத் தொலைப்பமயி லிருப்பவினையா மாத்திரைக
டாயசனனக் கடல்வறப்பச் சத்தியிருப்ப வருந்துயர
மேயவிடத்தென் றனக்கருள வேண்டாவோவென் றும்பர்தொழுஞ்
சேயைநோக்கிக் கேட்பதெவன் றெளியாயின்னு மடநெஞ்சே. (க)

வேறு

சண்முகவன்பாலசித்த னெடுவிளையாட்டாகவருஞ் சமர் விளைத்த, புண்ணியமாக்கதைமொழியக் கேட்டனமேல்விளைந்தமையும் புகலக்கேட்கு, மெண்ணமுடையேமவ்வா றிசைத்தருள்கவெனக்கூத னிளையோன்றளை, யுண்ணினைந்துசவுனகா தியமுனிவர்தமக்கங்க னுரைக்கலுற்றான். (உ)

வேறு

பாயுமால் விடைப்பரன் பணித்த வாறுநஞ்
சேயினெண் கரமலர் நீண்டும் பெற்றியா
லாயசோ பங்கடி தகன்று சித்தன்மு
னேயபே ரறிவுவந் தெய்த வுன்னுவான். (ங)

தாரகஞ் செவியிடைச் சங்க ரற்கரு
ளேரக னேயம ரியற்று மேந்தலிப்
பாரகத் திவனையொப் பார்க ளில்லையென்
றோரகத் தினன்பணிந் துவகை மேவியே. (ச)

குருபர னருள்விழி குலவு மாற்றினு
லுருவமெல் லாம்புள குற்று மெய்ம்மறந்
திருவிழி யுந்துளி யிறைப்பச் சென்னிமேற்
கரமலர் முகிழ்த்துளங் கனிந்து போற்றுவான். (ரு)

வேறு

நதிசூடிய சடிலன்றரு நாதாமலர்ப் பாதா
முதியோருள மகலாதொளிர் முழுமாமணி யொளியே

விதியின்றிற மறியா தழல் வினையேனொரு பொருளோ
கதிர்வேலவ வெனையாளுதி கருணாகர சரணம். (சு)

மகமாயையை நிலையென்றுனி வருந்தும்மிகு சிறியேன்
புகலென்பது நின்றாளெனும் போதம்பிற வாம
லிகல்கொண்டுனை யெதிர்நின்றம ரியற்றும்பிழை யுடையேன்
மிகைநீங்குதற் கருள்செய்குக வேலாயுத சரணம். (எ)

சுத்தன்சிவ முத்தன்றவ சொருபன்கன லுருவ
னத்தன்மறை முடிமேவிய வையானன னருளுஞ்
சத்தேமுழு முத்தேயரு டாயேயிளஞ் சேயே
நத்தாதுனை நலிசெய்ததை நாடாதருள் சரணம். (அ)

பொல்லேனினைப் புகழேன்றவம் பூணேன்றுதி பேணேன்
கல்லேன்கலை நில்லேனெறி கடையேன்மட முடையேன்
வல்லேனென நின்னோடமர் மாறுதியன் றேனை
யொல்லானென விகழாதரு ளுமைபாலநின் சரணம். (கூ)

அலையும்முயர் மலையுந்நிலை யலையும்படி யயிலான்
மலையுந்தலை மையனேசுரர் வருடுங்கழ லவனே
புலமென்பதொ ரணுவுந்தெரி யாமற்பொரு தேயா
னலைகின்றன னிலையாதிவ ணறுமாமுக சரணம். (க0)

ஒருமாமல ரொருமென்றளி ரொருகையுத கங்கொண்
டருமாமறை நெறியாலருச் சனைசெய்திட வறியேன்
குருவேதனி முதலேகுணக் குன்றேயுனை யின்றே
பரிவாயடைந் தனனுண்டருள் பரனேயருள் சரணம். (கக)

இசையேபயி லளியின்றிர ளிவருங்கடம் பணியுந்
திசைதாவிய புயனேவள்ளி தெய்வானைம ணாளா
வசையேநினை குவதன்றிநின் மருமாமல ரடியை
யசையாமன தொடுபோற்றில னத்தாவருள் சரணம். (கஉ)

ஒளியேபர வெளியேசகத் துருவேமலர் மருவே
யெளியேனினி யுய்யுந்திற மேதும்மறி கில்லேன்
றுளியேபயின் மதுவார்பொழிற் சுலவுங்கிரி யாவுந்
தளியாயுறை தருவேலவ தயவாயருள் சரணம். (கங)

மயிலேறிய மணியேயொளிர் மதியேறிய மகிழ்வே
யயிலேறிய கரனேதிரு வருளேறிய பரனே
வெயிலேறிய கதிர்மேனிய விரிதெண்டிரை யரவிற்
றுயிலேறினன் மருகாசரண் சுகமேயரு ளென்று. (கச)

வேறு

அஞ்சலி செய்தன னடிப ணிந்தனன்
செஞ்சொலாற் றுதித்தனன் செப்பு வான்கட
னஞ்சணி மிடற்றின னல்கு சாபம
தெஞ்சிடத் தீர்த்தரு ளென்ன வேண்டினன். (கரு)

இத்திறந் துதிபுரிந் திறைஞ்சும் பாலனுஞ்
சித்தனை யறுமுகத் தேவ னோக்கிநின்
முத்திய மகிழ்ந்தனந் தொடர்ந்து நம்மைநீ
நத்திலா தமர்செய்த நவைபொ றுத்தனம். (கசு)

ஆதலா லினித்துய ரனைத்து நீக்கியே
மாதொரு பாகன்முன் வகுத்த சாபமா
மேதமு மகற்றினே மிருந்த வப்பயன்
போதமோ டுறவருள் புரிகு வாமரோ. (கள)

சிவமுறு கோடிருத் திரக ணங்களிற்
றவமுறு மொருவனுந் தகுதி யோய்மறை
யவமுறு தலைத்தவிர்த் தமைப்பக் கண்ணுத
னவமுறு மளியினாற் புவியி னண்ணினை. (கஅ)

ஆயமெய்ம் மறைமுறை யாகமங்களுந்
தூயருட் சைவமுந் தோமி னல்லற
மேயநன் னெறிகளும் விதித்துப் பூமியிற்
பாயநற் சீர்பெறும் பரிசு நல்கியே. (ககூ)

நம்மொடு மித்தல நண்ணு வாயெனச்
செம்மையி னருளிப்பின் சித்தர் கோனுடன்
கொம்மைசேர் முலைநலா ருறையுங் கோயிலி
னெம்மையா ளறுமுக னெய்த வெண்ணியே. (உ0)

தந்தையென் றன்றனை யுரிமை சாற்றிய
பந்தெனத் திரண்டெழில் பரவு மாநகிற்
சுந்தர மாதரைக் காணத் தூய்த்தவ
வந்திடு வாயென மகிழ்ந்து கூறினன். (௨௧)

சாற்றலுஞ் சித்தனச் சண்மு கன்றனைக்
காற்றிரு மலரிணை யிறைஞ்சிக் கந்தநிற்
கேற்றவா றியற்றுதி யெனவி சைத்தலும்
வேற்கர னவற்கொடு மனைக்குண் மேவினன். (௨௨)

சங்குகன் னப்பெயர் தாங்கு சித்தனோ
டெங்களை யாட்கொளு மீசன் றந்தவே
ளங்ஙன மிருந்துழி யரிவை மார்மகிழ்
பொங்குபு நோக்கியுள் ளின்பம் பூத்தனர். (௨௩)

குருபரன் கருத்தினைக் கோதை மார்தமக்
குரிமையாற் சித்தர்கோ னுரைப்ப வன்னையர்
பரிவுகொண் மனத்தின ராய்ப்பல் பூணுடை
மருமல ரிவற்றினை வனைந்தி ருந்தனர். (௨௪)

வேறு

காவி நேர்விழி மாதரைக் கந்தவே
ளாவ லோடுகண் ணுற்ற தறைந்தனந்
தாவில் வானவர் தம்மொடு மெம்பிரான்
சேவி னேறிவந் துற்றமை செப்புவாம். (௨௫)

அருள்புரிந்தசருக்கமுற்றிற்று

ஆ. திருவிருத்தம், ௪௮௩.

---

(வசனம்)

முனிவர்களே! இடபவாகனக் கடவுளாகிய பரமசிவன் அருளிச் செய்தபடி முருகப்பெருமான் திருக்கரத்தாற்றீண்டப்பெற்றவுடன் சோகம் நீங்கி உண்மையறிவடைந்து பாலசித்தரானவர் சிவபெருமானுக்குத் தாரகஉபதேசஞ்செய்த முருகக்கடவுள் இவ்வாறு போர்புரிவரென்னில் இவருக்குச் சமம் யாருளர் என்று

எண்ணி வியந்து முருகன் திருநோக்கத்தால் உடல் புளகித்து ஆனந்தக் கண்ணீர் துளிக்க, சிரமேற் கரங்குவித்து முருகனைப் பல வாறு துதித்தனர்.

உமது திருவடியே உண்மைப்பொருளென் றுணரும் உணர்ச்சியின்றி ஆணவமறைப்பால் உம்மிடம் போரியற்றிய அடியேனது குற்றத்தை மன்னித்து அருளவேண்டும். ஒருமலரேனும் தளிரேனும் கொண்டு வேதநெறியாலும்மை யர்ச்சிக்க அறியேன், எனது குருவே! ஒப்பற்ற முதல்வரே! குணக்குன்றே! உம்மை யடைந்த அடியேனைக் காத்தருளவேண்டும். சோலை சூழ்ந்த பல பர்வதங்களையும் அரங்காகக் கொண்டு எழுந்தருளி விளங்கும் வேலாயுதக் கடவுளே! அறிவிலூறு மானந்த சொரூபியே! எனத் துதித்து வணங்கி நீலகண்டராகிய பரசிவன் திருக்கைலாயமலையில் முன் அடியேனுக்கிட்ட சாபம் நீங்கும்படியும் அநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். இவ்வாறு துதிக்கின்ற பால சித்தரை அறுமுகக்கடவுள் நோக்கி உனதுகுற்றத்தைப் பொறுத்தோம். ஈசுர சாபத்தையும் நீக்கினோம். தவப்பயனும் உண்மை ஞானமும் உண்டாக அநுக்கிரகிப்போம். உருத்திரகணங்களுட் சிறந்த தகுதியுடைய நீ, உலகில் வேதநெறி தலைபிறழ்வதை நிலை நாட்டுமாறு அவதரித்தனை. அத்தகைய தருமத்தை இனிது நிறைவேற்றி இந்த மயூராசலத்தலத்தில் என்றும் நம்மோடு வசிக்கக் கடவாய், என்று அநுக்கிரகித்து, தேவிமார்வசிக்கும் மாளிகையுள் சித்தர் சகிதம் செல்ல எண்ணி அழைத்தனர். அவ்வாறு இருவரும் உட் சென்றனர்.

இது கண்ட தாய்மா ரிருவரும் மனத்துள் மகிழ்ச்சி பொங்கியிருந்தனர். முருகப் பெருமான் திருவுளக்குறிப்பைச் சித்தர் பெருமானறிந்து சித்தகன்னிகை வடிவங்கொண்டுள்ள வள்ளி தெய்வானைக்குத் தெரிவிக்க அவர்கள் உடன்பாடுடையராய் நவ ரத்தின ஆபரண புஷ்பங்களைத் தரித்திருந்தனர்.

—

எட்டாவது

## தேவராதியர்வரு சருக்கம்

காளமார்தருங் களத்தினன்கைத்தலக் கழுமுளுமுலகெல்லாந்
தாளதாலளந் திடுநெடியோன்கரந் தாங்குநேமியுமுள்சேர்
நாளமார்மல ராதனன்றண்டமு நாணிடத்தகுவப்போர்
தூளதாக்கிய வேள்கரச்சத்தியைத் தொழுதிடர்தொலைப்பாமே.()

மாசுதீர்ந்துயர் நைமிசவனத்திடை வாழுமந்தணரெல்லா
மீசனூர்மகன் றேவிமார்தமதுரு வெழினலக்கண்ணுற்றே
வாசமுற்றநன் மாக்கதையீதென வகுத்தனைதவச்சூத
தேசுலாவுமற் றதையுமிங்கருளெனச் செப்புதனினைத்தானல். (உ)

நாட்டமூன்றுடை நம்பிராற்கோம்பொரு ணவின்றருள்குருநாதன்
சூட்டுமாமயிற் பரியிவர்ந்துலவுறுந் தோன்றலாகியசெவ்வேள்
பாட்டளிக்கண முரல்குழற்பாவையர் தம்மையாம்பரிவாக
வேட்டிடும்படி புரிதியாலினியென வித்தகமுயர்சித்தன். (ங)

செச்சையந்தொடை யிலகியமார்பினன் றிருவடிக்கமலத்தை
யிச்சையாற்பணிந் தப்பணிபுரிவலென் றேந்திழையார்தம்மை
யுச்சிதம்பெற வழைத்துவந்திவர்தமை யுலகெலாமகிழ்வெய்தி
மெச்சிடும்படி மணவினைமுடித்துநீ வீற்றிருப்பாயென்ன. (ச)

மாதர்பாலுற வைத்தகூர்வேலினை வாங்கியச்சித்தன்றான்
காதல்கூர்ந்தெழிற் கந்தவேளிடந்தரக் கைக்கொடுகுமரேச
னாதரத்தொடு வெள்ளியங்கிரியுறை யத்தனங்குறவுன்ன
வோதமேவிய சடையினன்விடையின்மே லுமையுடன்வரவெண்ணி

பூதியக்கமைந் தக்கரம்பொருளெனப் பொருந்தியகணத்தோரு
நாதன்றன்னுருப் பெறுமுருத்திரர்களு நண்ணுமன்புளமேவி
யாதிதேவனைச் சாமகானத்தினு லகமகிழ்தரச்செய்யும்
பூதசேனையுந் தும்புருநாரதப் புகிதயாழிசையோரும். (ரு)

பன்னிரண்டுசூ ரியர்களுந்திங்களும் பரமனுக்கன்பாகி, மன்னு
மாதவ ரெழுவருஞ்சித்தரும் வசுக்களந்தரர்சேடி, துன்னுகான

கந்தருவரும்பிருங்கியாந் துதிபெறுமுனிவோனு, மென்னை
யாளிறை பணிசெய்கும்போதர னென்னுமெய்ப்புகழோனும், (எ)

குடைபிடித்திடும் பூதனுஞ்சரிதையைக் கோதறப்புரிவோரு
நடையகன்றிடாக் கிரியையாற்றுநர்களு நவிலும்யோகியருந்தங்
கடமகித்தமென் றுணருஞானத்தருங் கழறுமற்றெல்லோரும்
புடைபரந்திட வடைந்தனன்மயிலையம் பொற்கிரிதனிறைதன். (அ)

ஆகுவாகன மீதிலாரோகணித் தைங்கரன்மூவாங்கத்
தேகவிங்கிதன் றேசுறுவல்லபை சேர்ந்திருக்கும்பாக
னேகதந்தனுங் கரிமுகப்பெருந்தகை யென்றுணைவனுக்கின்றே
யோகையாருமங் கலமெனவகமகிழ்ந் துற்றனனச்சையிலம், (௯)

மாயவன்றுணைத் தேவியாந்திருவொடும் வளர்சிறைக்க
லுழன்மேற், றாயவின்புபா கவதர்கள்சூழ்ந்துபஃ றுதிநவின்றிரு
பானு, மேயிடக்கதி ராழியேமுதலடல்வீறுமைம்படைமல்கச், சேய
ரும்மணச் செய்தியோர்ந்தக்கிரி சேர்ந்தனன்மகிழ்வோடும். (௧௦)

மந்தமத்திமந் தாரநற்சுரங்களின் மரபுளியாழ்வல்ல, சந்தனு
சல நிகர்முலைப்பாரதி தன்னுடன்வரமேவிச், சுந்தரத்துவெள்
ளோதிமப்பிடர்மிசைத் தோன்றினன் சதுர்வேதம், வந்தநான்
முகன் மயிலைநற்பெயரினன் மன்னுமக்கிரிதன்னில். (௧௧)

வேறு

புலோமிசைப்பெயர் பூண்டிடுந்தேவிதன் னுடனே
விலோசனங்களோ ராயிரமேனியில் விளங்க
வெலாமளித்திடுங் கற்பகமானின மிவைகொண்
டுலாசமங்கல மகட்கெனவிந்திர னுற்றான். (௧௨)

பாகவன்னெழிற் சுவாகையாம்பன்னிதன் னுடனே
மாகமார்தருந் தகரினைத்தூண்டிமா மயிலை
நாகமேவின னடுவனுந்தென்றிசை யொருவி
மேகமொத்தவன் பகட்டின்மேலுற்றனன் விருப்பால். (௧௩)

நிருதியென்பவன் றண்டிகையிவர்ந்துநீ ணிலத்திற்
பொருவரும்புகழ் மயிலைநற்பொருப்பினிற் போந்தான்

வருண னுங்கரா வூர்ந்தன னுகவந் தமர்ந்தா
னருண்மீதடற் காற்றிறைமணங்கள்கொண் டடைந்தான்.

அளகையாளியும் புட்பகமானமீ தரிய
வளமெலாந்தரு மாநிதிகொண்டுவந் தடைந்தா
னுளவிருப்பினீ சானனுமணச்செய லோர்ந்தே
பளகிலாமயி லைக்கிரியடைந்தனன் பரிவால். (௧௫)

வசுக்களைப்பசித் தேவருமாமருத் துவரு
நசுப்பதில்லையுண் டெனக்கொடிபோலவே நடக்குங்
குசத்தினெழிற் குலவியவரம்பையர் குழுவு
மிசைத்திறத்துநா டகத்துநாமென்னவெய் தினரால். (௧௬)

அகத்தியன்பிரு கத்திரிகாசிபன் சனகன்
சுகத்தினுயர் சுகன்கௌதமன்சனற் குமரன்
பகைப்புலன்றெறு மெய்த்துருவாசன்ப ராசன்
சகத்துளோர்தொழு மார்க்கண்டன்பரத்துவானனே. (௧௭)

வசிட்டனற்புலிக் காலன் மாபதஞ்சலி வியாத
னிசைக்குநற்கலைக் கோட்டன்வான்மீகனே ரண்ட
னிசத்துறஞ்சதா னந்தனீள்புலத்திய னெழிலெண்
டிசைக்கெலாமுயர் பர்ப்பனுங்கீரசன் செப்பும். (௧௮)

இவர்களாதிய முனிவர்களியாவரு மெழிலா
யவரவர்க்குறு பன்னியரோடுவந் தணைந்தார்
புவனவாசிக ளியாவருமத்தலம் போந்தார்
கவனமிக்குறு தேவர்கண்முற்றவுங் கலந்தார். (௧௯)

வேறு

ஈசன்மாலய னமரரும்புக லெண்டிசைக்குய ரதிபரு
மாசிலாமுனி வோர்களாதிய வேனையோர்களு மகிழ்வுட
னாசிலாமயி லைப்பருப்பத மண்மியுற்றத றைந்தனந்
தேசுலாமுரு கன்மணப்பரி சைத்தெரித்திடு வாமரோ. (௨௦)

தேவராதியர் வருசருக்க முற்றிற்று

ஆ. திருவிருத்தம், ௩௦௩.

113

175151

## தேவராதியர்வருசருக்கம் கூஎ

### (வசனம்)

முனிவர்களே! அழகிய சூட்டு அமைந்த மயில்வாகனத்தைச் செலுத்துகின்ற குமாரக்கடவுள் பாலசித்தரைநோக்கி வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலுள்ள இந்தப்பெண்கள் இருவரையும், யாம் மணந்து கொள்ளும்படி செய்க என்ற அளவில் அச்சித்தர் அவரது திருவடிகளை வணங்கி அவ்வாறு செய்வேனென்றோதி, அம்மகளிரை யழைத்து வந்து எதிருய்த்து உமது திருவுளப்படி மணந்து கொள்க என்று, அவர்கள் வசமிருந்த வேலாயுதத்தை வாங்கி யளிக்க முருகன்கொண்டு, தமது தந்தையாகிய பரமேசனை நினைக்க, அது தெரிந்த பரமன் அம்பிகை சகிதம் இடபாரூடராய் மயிலமலைக்கு வரவெண்ணிச் சிவ சின்னங்களணிந்த கணநாதர்களும், சாரூப்பிய ருத்ரகணங்களும் பூதசேனைகளும், தும்புரு நாரத முனிவரும், துவாதச ஆதித்தர்களும், சப்த ரிஷிகளும், சித்தர் கணத்தோரும், அஷ்டவசுக்கள், தேவர்கள், கந்தர்வர், பிரிங்கிமுனிவர் கும்போதரன், குண்டோதரன், சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் சாதனத்தொண்டர்கள் முதலிய பலரும், புடைசூழ வந்தடைந்தனர்.

மூஷிக வாகனத்தின்மீது சித்தி, புத்தி, வல்லவை என்னும் தேவிமாருடன் ஐங்கரக்கடவுள், எனது துணைவனுக்கு இன்று மணமென்று வந்தடைந்தனர். ஸ்ரீ நாராயணமூர்த்தி மகாலட்சுமி சகிதம் கருடவாகனத்தின் மீது அநந்த பாகவதர் துதி கூறிவர சங்கு சக்கர முதலிய பஞ்சாயுதங்களை ஏந்தி மயிலாசலம் அடைந்தனர். பிரமதேவர் சரஸ்வதி சகிதம் அன்னவாகனத்தின்மீது அங்கு வந்தனர். இந்திராணி சகிதம் இந்திரனும், அக்கினி, யமன், நிருதி முதலிய திக்குப் பாலர்களும், மருத்துக்கள், அரம்பையர் முதலியோரும் வந்தனர். அவரன்றி அகத்தியர், பிருகு அத்திரி, காசிபர், சனகர், சுகர், கௌதமர், சனற்குமாரர், துர்வாசர், பராசரர், வியாசர், மார்க்கண்டர், பதஞ்சலி, கலைக்கோட்டார், வான்மீகி, பரத்துவாசர், வியாக்ரபாதர், வசிட்டர், வரண்டர், சதாநந்தர், புலத்தியர், முதலிய மகரிஷிகளும், முருகப்பெருமான் திருக்கல்யாண சேவை காண விரும்பிவந்து சேர்ந்தனர்.

---

ஒன்பதாவது

## திருமணச் சருக்கம்

---

பாததாமரையி னாடொறும்பரவு பாவலர்க்கரிய மாவர, மாதரத்தினுட னேயளிக்குமுரு கையனைப்பனிரு கையனைப், போதனைச்சிறையின் மேவவைத்தருள்செய் போதமெய்ப்படிவ நாதனைக், காதல்கொண்டுபணி வோர்கண்முன்றிறனில் கற்பகம் பரவி நிற்குமே. (௧)

வேறு

தேவ ருற்றதைச் செப்பிய நற்றவ
மேவு சூதனை மீண்டுஞ் சவுனக
ராவல் வேண்மண மாற்று மருங்கதை
தாவி லாம னுரையெனச் சாற்றுவான். (௨)

வேறு

கங்கை யெழுந்தலை யுந்துசெழுஞ்சடி லந்திகழுங்கவினு
மங்கையிடங்கொளு மங்கலமுங்கன றங்குமலர்க்கரமும்
பொங்குசவுந்தர மும்பொலியுந்தனை யன்பொடுபூசனைசெய்
துங்கரகங்குல வும்பரன்மேயினன் சோதிசெயாதனமேல். (௩.)

மாதவராகிய நாரதர் தும்புரு மாணிசைகூறினரால்
சீதரனான்முக னேமுதலாகிய தேவர்கள்கூடினரால்
நாதபராபர வேதசுபாகர நாகசிராபரணு
வாதிநிராமய வாளெனவேயடி யார்துதிபாடினரால். (௪)

எத்திசையும்முத் திக்கினையாகவி ருக்கவெழுந்தருளெம்
பத்தனகத்தில்வி ருப்புடனூற்றிடு மத்தனைபேர்களையுந்
தத்தமநற்றகு திக்கிசைவாகிய சம்ப்ரமநல்கியுற
வுத்தரநல்கியி ருத்திமயன்றனை நோக்கியுரைக்குவனால். (௫)

நேருமன்னவ னொடறுமாமுக னேமவிவாகமது
சீருறுமித்தின மாகவிநோத சிகாமணியாலமர
ரூரெனவேயொளி வீசவியற்றுதி யோதருகாவணமென்
ரூரணிவேணிய னேவவிதித்தன னமரர்கள்கம்மியனே. (௬)

## வேறு

செம்பவளக்கால்களளப் பிலவாயங்கிலகவுமத் திகழ்கான்முற்றும்,
பம்புமொளியுறுவயிரப் போதிகையின்பணிவனப்பும் பசியகாந்தி
யம்புவனமுற்றும்விடு மரகதப்பாவுச்சிலையு மருங்கபோத
மும்பருலகினைநகைக்கு மாணிக்கத்திரள்களினு லொளிரச்செய்தே.

எழுதயனுங்காணுத வாடகத்தாலெழுதகமு மெழினுட்டுக்கல்,
பழுதகன்றவெண்பொன்னுற் பாய்ச்சிமிகுமொளியமைந்த பரட்டுக்
கற்கண், முழுதிலகுமிரசிதத்தாற் குயிற்றியொளிர் தளஞ்சோதி
மொய்க்கும்பொன்னு, லழகுமிகப்பொலிந்திடவத் திருக்கைலைமண்
டபம்போ லாக்கிப்பின்னும். (௮)

நவமணியின்கதிர்க்கோவை யிடையிடையினமைத்துமதி நகு
வெண்முத்தின், றிவளொளிதுன்னியபடங்கு சித்திரவிதானமு
மேற்றிகழத்தூக்கி,யிவர்கதிர்ப்பன்மணிகுயின்ற சித்திரங்கள்விசித்
திரமா யிலங்கத்தீட்டிக், கவையியல்பல்பூஞ்செடிகண் மலர்க்கொடி
கள்பன்மணியாற் கவினச்செய்தே. (௯)

மேல்விளங்குபொற்படத்திற் கிளிமயிருராவனங்கள் வீணை
வல்லோர், தோல்வியிலாமல்வீரர் நடம்புரியுமரம்பையர்க டலங்
கத்தீட்டி, மால்விளங்குஞ்சுந்தரவிநோதவோவியங்கண்மயல் வழங்
கக்கோட்டிக், கோல்விரைப்பூந்தளிரிலைகாய் கனிமரங்கள்பன்
மணியாற் குலவநாட்டி. (௧௦)

காழிலங்குமரகதப்பா சிலைபவளக்கனிக்குலைவெண் கனகத்
தண்ட, வாழைகளைவாயிரெறு முகப்பினெளிர்தூண்களுடன்
வயங்கநாட்டிக்,கோழைரையவிரசிதத்தாண் மரகதப்பைங்தோகை
துகிர்க் குலைக்காய்பூக, மாழைமுதலியகாட்டி மகரதோரணநிரை
கள் வகுத்துப்பூட்டி. (௧௧)

கனிக்குலைகள்பூம்பாளை வகைதூக்கிப்பலமலர்சேர் கடித்தார்
தூக்கித், தனிக்கதலிக் கிடையிடையே தமநியப்பூரணகும்பந்
தயங்கவைத்துப், பனித்துளிமென்மதுப்பாளை தலைவிரியவவற்றின்
மணம் பரவச்சேர்த்தி, நனிக்கிரணமணித்தவிசு மாதனமும்பீடி
கையு நலத்தமைத்தே. (௧௨)

இன்னணம்பல் வளம்புனைந்து தெய்வமணக் காவணத்தை யிலங்கயாரும், பன்னுகடவுளர்சபைய்ய மிகச்சிறப்பவலங்கரித் துப் பரமனேவாற், கொன்னுனைவேற்கரக்குமரன் கோமளச்செம் மேனியெழிற் கொழுந்தேன் மாந்தி, மன்னிமயன்மதர்த்துலவு மளிவிழியாரிருவர்மண மனைசெய்வானால். (௧௩)

காலெல்லாநாற்காலக் காலனந்தங்காலூன்றக் கவினுமந்த, மாலெல்லாமிந்திரனே மனமகிழ்வானெனும்பிரவா ளத்தின்காலா, மேலெல்லாநவமணியின் கசிதமதன்கீழெல்லாம் விளங்கும்பச் சைப், பாலெல்லாமரகதமா ணிக்கத்தாற்பீடமின்னப் படைத்திட் டானே. (௧௪)

அத்திருமாமணவறையை நாடினவர்க்குதரவன லழுங்க லென்று, மொய்த்தமிடியரும்பழிமா பாவமெலாந்திருநீற்றை முழு மெய்யுங்கொ, ளத்தகுதியோர்க்குற்ற நவையகன்றலெனவகலு மதன்சீர்சாற்ற, நத்துமயனிந்திரன்மா முனிவர்வலியிலரென்று ழனென்சொல்கேன். (௧௫)

மந்தமாருதமுறுபூம் பந்தருமப்பந்தரூறும் வரிதேர்வண் டர், சந்தவிசை முரன்றெழுந்தா டிடக்குலவுமணிப்பொழிலின் றருக்களெங்கும், வந்துகளிமடவனங்க ளஞ்சிறையகிஞ்சுகங்கண் மயில்களின்ன, விந்தைவிந்தையுடன்கதியாற் கிளவியினுனடனத் தால் வேட்கையூட்ட. (௧௬)

இருகாவதங்கமழு மேழிலைம்பாலைச்சரள மிதழிமுல்லை, மரு வாரமல்லிகைமந் தாரமருக்கொழுந்துநறுஞ் செவந்திமன்ற, லுரு வாகுங்கமலநறும் பாடலமென்பாரிசா தங்கரந்தை, திருவாரு மலர்தூக்கி மயன்வளங்கொண்மணவறைகள் சிறப்புச்செய்தான்.

இன்னணம்பல்வளநிறைந்த திருமணமண்டபந்தன்னை யிமயப் பாவை, தன்னையொருபான்மருவும் பரனேக்கிமகிழ்புரிந்தச் சபை யின்கண்ணே, மன்னியநாரணன்முதலோ ரியாவரையுநாடி யெழில் வடிவேலாற்குச், சொன்னமறைவிதியாக மங்கலநானம் புரியத்தொடங்குமென்றான். (௧௮)

எவ்வுலகுந்தந்தருளு மிறைவனருடாங்கிய னிமையோர் கூடித், தெவ்வரியாநாரணற்குத் திருமருகனறுமுகனைச் சிந்தை யன்பாற், பவ்வமகற்றிடுஞ்சரண கமலமதைப்பணிந்தேத்திப் பல ரும்போற்று, மவ்வியந்தீர்கங்கைகா ளிந்திசரசுவதிபொன்னி யவைமுன்னுன. (கசு)

நவதெய்வநதிப்புனலும் வரவழைத்தேயத்தேவை நற்பீடத் திற், புவனமெலாமுய்ந்திடவீற் றிருக்கச்செய்தத்தீர்த்தம் பூரித் தாட்டி, யுவமையிலாக்கழையமுத மைந்தமுதம்பாறயிர்நெய் யொளிருந்தாழை, நவையறுநல்லிளநீர்மா மலர்தோயுமுதகஞ்சந் தனநன்காட்டி. (உ0)

மந்திரகும்போதகத்தா லபிடேகஞ்செய்துசித மலர்மெல் லாடை, தந்துநறுநீர்துவட்டிச் சிகையுலர்த்திச்சிகழிகைப்பின் றழைப்பவேய்ந்தே, யிந்திரனன்பொடுகொணர்ந்த கனகமணியம் பரத்தை யிலங்கச்சூட்டிச், சந்திரவெண்ணீற்றினைநம் பந்தமறுப் பவனுதலிற் றயங்கச்சாத்தி. (உக)

திருமுடிகளோராறுஞ் செங்கதிர்கள்கோடியெனத் திகழும் வண்ண, மொருமையதாப்பிருங்கிமுதன் முனிவர்களெலாம் பணிந்தே யுவகைபூப்ப, வரியதுதிபுரிந்துசிரங் களிற்சூட்டிவிலை யெவரு மறியொண்ணுத, பொருவறுமீராறுகுழை யத்தொகை யாஞ்செவிகள்கொளப் பொலிவித்தாரால். (உஉ)

கார்த்திகையாரறுவர்களு மற்றையுளதாரகையங் கணத்தோ டெய்திச், சீர்த்திகழுந்திருமார்பந் தன்னிலெழின்மாலையதாத் திகழ்ந்தாலென்னப், பார்த்துயர்ந்தநித்திலமா வடத்தையளகைத் தனதன் பரிவிற்சாத்த, மார்த்தாண்டரெனவொளிரும் வைர முதன்மணியுரகர் மகிழ்ந்திட்டாரால். (உங)

தனக்குமுனம்பிரணவத்தைச் சாற்றினேன் மணக்கோலந் தன்னைநோக்கா, வனைத்துயிர்கண்ணேறுபடா வணம்பரமனீற்றுக் காப் பணியமுத்த, மினிற்றிகழும்வாகுவல யங்களத்தகடகங்கண் மிளிருமாழி, பணிக்கமலமலர்ப்பதத்திற் பரிபுரமொண்கழல்புனைந் தார் பரவும்வானேர். (உச)

பாலசித்தனெருக்மல மலரமலன்கரத்துதவிப் பணியாநிற்ப, வேலுமுனிவோர்களெலாம் பூங்கடப்பமாலைகண்மார் பிலங்க வேய்ந்து, மூலசடானனபரம ராசியகௌமாரசுப முருகதண்டைக், காலவயில்வேலவச டாக்கரவென்றருந்துதிகள் கழறிச்சூழ.

அரம்பயில்கணுருப்பசிநல் லழகுமேனகைதிலோத் தமையன்பான, வரம்பையர்களிருபுறமு நாடகமாடிச்செல்ல வாயிரங்கை, யொருங்கினிற்பெற்றுளவாணன் குடமுழவமிடியெனவே யொலிசெய்தேகத், திருந்தியசங்காயிரங்கை யாயிரம்வாய்ப்பானுகம்பன் சிலைத்தங்கேக. (உசு)

வாசுதேவன்மகவா னிருவர்களுமுளமகிழ்ந்து வரவானோர்க, ளாசகன்றகந்தருவ ருரகர்கருடர்கள்சித்த ராகாயத்தோர், நேசமிகநாற்றிசையுஞ் சூழ்ந்துமலர்மழைபொழிய நிலையேநிற்கும், பூசுரர்கள்வேதமழை பொழியமணமண்டபத்திற் புகுந்தானன்றே.

வேறு

திருமண வறைதன்னிற் றிகழு மணிப்பீடத்
தொருவரு நிகரில்லா வுமைசுத னமர்போதி
லிருசெவி யிடையோடி யிகல்செயும் விழிமாத
ரிருவரும் வருமாறு மினிதுவி ளம்புதுமே. (உஅ)

மலைமக ளேவலின்வெண் மலர்மக டிரைமோது
மலைமக ளயிராணி யருமறை முனிமாதர்
பிலமதி லுறைமடவா ரிவர்பிரி யமதாகக்
குலவிட மான்மகளைக் குஞ்சர மகளுடனே. (உகூ)

பொற்பல கையிலுய்த்தே புனிதம துறுபுனலா
லற்புத முடனுட்டி யணிபணி நீராட்டிப்
பற்பல மலர்வாசம் பற்றிய வமுதாட்டி
விற்பன மொடுதூசான் மேனியி னறலோட்டி. (௩௦)

குழலிடை யகில்வாசங் குலவிய புகையூட்டி
யழகுறு சடைபின்னி யணிபல வணிசெய்தே
யிழையொரு கோடிபெறு மிணையறு துகில்சாத்திக்
கழைநிகர் தோளினிடைக் கச்சிறு கப்பூட்டி. (௩௧)

மதியினை வெளவுமொரு வரியர வெனமுகமா
மதிமிசை நறைகமழும் வார்குழல் வகிர்விலக
மதிகதி ரிருவர்களும் வந்துறை யுந்தகையின்
மதியணி கதிரணியும் வகைவகை யுடன்சூட்டி. (௩௨)

நெற்றியி னித்திலவொண் சுட்டியை நேர்தூக்கி
நத்தொடு முத்தொளிர நாசியி னணிபுனையாப்
புத்தெழி லுறுபூகம் பொருமொரு கந்தரமீ
தித்துணை யுளவிலையென் றிசையறு மரதனமே. (௩௩)

இலவிய மணிமாலை நித்தில மாலையுட
னிலகு பொன் னரிமாலை யிசையளி முரலமணங்
குலவிய மலர்மாலை கொத்தெழில் வித்துருமத்
துலவிய தனிமாலை யொளிபெற வணிசெய்தார். (௩௪)

புகறர வரிதாகும் பூடண மவைபுனையா
வகல்புவி விண்ணுக்கு மபயம தருளத்த
நகைபெற வளையாழி நகையொடு புகுவித்துச்
சுகமரு ளடியிணையிற் றொடுபரி புரமணியா. (௩௫)

இன்னன விழைகளினு லென்னனை யிருவரையும்
பொன்னியல் பதுமையெனப் புகல்வண மழகுசெய்தே
யந்நிலை தனின்முனிவோ ரரிவைய ரிருபாலுஞ்
சொன்னல மொடுவாழ்த்துஞ் சுகபர மொடுநடவா. (௩௬)

நிறைகுட மொளிர்தீப நிழறரு சாமரைநன்
முறையுறு கொடியாடி முரசிணை கயலோடு
மறைதரு மங்குசமா மட்டசு மங்கலமும்
பொறையுறு மடநல்லார் போற்றினர் கொடுசெலவே. (௩௭)

விண்ணவ ரிசைகூற மேலவர் துதிசெய்ய
மண்ணவ ரன்பின்மண மலரடி தனில்வீழப்
பண்ணமர் மொழியெழிலார் பாரதி பதுமையெழி
லண்ணிய சசிமுதலோ ரங்கையி லேந்தினர்போல். (௩௮)

சிவிகையிற் கொடுபோந்து திருமண வறைபுக்குக்
கவிகைநி ழற்றியெழிற் கந்தன திருபாலும்

புவிமுதன் மூவுலகும் புகழ்தர வமர்வித்தத்
தவிசரு குறவினிதிற் சபையினி ருந்தனரால். (௩௯)

வேதியி னல்வேத விதிபிற ழாவணமே
வேதிகை மிசைகுசையை விரிதர வைத்துள்ளத்
தாதர மோடுமது வோதிந லக்கினியி
லேதமி லவிகள்சொரிந் திலகவ ளர்த்தியபின். (௪0)

சித்தரி னுயர்பால சித்தனை நோக்குபுநீ
பெற்றிடு புதல்வியர்போற் பெற்றிடு முரிமையினாற்
றத்தம தீகவெனச் சதுமுகன் மொழிதரலு
மத்தகு தாரையினீ ரரனுமை கைப்பெய்தான். (௪௧)

தழைமதி வேணியரன் றரையி னீர்கொளலுங்
குழைபொரு மதருண்கட் கோதைய ரிருவர்தமை
மழைநிக ரருண்முருகன் மலர்க்கர மவைபற்றி
விழைமக வழல்வலமா மேவியி ருந்தபினே. (௪௨)

பூசுரர் மறைநீடப் புலவர்கள் புகழ்பாட
வாசகன் முனிவரெலா மாசிசொ லிக்கூடப்
பாசிழை யாரமரர் பாவையர் மலர்போடக்
காசணி முலையமரக் கணிகையர் நடமாட. (௪௩)

வாரணி மணிமுரசம் வல்லிசை குடமுழவ
நேரிற டாரியொடுஞ் சல்லரி நீள்பம்பை
சீரிசை வளைவீர சின்னங் குழல்கஞ்ச
மார்கலி யெனவைம்பாற் கருவிக ளார்த்தனவே. (௪௪)

மங்கல சூத்திரமம் மணிவண னணிமருகன்
செங்கையி னேந்திமணத் தெரிவைய ரிருவர்களம்
பொங்குற மழகெய்தப் பொற்பின்ம கிழ்ந்தணியச்
சங்கர னுமையுவகைச் சாகர மூழ்கினரால். (௪௫)

அரசினை வலமாகி யறுமுக னொளிர்கையினாற்
சுரிகுழ லரிவையர்மென் றுணையடி யம்மியின்மேற்
சரசம துடன்வைப்பத் தையல ருந்ததிதான்
பரிவுட னெதிர்கிற்பப் பார்த்தவ ளுக்கருளா. (௪௬)

இவ்வகை யெழிலாக வியன்மண விதிகளெலாஞ்
செவ்விய நான்முகனுஞ் சித்தவிருப்புடனே
யொவ்வி நடத்தியபின் னுத்தமி யாருடனே
திவ்விய மாளிகையிற் சென்றன னறுமுகனே. (சள)

மாயவ ணர்வதுவை மண்டப மத்தியினி
ணாயக மாய்முனிவர் நாவல.ரேனையுளோ
ராயவர் தங்களுள வாவலொ ழிந்திடுபொன்
றாயபல் பூடணமுந் தூசொடு வீசினனால். (சஅ)

கற்பக நிதிகளெலாங் காமரு மிந்திரனா
ரற்புறு மேகமென வாதுலர் வேதையெலாந்
தற்பர னருள்பெற்றோர் சஞ்சல மற்றதுபோற்
சொற்பொழு திடைமாறச் சொரியம கிழ்ந்தனரால், (சகூ)

இன்னவி சேடமெலா மெய்திய பின்முருகன்
பன்னிய ரிருவருடன் பால்பழ முண்டருள
மன்னிய கலைமகளு மருமலர் வளர்மகளு
முன்னத முடனாட்டி யொப்பறு மகிழ்பெற்றார். (ருo)

தெய்வத நற்பசுவுந் திருமண மதில்வந்தோ
ரெய்தரு மகிழ்மலிய வின்சுவை யமுதுபடைத்
தய்யமில் பாசடையு மன்புட னேயருளத்
துய்யவி ருப்பினுடன் றுய்த்தன ரியாவருமே. (ருக)

மான்மழு வேந்தியநம் வள்ளலி னருள்பெற்றுத்
தேன்மரு வுந்துளவத் திருமக ளிறைமுதலாம்
வான்மரு வும்பரொடு மாதவர் யாவர்களும்
பான்மையி லவரவர்தம் பதியுழை மேவினரால். (ருஉ)

அவரவ ருறைபதியி னன்புட னேகியபி
னெவரையு முனமேதந் தினிதருள் செய்தபர
சிவனரு ளொடுபால சித்தனை யெதிர்நோக்கித்
தவலரு முன்சாபந் தணந்தினி மகிழென்றான். (ருங)

நிறையரு ளொடுமமல னின்னநி கழ்த்துதலுங்
குறையகல் சித்தினனெண் குணநிலை மிகுபுகழோ

னறுமல ரடியிணையை நன்குப ணிந்திட லு
மறமரு ளுமையவளுக் கதிபதி யிதுமொழிவான். (௫௪)

வேறு

இத்தலத்தினமதிளவ விலகியவேற்சண்முகனோ டினிமையாக,
வொத்தமர்ந்தங்கெழிலைந்நா ளுண்டுலகிலாகமத்தி னொழுக்கம்
வாய்ப்பப், பத்திநெறிதருபூதி யக்கமைந்தக்கரம்வளரப் பலருஞ்
சித்த, சுத்தியினாற்சித்தியுடன் முத்திபெறுமந்தணத்தைத்
தொகுத்துக் காட்டி. (௫௫)

பின்னர்நம்பாற்கலந்திருத்தி யென்னவரமினிதருளிப் பிரண
வத்தை, மன்னவருட்குருபரனோ டளவளாயற்புதத்தின் வாழ்க
வென்று, தன்னரியவருட்குறியை நிறுவிப்பின்கைலைமலை சார்ந்தா
னன்பா, லென்னையெடுத்தருளப்ப னப்பணிவானொப்பில்லா
னிறைவன்றானே. (௫௬)

அங்கமலனமர்ந்திருக்க வணிமயிலைக்கிரியின்மிசை யன்பர்
போற்ற, பங்கலநல் வினைமுடிந்த பின்னரெழின் மான்பயந்த
வல்லியோடுஞ், செங்கலசக்கொங்கையிபம் பயந்தமலர்க்கொம்பி
னொடுஞ் சிறந்தகாதற், பொங்குகடலாரின்பந் திளைத்தாடியினி
தமர்ந்தான் போர்வேலானே. (௫௭)

சின்னாளின்பந்திளைத்துச் சிவஞானமுணர்தவத்தாற் சிவ
ஞானிப்பேர், பன்னரியபாலசித்தற் களித்துமணிச்சிவிகைமுதற்
பலவுமீந்து, தன்னருகின்வரப்புரிந்தே யென்னைவழிவழியாளுஞ்
சாமிநாத, னுன்னரியமானமிசைத் தேவியர்களிருவரொடு முவப்பி
னேறி. (௫௮)

மயிலைமலைநின்றுருவிச் சூர்தடிந்தவடிவேற்கை வரதன்
சென்று, பயிலிளஞ்சூன்முகில்பரவும் பொழிலுடுத்தபருப்பதங்
கள் பலவுமெந்தஞ், செயிரகற்றுமுயர்தெய்வத் தலம்பலவுஞ்சென்
றுடல் சிறப்பச்செய்தே, யியலுமறையோடுசிவா கமநெறியிவ்வுலகி
னிடை யிலகவெண்ணி. (௫௯)

சித்தன்முகநோக்கிநம தெந்தைமுனமுனக்கருளிச் செய்த
வாறே, யெத்திசையுமறைமுறையா கமவழிநின்றிடும்வண்ண

மியற்றுகென்ன, முத்தனறுமுகச்செவ்வே டனதுதிருவாய்மலர்ந்து மொழியலோடு, மத்திறஞ்செய்குவலென்று வடியருடன்றேச மிசையடர்ந்து பின்னர். (௬௦)

பொய்திகழுமிடைமடவார் போகம்பேரின்பமெனும் புன்மைத்தாய, நொய்யவுலகாயதம்புத் தஞ்சமணமீமாஞ்சை நுவலும் பேறில், கைதவப்பாட்டாசாரி யம்பாஞ்சராத்திரமாங் கடைமைத்தாய, மைதவறுப்புன்மைதரும் புறச்சமயமனைத்தினையு, மாயநூறி. (௬௧)

நிலவுமகச்சமயமெனுஞ் சைவமாவிரதமொடு நீடும்விஞ்சை, பலவுறு பாசுபதங்கா ளாமுகமேவாமம்வை ரவநற்பண்பி, னல மருவுமிவைகளுறுந் துகளகற்றிப் பாலசித்த னண்ணலோர்ந்து, குலவுநலப்பக்குவமே யுற்றவர்களாங்கன்பு கொண்டுமேவி. (௬௨)

தக்கமறைநெறியருளும் பாலசித்தனருட்கமலச் சரணஞ்சார, மிக்கவருட்கண்சாத்தி யவர்பாசம்பாற்றிவெய்ய வினைகடிய, வக்கணங்தெய்வதப்பூதிப் பிரசாதமினிதருளி யன்பின்மேவு, மக்கானும்பவந்தொலைப்பா மெனவருளினுறுதிநிலை வழங்குவானல். ()

உரிமையொடுமுழுவலன்பா னமதுசரணடைந்ததனு லுறுதி யுள்ளத், தரமுடையீருய்யுநெறி கேண்மினெனப் பாலசித்தன் சாற்றுகிற்பான், பிரமமதைமொழிசைவ சமயசித்தாந்தம்மறையிற் பேசுமூல, மருவுபொருளாதலினுற் றெய்வமறையீதென்ன வகுக்கலாமால். (௬௪)

ஆதியாகியபரம னருளினுற்றோன்றினபல் லாகமங்க, ணீதியாஞ்சைவமிலா குலம்பண்ணும்பாசுபத நிகரில்சோப, மோதலுறும்வாமமுயர் தக்கணமேதையமிசிர முரைத்தநான்கு, நீதிலுயர்சித்தாந்தம் பெறுமுன்னமுரைத்தவருட் சீர்கொள்சைவம். ()

புகல்வாமஞ்சத்திபரம் வைரவற்காந்தக்கணம்பின் புகலுமேழு
நகினல்லார்க்காமிசிர மேதைமறைசொலுந்தரும நவிறலானும்
பகர்தருபன் மதங்கள்கெட நின்றுபொரலானுமுயர் பதமேநல்குந்
தகைமிகுசிவாகமசித் தாந்தமறைமதமாகத் தழைப்பதாமே. (௬௬)

காமிகமேமுதலாய விருபத்தெட்டாகமத்துங் கலக்குமீச
ஞமவனுத்தரபாக முழுதுடைத்தால்வீரசைவ மவற்றின்பாலாய்
நேமமொடுசித்தமயஞ் சிவமாகக்கொண்டுவித்தை நிரந்தமாயை
சேமமகன்றிடக்கடித நிகழ்வீரசைவமெனத் தெரித்திட்டானல்.

வேறு

என்றினிதாகவ கச்சமயத்தை யெடுத்துநிறுத்தியபி
னன்றொருநால்வர்த மக்குபதேசம ளித்தவனேயிவனென்
றொன்றவுரைத்திட வையமும்வேளுட னுற்றுகலந்தபினர்
சென்றனனுறுமு கக்குமரன்றிகழ் சித்தனதாச்சிரமம். (சுஅ)

வேறு

போந்தவுடன்முருகேசன் றுணையடியைப்பாலசித்தன் பூசித் தெந்தாய், சாந்தவருட்கடலேசண் முகத்தேவேயெனத்துதிகள் சாற்றுங்காலே, வாய்ந்தசிவஞானியுன்றன் பூசைதுதிவியந்தாமுன் மனத்தினெண்ண, மாந்திறநீபுகறியெனச் சிவஞானபாலசித்த னறைவான்மன்னே. (சுகூ)

எம்பெருமகினதுதிரு வருட்கிசையவிம்மடந்தா னென்ற ஞலே, செம்மையுறவமைந்ததனு லென்சீடற்கபிடேகச் சிறப்புச் செய்து, மும்மையுலகும்புகழத் தேசிகப்பட்டமுநல்கி முதுபா ரேத்தக், கொம்மைமுலையுமைபாலா வென்பொருட்டிங்குன்ன தருள் கூர்தல்வேண்டும். (எο)

எனவுரைத்தவாறன்னேன் சீடனுக்குச்சிறப்பாதி யீந்தமர்த் திப், புணையுமக்கமணிநீறு தாரணஞ்செங்கலிங்கமின்ன பூணச் செய்தே, யினியபாலருந்தியுறத் தன்னமிசத்தோரமிச மிருத்தி யென்றுங், கனைகடற்பார்தொழச்சீட பரம்பரையின் வாழ்க வெனக் கருணைகூர்ந்தே. (எக)

பாலவயதொடுபிரம நிலையுணர்ந்தீயமர்ந்த பரிசான்மெய்ம்மை
சானுமிந்தவாச்சிரமம் பாலமடம்பிரமபுர மென்னச்சாற்றிக்
கோலமயிற்குமரேசன் சிவஞானியொடுமன்பிற் குழுமியேகி
வேலையிடைத்திகழ்புவியி னுயிர்தழைப்பமயிலைமலை மேவினனல்.

எய்திமயிலைச்சிலம்பிற் சூரன்முனம்வேண்டியவா றெழிற் கோயிற்குட், டையலர்களிருபுறமு மினிதிருப்பவமர்ந்தனன்வேற் சாமிநாதன், றய்யசிவஞானதேசிகத்தேவனவ்வரையிற் றுலங் கைஞ்ஞாறுண், டெய்தளவுஞ்சிவஞானச் சித்தவுருவோடுலக ரேத்த நின்றான். (எங)

பின்னரருட்குமரேச னலயத்தினணித்தாகிப் பிறங்குந்தென் பால், மன்னிலிங்கவுருமேவி வானவர்மண்ணினருரகர் வந்து போற்றி, யுன்னியவெலாமடைய வளித்திடுவான் சித்தர்பிரா னுறைந்தானென்னுத், தன்னைநிகர்சூதமுனி வரனுரைப்பமுனிவர் மகிழ் சார்ந்தாரன்றே. (எச)

வேறு

கந்த வேளிரு கன்னியர் தம்மையும்
வந்து மாமயி லோங்கலின் மாமணஞ்
சிந்தை யன்பினிற் செய்தமை செப்பினுங்
கந்த மாமலர்த் தீர்த்தங் கழறுவாம். (எரு)

திருமணச்சருக்கமுற்றிற்று

ஆ திருவிருத்தம், ௩எஅ.

(வ ச ன ம்)

முனிவர்களே! தன்னைப் பூசிக்கின்ற அடியார்களது இருதய கமலத்தில் விளங்கும் பரமேஸ்வரன் ஜோதிமயமான ஆசனத்தின் மேல் அமர்ந்தனர். தும்புரு நாரதர் இசைபாடினர். விட்டுணு நான்முகன் முதலிய தேவர்கள் ஒன்றுகூடி அரிய தோத்திரங் களைக் கூறினர். அத்தகைய தேவர்கள் அனைவரையும் நோக்கி அவரவர் தகுதிக்கேற்ற முகமன்கூறி ஆதனங்களில் அமர்வித்து தேவதச்சனுகிய மயனை நோக்கி நமது குமாரனுகிய முருகனுக்கு, கலியாணம் இன்றைக் காதலால் அதற்கேற்ற கலியாண சாலையும் நகரமும் இயற்றுக என ஆக்ஞாபிக்க, அவ்வாறே மந்திரவலியால் அமைத்துதவினன். அவ்வாறு அலங்கரிக்கப்பட்ட கலியாண சாலை, மணவறை முதலிய தானங்களின் சிறப்பைக் கண்டவர்க ளுக்குப் பசி முதலிய உபாதிகள் நீங்கும். அதன் சிறப்பை எடுத்

துக் கூறப் பிரமன் இந்திரன் முதலியோர்க்கும் வலியின் றென்றால் யான் எவ்வாறு சொல்லி முடிப்பது? முருகனுக்கு மங்கல நீராட்டு விக்கும்படி பிரமவிட்டுணுக்களுக்குப் பரமசிவன் ஆக்ஞாபித்தனர். கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி முதலிய புண்ணியநதிகளின் தீர்த்தங்கள் ஒருங்கு கொணர்ந்து கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், இளநீர் முதலியவற்றால் முழுக்காட்டி நீர் துவட்டிச் சிகை யுலர்த்தி முடித்து ரத்னாபரண பீதாம்பராதி தரித்து நீறு தீட்டி, ஆறு திருமுடிகளிலும் கிரீடம் தரித்து முடித்தபோது பாலசித்தர் ஓர் செந்தாமரைமலரைக் குமரக்கடவுள் திருக்கரத்தில் அளித்துத் தோத்திரித்து வணங்க, ஊர்வசி, மேனகை முதலிய அரமகளிர் நடனம் புரிய, வாணன் ஆயிரங் கரங்களால் குடமுழாமிழற்ற, பானுகம்பன் ஆயிரம் வாய்களால் சங்கத்தொனி முழக்க, விட்டுணு இந்திரன் இருவரும் மகிழ்ந்து அருகில் வர, கந்தர்வராதியோர் பூமழை பொழிய, வேதப் பிராமணர்கள் மறைமுழங்க, மணமண்டபத்தில் முருகக்கடவுள் சென்றார்.

இஃது இவ்வாறு இருக்க, பார்வதி தேவியாரின் திருவாக்குப்படி சரஸ்வதி, இலக்குமி, இந்திராணி, ரிஷிபத்தினிகள் முதலியோர் வள்ளிநாயகி தெய்வயானை யம்மையாகிய இருவரையும் சொர்னபீடத்தில் அமரவைத்து, சுத்தோதகம் பன்னீர் சுகந்தோதகம் ஆட்டி, ஈரந் துவற்றி, கூந்தலுக்கு அகிற் புகை ஊட்டி, அணிபெற முடித்து, ஆபரணங்கள் அணிந்து, பீதாம்பரமும் கச்சும் புனைந்து, சிரபூஷணம் சூட்டி, பாதங்களிற் சிலம்பு தரித்து, அட்ட மங்கலங்கள் ஏந்தி, சிவிகை ஏற்றி கலியாண சாலை புகுந்து, கந்தக் கடவுளுக்கு இரு பக்கமும் அமரவைத்து, அவர்களும் சபையில் அமர்ந்தனர். பிரமதேவர் வேதவிதிப்படி அக்னி ஓமம் புரிந்து பாலசித்தரை நோக்கி உனது புதல்வியரைப்போல் உன்னாற் காக்கப்பட்ட கன்னிகைகளை, குகக்கடவுளுக்குத் தத்தம் பண்ணுக என்றபடி சித்தர் பார்வதி பரமேஸ்வரர் கரத்தில் தாரைநீர் வார்த்தனர். அதன்பின் திருவருள் நிறைந்த முருகக்கடவுள் தேவிமார் இருவரையும் பாணிக்கிரகணம் செய்து, அக்கினிவலம் வந்து, பூசுரர் வேதம் முழங்க, புல

வர்கள் பாட, மகரிஷிகள் ஆசீர்வதிக்க, தேவமாதர் மலர்தூவ, அறமகளிர் நடனமாட, முரசம் முதலிய வாத்தியங்கள் முழங்க, குமாரக்கடவுள் இருதேவியர்களதுகழுத்திலும் அழகு நிறையும் படி மங்கல சூத்ரம் தரித்தனர். அம்மிமிதித்தல், அருந்ததி பார்த்தல், முதலிய சடங்குகள் முடித்து தேவிமார்களுடன் திவ்யாலங்கார ஆஸ்த்தான மாளிகையில் ஸ்ரீ சண்முகப்பெருமான் சென்று வீற்றிருந்தருளினர்.

ஸ்ரீ நாராயணமூர்த்தி மண்டபத்தில் தலைமை யமர்ந்து முனிவர், பாவலர், ஆதுலர், முதலியோருக்குப் பொன்பூண் ஆடை முதலியன வழங்கினர். கலைமகள், திருமகள் இருவரும் முருகனுக்கும் தேவிமாருக்கும், பால் பழம் ஊட்டி மகிழ்ந்தனர். காமதேனு அங்குவந்தோர் பலர்க்கும் அறுசுவை யுண்டியும், சுகந்த தாம்பூலங்களும் வழங்க அனைவரும் துய்த்தனர். ஈசுர கிருபையைப்பெற்று பிரமவிஷ்ணுவாதி தேவரும், முனிவராதியோரும் தத்தம் இருக்கை சேர்ந்தனர், பரமசிவன் பாலசித்தரை நோக்கிச் சாபந்தீர அநுக்கிரகித்தனர். அப்போது சித்தர் பரமசிவனை வணங்குதலும் ஈசுவரன் அவரை நோக்கி இந்தத் தலத்தில் நமது குமாரனாகிய முருகனோடு உரிமையுடன் சமமா யமர்ந்து ஐந்நூறு ஆண்டுவரை உலகத்தில் ஆகம ஒழுக்கங்கள் பொருந்தவும், விபூதி உருத்திராக்க பஞ்சாக்ஷர மகிமை வளரவும், பலரும் சித்த சுத்தியும், சித்தி முத்தியும் பெறத்தக்க மந்த்ரோபதேசஞ் செய்து பின் நம்மோடு ஐக்கமுற்று விளங்கக் கடவாய்! என்றருளி அந்தர்த்தானமாயினர்.

மான் மகளாகிய வள்ளியம்மையோடும், யானைமகளாகிய தெய்வயானை யம்மையோடும் குகக்கடவுள் இன்பாநுபவத்திலமர்ந்து பின் பாலசித்தர் மீது மகிழ்ச்சிகொண்டு சிவிகை, விருது, சின்னம் முதலிய சிறப்புகளருளி, தன்னுடன் உலாவரும்படி செய்து தான் அழகிய விமானத்தில் ஆரோகணித்து தேவிமாருடன் மயிலாசலத்தில் நின்றும் நீங்கி மேகங்கள் படருகின்ற பல பர்வதங்களுக்கும் சென்று தெய்வீகத்திருவிளையாடல்களியற்றிச் சிவாகமநெறியை உலகத்தில் விளக்கக்கருதிச் சித்தரை

நோக்கி எமது தந்தை, பூர்வம் உனக்கு அருளியபடி சித்துகள் இயற்றுக எனச் சொன்ன அளவில் உத்தரவுபெற்று தேசங்களிற் சென்று, உலகாயதம், புத்தம், சமணம், மீமாம்சை முதலிய புறச் சமயங்களை யடக்கி அசச்சமயமாகிய பகுதிகளைக் குற்றம் நீக்கிக் காத்துப் பாலசித்தர் விளங்குவதைப்பார்த்துப் பக்குவிகள் அவரது திருவடியை யடைந்து வணங்க அவர்களைக் கடாக்ஷித்து விபூதிப் பிரசாதம் அருளி முடிந்த திருவருள் நிலையை உபதேசிப்பதானர்.

உரிமையோடும் உழுவலன்பினுடனும் நமது பாதத்தை யடைந்ததால் பக்குவிகளாகிய நீங்கள் உண்மை மார்க்கத்தைக் கேளுங்களெனக்கூறி, பிரம்மநிச்சயமுணர்த்தும் சைவ சமய சித்தாந்தமானது வேத மூலத்தையுடைய பொருளானதால் தெய்வீக வேதமென்னக்கூறலாகும். ஆதியாகிய பரமசிவனருள்வடிவிற்றோன்றிய பல ஆகமங்கள் சைவம்தவிர, பாசுபதம் வாமம் தக்கிணம் மேதை என நான்கும் உயர்ந்த சித்தாந்தத்துக்குமுன் பூர்வபக்ஷமாக உரைத்தது. அழகிய அருளையுடைய சைவமானது சித்தாந்தமாகக் கூறப்பட்டது. இவற்றுள் சொல்லிய வாமம் சத்தியின் பகுதியும் பாசுபதம் வைரவன் பகுதியும் மிசிரம் தெக்கணம் யாமளையின் பகுதியும் மேதை வைதிகமும் ஆம். இவை அவ்வத் தருமத்தைக்கூற வந்தனவாகையால் சிவாகம சித்தாந்தமானது வைதீக சைவ சித்தாந்தமாக விளங்கும். காமிகமாதிவாதுளாந்தமான இருபத்தெட்டு ஆகமங்களும் அருளிய பரமசிவன் உத்தர பாகத்தையுடைய * வீரசைவத்தின்பகுதியாய்ச் சித்தமயமே சிவமாகக்கொண்டு அவித்தை மாயை களினது விளைவை நீக்கி அகற்றலாகியதைச் செய்வதால் அதுவேவீரசைவமென்னத் தெரிவித்தருளினர்.

என்று இவ்வாறு அகச்சமய விளக்க உபதேசமியற்றியபின் சனகாதி நால்வருக்கு அநுக்ரகித்த பரமசிவனே யிவரென்று கூறும்படி சித்தர்முருகனிடம் சேர்ந்தனராக இருவரும் சித்தராச்சிரமம் சேர்ந்தனர். அங்கடைந்தபின் சித்தர்முருகனைப்

* வீர சைவம் - வீ - மாயைவிளைவு, ரம், அதனைப் போக்குதல். மாயையைப்போக்குந் தன்மையுடைய சைவம் என்க.

பூசித்துத் துதிக்க அவர் மகிழ்ந்து உனது தொண்டுக்கு உகந்தனம். உனது விருப்பத்தைக் கூறுக என்றனர். அது வினவிச் சித்தர் எமது பெருமானே உமது திருவருளால் இந்த மடமானது அடியேனுற் சிறக்க அமைந்ததாதலில் எனது சீடனுக்குப் பட்டாபிஷேகமியற்றி மூவுலகமும்புகழத் தேசிகப் பட்டமுமளித்து உன் றிருவருள் பாலித்தல் வேண்டும் என்று விக்ஞாபித்தபடி அவாது சீடனுக்குச் சகல சிறப்புங்கொடுத்து அமரச்செய்து விபூதி உருத்திராக்ஷம் லிங்கதாரணம், காஷாயம் முதலியன தரிப்பித்து, பாலுணவுண்டு வசிக்கும்படி தனது ஓர் அமிசம் அளித்து எக்காலத்தும் சீட பரம்பரையாய் நீடூழிவாழ்க, எனக் கருணைபுரிந்து பாலவயதிலே நீ பிரம்மநிச்சயமுணர்ந்து வசித்ததால், சத்திய விளக்கமமைந்த இந்த மடமானது, பாலமடம், பிரமபுரமென்று பெயர்சாற்றிக் குமரக்கடவுள் பாலசித்தரோடு உலகத்துயிர்கள் அனைத்தும் வாழும்படி மயூராசலம் சேர்ந்தனர். சூரபன்மன் முன்பு வேண்டிக்கொண்டபடி திருக்கோயிலில் உபய தேவிமார் இருபுறமமரக் குமாரக்கடவுள் வேலணிந்தகரத்துடனெழுந்தருளி யிருக்கின்றனர். பரிசுத்த சொருபராகிய சிவக்ஞான பாலையசித்தர் முருகன் றிருவாக்கின்படி பின் ஐந்நூறு வருடம் வரை சித்த வடிவத்துடன் வழிபாடுசெய்து விளங்கி முருகன் கருப்பகிரகத்தின் தென்றிசையில் சோதிலிங்க வடிவங்கொண்டு தேவர் மனிதர் உரகர் பலரும் வந்து வணங்கிச் சர்வாபீஷ்டங்களும் அடையக் கொடுத்தருளி விளங்குகின்றனர்.

## பத்தாவது
## தீர்த்தமகிமைச்சருக்கம்

சரதமறைக்கொருமுதலைத் தனையடைந்தார்க் கிருமுதலைச் சாராதானைங், கரதலமாரொண்மணியைக் கருதுமன்பர்கண்மணியைக் ககனத்தேவர், விரதர்தொழுமயின்மலையின் மேவுசமன்றடங்கரையில் விளங்குமெய்ம்மை, வரதவிநாயகனையன வரதமுநாம் பரவியின்ப மருவிவாழ்வாம். (க)

இருபரவைத்தோன்றுமொரு பிறைபோற்கண்ணுதலுமையு ளின்பம்பூப்ப, வருபரஞ்சேர்தோணியெனக் கங்கையிடைப் பிறைதவழ வயங்குவேணி, யொருபரமாம்பொருள்கொள்ள வரு மறையின் பொருளைவிரித் துதவுஞான, குருபரனுமெழிற்குமர னிருசரண மலர்சிரத்திற் கொண்டுவாழ்வாம். (௨)

உரைநவிலற்கருஞ்சூத னுபயசரணாரவிந்தத் துள்ளன்பார்ந்து, கரகமலங்குவித்தேத்திக் கசிந்துருகித்தாழ்ந்துகலைக் கடலேயின் னும், வரமுதவுபெருந்தீர்த்த மூர்த்தி தலமான் மியமும் வகுத்தி டென்ன, நிரைமுனிவர்வினவவதற் குளமகிழ்ந்தேயம்முனிவ னிகழ்த்தலுற்றான். (௩)

வேறு

அருளார்கைலை யாளிமுன மளித்தசாப மகலுதற்கு
மிருள்சீக்குஞ்செங் கதிர்வேல னெதிர்வந்தருளைத் தருதற்கு
மருண்மான்மகளோ டிபமகடன் மக்களாக வாய்ப்பதற்குந்
தெருளார்சித்தன் கண்டதனிற் றிளைக்குந்தீர்த்தஞ் செப்பரிதே.()

எந்தையமருஞ் சந்நிதிக்கங் கியைந்ததென்கீழ்த் திசையதனிற்
கந்தமொருகா வதங்கமழுங் கமலமலரு மழகுடைத்தாய்
வந்துவானோர் முதலோர்கண் மகிழ்ந்துமூழ்கி விசுவேசன்
செந்தாள்குமரன் சரண்போற்றிச் சீர்பெற்றிலகத் திகழ்ந்திடுமால்.

அவுணரிடுக்க ணொன்றுமுறு தமரர்கோமா னன்பொடுவந்
துவமையில்லத் தீர்த்தமதி லுவப்பின்மூழ்கி யொப்பிகந்து
நவையிலாத வைந்தருவு நாற்கொம்பயிரா வதப்பகடும்
புவனம்புகழ்சீர்த் தியதாகப் பொருந்திவாழ வருளியதால். (௬)

தீராக்காசஞ் சூலைவெறி செறியுங்கரங்கா லளவுகுன்றி
யாராத்துன்பு தருங்குட்ட மடரும்பாண்டுமெய்ந் நடுக்கம்
வேரார்வெதுப்பு முயலகனும் வெங்ரோயிரணப் புண்பலவும்
பாரார்மூழ்கிற் பரிகரிக்கும் பாலசித்தன் றீர்த்தமதே. (எ)

புதல்வரின்றி வருந்துமவர் பொழுதுமூன்று மூழ்கியொரு
மதியங்கறுமா முகன்கோயில் வலமாய்ப்புறக்கோ முகைமலியு

முதகமருந்தி நீறணியி னுயராதனத்தி னொருகுடைக்கீ
ழதிரமுரச முழங்கவுல காளுமகவைப் பெறுவரால். (௮)

தனதுகொழுநன் பரத்தையிலந் தணவாப்பிரிய னுய்த்தனையே
மனதிற்கருதா துறவருந்து மடவாரத்தீர்த் தத்தினிற்பங்
குனிமாதத்துத் திரந்தொடங்கிக் கூறுமதிமூன் றினுமூழ்கிற்
கனிவிற்கூடி யிரதியைவேள் கலத்தல்போலக் கலந்திடுவான். (௯)

மணமதின்றி வறுமையினால் வருந்துமாந்த ரைந்துமதி
யணியங்காடி யறுமுகவ னாலயத்தை வலம்புரியிற்
பணமாரல்கு லரம்பையர்தம் படிவமுற்றுந் திரண்டொருங்கு
நணியதெனப்பே ரெழிலார்ந்த நங்கையாரை மணம்புணர்வார். ()

கல்விபொருண்மெஞ் ஞானமுறக் கருதுமவரத் தடமூழ்கி
யல்லும்பகலு மத்தலத்தி னயில்வேற்கடவுள் விழியருளாஞ்
செல்வந்தருசந் நிதிநின்று தெரிசித்தோராண் டுறைவரெனிற்
பல்லோர்புகழ்சே டன்றனதன் பரவுஞ்சுகனே ராகுவரால். (௧௧)

அணிமாமுதலாஞ் சித்திபெற வாசையொருவர்க் குளதாயிற்
கணியாயுருவ முனமெடுத்தோன் கருதுமயிலைப் பருப்பதத்திற்
றுணியாவைந்து வருடமுமத் தூயதடநீ ராடியவற்
பணியாநிற்பி னெய்துமெனப் பகர்ந்தாரான்ற மேலோரே. (௧௨)

அத்தீர்த்தத்தின் றிருநாம மறையுங்காலைச் சிவஞான
முத்திதீர்த்தஞ் சிவதீர்த்த மோனதீர்த்த மூவாத
பத்திதீர்த்தம் பாலசித்த தீர்த்தம்படிவோ ரிட்டமெலா
மொத்தங்களித்த லாலிட்ட சித்திதீர்த்த மெனவுரைப்பார். (௧௩)

எங்கள்பெருமான் சந்நிதிக்கங் கெதிர்க்கீழ்த்திசையி லிந்திரன்றன்
பொங்குமன்பாற் கண்டதொரு புதியதீர்த்த மதன்பெயரோ
துங்கமுலவு வாசவதீர்த் தமதாமதனிற் றோய்ந்தவர்கள்
கொங்கையரம்பை மாதர்நலங் கொள்ளைகொண்டங் குறைகுவரால்.

அந்தமயிலை மலையில்வன்னி யாக்கினேயந் தனிற்கேணி
வந்துபுரிந்து மூழ்கிமுன மலர்க்கையமைந்த பேறதனை
லிந்தநாளு முலகினுளோ ரேகிவன்னி தீர்த்தமதிற்
சிந்தித்தாடின் முடங்களெலாந் திருமைம்பான் பருவமதில். (௧௫)

தென்பானடுவ னம்பரமன் றிருத்தாளுதையாற் றேகமுட
னென்புங்கலங்குந் தன்மையினு லியற்றியாடி யின்னறவி
ரன்பார்தரும தீர்த்தமதி லாடினோர்வந் தடர்பகைஞர்
தன்பால்வருந்தார் திடமேனி தாங்கிவாழ்வார் திண்ணமிதே. ()

நிருதிதிசையி னிருதிமுன நிருமித்தசுரர் தண்டனையாற்
பொருதுவேலைப் பொடியாகும் பொற்றண்டிகையை யதின்மூழ்கிப்
பரிதியொளிபோற் புதுக்கியதோர் பாங்கதாகு நிருதிநதி
யரிதினரிதங் நதிப்பெருமை யள்வைப்பகரு வாரெவரே. (கஎ)

குடபால்வருண னிடங்கரெனுங் கூர்வாளெயிற்று வன்மீன்ற
னடனீக்குதற்கோ ராண்டுபடிந் ததன்பினல்ல நீர்ந்தனனம்
மடலார்கமல மருவிரிக்கும் வருணதீர்த்தப் பெருமையையிக்
கடல்சூழ்புடவி தனில்யாவர் காண்போர்கதிர்வே லவனல்லால். ()

வடமேற்காகுந் திசையதனில் வாயுமுன்னங் கண்டரவத், திடமார்விடத்தை யொழிப்பதற்குத் தினமும்படியுந் தீர்த்தமொன்று, புடவிதனில்வாழ் மாந்தரதிற் பொருந்தியொன்பான் மதிமூழ்கிற், படவாயரவத் தால்வருத்தம் பாராதென்றுஞ் சீராவார்.

தனதனவுண ருருநிதியைத் தமதுவலியாற் பறித்தகல
வனையவிடுக்கத் தால்வருந்தி யணியார்மயிலை மலையடைந்தே
யினியவடபா லொருதீர்த்த மியற்றிமூழ்கி யேகுநிதி
தனையுற்றுனித் தடமூழ்கிற் சகத்தோரிழந்த பொருள்பெறுவார்.

ஈசானத்தி லீசானத் தெம்மான்சிருட்டித் துறுதீர்த்த
மாசாபாசத் தாலுழலு மான்மாக்களுக்கங் கருமையுடன்
பேசற்கரிய மெய்ஞ்ஞானம் பிறப்பித்தென்றுஞ் சிவலோக
நேசமாக்கு மந்நீர்தன் னீரையெவர்க்குச் சொலுநீரே. (உக)

வள்ளலுறையுந் திருச்சயில மதனிற்கீழ்பால் வரைச்சரியிற்
கள்ளக்கயலை வாட்டுவிழிக் கன்னியார்க ளிருவர்களு
முள்ளமகிழ்வாய் நிருமிதஞ்செய் துவப்பிலாடி யச்செவ்வேள்
விள்ளற்கரிய வுவகையினல் வேட்பமகிழ்செய் தடமதுவே. (உஉ)

அத்தீர்த்தத்தின் பெயர்தெய்வ யானைவள்ளி தீர்த்தமதா
மித்தீர்த்தத்தின் மூழ்கியன்பி னெழிலார்மடவா ரெனையாளுஞ்

சத்தியிருவர் தமைவணங்கிற் றங்கள்கொழுநர் தமைத்தணந்து
நத்தாதுறினுஞ் சேட்செலினு நண்ணிமருவி வாழ்ந்திருப்பார். ()

வேறு

பாலசித்தரினி துற்றபீடமதிற் பத்தொடைந்தினர சாய்வரும்
பாலசித்தனெனு மாதவக்குரிசில் பத்தகோடிகள்ப ரிப்பவன்
வேலணிந்த சிவசுப்ரமண்யனென மேவுஞானகுண சேகரன்
மேலமைந்தமயிலா சலச்சிகரி மெய்த்திருப்பணிக ளாற்றினேன்.

சத்தமாதிவிட யத்தைமுற்றுபுத னக்குளேவயம தாக்கினேன்
சத்துவத்திடைய ருதிருப்பன்மறை தன்கருத்தையள விட்டவ
னுத்தமர்க்குளுய ருத்தமன்னுலகமித்தையென் றுனியொழித்தவன்
பத்தர்தங்களுளம் வைத்தகாமியம னைத்தையும்பரிவி னீபவன். ()

ஆகமம்பலக லைக்கியானமறி கின்றவன்றுரிய நின்றவன்
வாகுலாவியவு ருத்திராக்கமொடு நீறுதாரணம்வ யங்குசெம்
பாகமாகியுயர் காவி மேவுகலை பால்கொளன்புறுநி வேதனம்
யோகமானதவ மேன்மையீகையெழி லுற்றவற்குநிக ரியாவரே. ()

வேறு

அத்தகுசித்தன்ம னத்தில்விருப்பொடு மம்மயிலைக்கிரிமேற்
பத்தியின்மிக்கவி யற்றிவிளங்கிடு பண்புறுநற்கூப
முத்தனருட்கட லென்னவுமத்தன்மு டித்தலமேனதியாஞ்
சத்திவிருப்பொடு புத்திரனுக்கெதிர் தங்கினளென்னலுமாம்.(உள)

அமராநந்தந் தீவினையகல வணிநீர்ஞாலமதி
லமராநந்தங் கொண்டுவிளங்கிய தன்றியுமார்மதுவார்
ஞீமிராநந்தங் கொண்டகடம்பணி நிமலன்பதநல்குங்
குமராநந்தக் கூபமெனும்பெயர் கொண்டுயர்தீர்த்தமதே. (உஅ)

வேறு

தரிசனத்தாற்பரிசத்தான் மூழ்குதலாலருந்துதலாற் சனனந் தீருங், கரிசறுமாதவமுண்டாங் கவலையிலையவலமிலை கல்வியுண்டா, மரியயன்மாதவமுனிவர் தம்பதமுங்கருதினெய்து மல்லறீரு, மிரு வினையுமொருங்ககலு மென்னினதன்சிரினைத்தென் றிசைத்தற் பாற்றே. (உகூ)

எவ்வுலகுந்தொழுந்தலங்க ளின்மயிலைமலைத்தலமே யிறைமை
யாகு, மெவ்வுலகுந்தொழுந்தீர்த்தங் களிற்சித்ததீர்த்தமதே யிறை
மைத்தாகு, மெவ்வுலகுந்தொழுமூர்த்தி களின்மயிலைமலைமுருக
னிறைவனாவ, னெவ்வுலகுந் தொழுமடியார் தமின்மயிலைமலை
தொழுவா ரிறைவராமே. (ஙo)

அத்தலத்தின்முருகனம ராலயத்திற்றிருப்பணியொன் றாற்று
வோர்க, ளெத்திசையும்புகழ்மருவ விவ்வுலகந்தனில்வாழ்ந்தின்
பிகந்தேயந்த, முத்தநகையரம்பைநல்லா ரிருபுறஞ்சாமரையிரட்ட
மொழியொணாத, சித்திரமாமரியணைமேற் பொன்னுலகினரசு
செய்வர் திகழ்ந்துமாதோ. (ஙக)

அளியாருந்தடம்பொழில்சூழ் திருமயிலைமலைக்குமரற் கன்பி
னோடு, மொளியாருந்திருவிளக்கொன் றிடுவோர்கள்வானுலகத்
தோங்கியாங்குக், களியாருமரம்பையர்க ளாயிரந்தீபங்கரத்தி
லேந்தவாழ்வார், துளியாருமலர்மாலை யணிவோர்கற்பகநிழலிற்
றுன்னுவாரால். (ஙஉ)

எந்தையறுமுகனமருந் திருமயிலைமலைத்தலத்தி லின்பத்தோ
டுங், கந்தமலர்த்தடமொன்று கண்டவர்கள் பிறப்பிறப்பைக்
காணாராகி, யந்திவண்ணனமர்கயிலா யத்தமர்வர் துன்பமெலா
மகன்றேயன்னோர், சிந்தையில்வந்தெழுமகிழ்வை யாவரினைத்
தென்றுரைப்பர் தெரிந்துமாதோ. (ஙங)

பாலிளநீரளையுதக மெண்ணெயருங்கனிகளிவை பண்பிற்றேடி
வேலனுக்கங்கபிடேகம் புரிந்தோர்கடேவநல்லார் மேன்மேற்கூடிச்
சீலமுடன்பனிநீரா லாட்டியரும்புனலாட்டிச் செவ்வாயூறுங்
கோலவமுதூட்டியணைத் திடுநலமும்பரகதியுங் கூடுவாரால்.

அணிமயிலைமலையில்வள ரறுமுகவற்கோராடை யன்பிற்றந்
தோர், பணியவமரர்களியாரும் பொற்பீதாம்பரந்தரிப்பர் பர
மன்பாலற், கணியொன்றுதந்தோர்கண் மணிகள்புனைந்தெக்காலு
மழிவிலாம, லெணியவளமியாவும்பெற் றிருந்திடுவரவர்பெருமை
யென்சொல்வேனே. (ஙரு)

கார்த்திகையார் திருமுலைப்பா லுண்டிடுஞ்செவ்வாயெழிலார் கந்தனுக்கு, நேர்த்தியதாமன்னகிவே தனஞ்செய்வோர்வானுலக கிருபராகிப், பார்த்திடுதற்கரிதெனுந்தே வாமுதத்தைத்தினமாரப் பருகியென்றுங், கூர்த்தபசிப்பிணியில்லாப் பேறடைவர்வீறுபுகழ் கொண்டுமாதோ. (ரு௬)

அப்பதியிற்செயுந்தரும மணுத்துணையாயினுமேரு வளவாமன்றித் தப்புறவாற்றியபாவ மெத்துணையேனுந்தினையாஞ் சாமிபாத முப்பொழுதுங்கண்டுதரி சித்தவர்கள்வினையகன்று முதல்வராகி யெப்படியுமிருந்தபடி புரந்திடுவரவர்சிறப்பை யார்சொல்வாரால்.

வேறு

முருகவேளுநஞ் சித்தரும்போர்தனின் முயன்றே
யொருமையாகப்பின் னமர்ந்துலகளித்திடு முவப்பா
லுருகிவந்தடி பணிபவர்தங்களுள் ளுவக்குந்
திருமலிந்துயர் சிவனடித்தாமரை சேர்வார். (ரு௮)

இனிமையாமயி லைத்தலத்தொருபக லிருந்தோர்
வனைகருங்கழன் மன்னராய்மாநிலம் புரப்பார்
துணைவிலோர்மதி யிருந்தவர்மாதவஞ் சூழ்வார்
கனிவினேர்சமை யிருந்தவர்வான்பதி காப்பார். (ரு௯)

திங்கடோறுஞ்சேர் கார்த்திகைநாட்களிற் சிறக்குந்
துங்கமஞ்ஞையங் கிரியினிற்றாயனீ ராடி
யெங்கணுயக னிணையடியருச்சனை புரிவோர்
தங்குபேரருட் செல்வமுந்தழைத்துவாழ் குவரால். (௬0)

மீனமாமதிப் பூரமுத்திரமெனும் வியனாண்
ஞானநாயக னறுமுகப்பரமனல் லருள்சேர்
வானளாவிர தாதியுற்சவத்தினில் வணங்கு
மானபுண்ணியர் பரனுருமேவிவை குவரால். (௬௧)

வானெனுஞ்சுவர்க் காதிபன்முதலவா னவரு
மேனையேழ்திசை யிறைவருமியக்கரு மெவரு
மானவன்பினோ டறுமுகற்போற்றுற வடையு
மானவித்தல மெத்தலங்கரென வகுப்பாம். (௬௨)

வேறு

உவமைசொலற்கரியதெனு மயிலைமலைத்தலப்பெருமைக் குவலமைகூறுங், கவனமுற்றேனதனைநினைத் திடுங்காலந்தொறுநகைப்பென் கண்ணேதோன்றுந், தவமலியுஞ்சிவஞான பாலசித்தனே பரசுந் தன்மைத்தாஞற், புவனமதிலெவர்புகழ்தற் கடங்குவதத் தலமகிமை புகலுங்காலே. (சங)

வேறு

இடபத் திங்களி னேற்றிடு மாரனு
ளடைவிற் கூடிய வத்தினந் தன்னிலே
தடமு லாவு மயிலைத் தலத்தில்வேற்
படையி னுன்வந் தமர்ந்தனன் பண்பினே. (சச)

தங்கண் மாமியென் றோர்வகை சாற்றிடுந்
துங்க நாளின் மிதுன மதிதனின்
மங்கை வள்ளிதெய் வானை யிருவரு
மிங்கு மாமயி லைக்கிரி யெய்தினர். (சரு)

உற்றி டும்மிட பம்மதி யுட்பூசங்
கற்றை யங்குழற் கன்னியர் தங்களை
முற்ற வும்மெனை யாளு முருகவேள்
கொற்ற மாமணங் கொண்டன னுமரோ. (சசு)

எங்கள் சித்த னிருங்கடல் வந்தநாள்
சிங்க மாமதி சீர்மிர்க சிரிடந்
திங்கண் மாமிது னந்திரு வாதிரை
பொங்கி லிங்கம தாப்பொலி வெய்தினன். (சஎ)

இன்ன நாளி லிலங்கிடு மன்பர்கள்
சொன்ன மாமயிற் றாய மலைதொழு
தன்ன மேமுதற் றுனங்க ளாற்றிடின்
மன்ன வாழ்வு மலிந்து மகிழ்வரே. (சஅ)

வேறு

துன்றுகதிர்வேற்குமரப் பெம்மானின்பக் தூயதவச்சிவஞான பாலசித்தற், கன்றுதருமயிலைமலைப் புராணந்தன்னை யகநிறைபே

ரன்பினெடு மணுகிக்கேட்போர், வென்றியுயர்புகழ்பெறுவர் கல்வி மேன்மை விழுச்செல்வமனைபுதல்வர் பேறுமேவிப், பொன்றலிலா வானுலகபோகமூழ்கிப் புண்ணியராய்ச்சிவபதத்தைப் பொருந்தி வாழ்வார். (சஅ)

வேறு

என்று சதுர்மறைக்குரிய சூதபுராணிகன்பரம விருதா டன்னே, யென்றுமறவாதிருத்தி மயிலேமலேக்குகனுட சினிமை யெல்லா, மென்றுலகிலிருளகற்றி யொளிவிடுக்கும்பரிசதுபோ லியாருங்கேட்க, வென்றுகடீர்க்குங்கருணைப் பெருமையினு லருமையொடு மியம்பினனே. (௫௦)

ஒங்குறுதண்ணளிச்சூத னைமிசாரண்யமுனி வோருக்கோதத்
தாங்கரியவானந்த மீக்கூர மொழிகுழறத் தாரைகண்ணிற்
பாங்கொடுவாரப்புளகம் பொடிப்பமுருகேசனிரு பதுமத்தானைத்
தீங்ககலச்செங்கரங்கள் கூம்பவுளத்திருத்திமகிழ் சிறந்தாரன்றே.

தீர்த்த மகிமைச் சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கூஉக.

---

வாழ்த்துப்பா.

வாழிமா மயில்வேதண்டம் வளரறம் வேதம்வாழி
வாழியெம் பாலசித்தன் மலரடி நிரைகோன்வாழி
வாழியா றெழுத்துகண்டி மன்னிய பூதிவாழி
வாழிநல் லடியார்வானம் வளங்கெழு முலகம்வாழி.

ஸ்ரீ ம யூ ரா ச ல பு ரா ண ம்
மு ற் று ப் பெ ற் ற து.

---

(வ ச ன ம்)

முனிவர்களே! அந்த மயூராசலத்தின் தென் கீழ்த்திசையில் செந்தாமரை மலர்கள் மலர்ந்து மணம்வீசி அழகு செய்யுந் தகுதி வாய்ந்து என்றுங் குறையா இயல்பினதாய் விளங்கும் பாலசித்த தீர்த்தமொன்று உள்ளது. முன்னொருகால் தேவேந்திரன் அதில் முழுகிப் பஞ்சதருக்களும் ஐராவதயானையும் அடையப்பெற்றசிறப் பினது. பூவுலகத்தார் அதில் முழுகிற் சகலவியாதிகளும் நீங்கிச்

சுகமடையச் செய்வது. குழந்தையில்லாதவர்கள் ஒருமாதம் முப்பொழுதும் மூழ்கி முருகனைவணங்கிக் கிரிவலம்வந்து கோமுகதீர்த்தம் உண்டு திருநீறு தரித்தால், உலகத்தை ஒருகுடையில் ஆளத்தக்க புத்திரனைப்பெறுவர்.

நாயகன் உரிமைபெறவிரும்பிய பெண்கள் முழுகினால், அவ்வாறு எய்தப்பெறுவர். விவாகம்பெற விரும்பும் புருடர் ஐந்து மாதம் அதில் முழுகி ஆலயம் வலம்வரின், பத்தினியைப் பெறுவர். கல்வி பொருள், ஞானம், இவையடைய விரும்புவோர் முழுகி இரண்டுகாலமும் முருகன் சந்நிதானத்தில் வணங்கில் அவ்வாறு பெறுவர். அணிமாமுதலிய அஷ்டமாசித்திகளையும் அடைய விரும்புவோர் அந்தத் தடாகத்தில் ஐந்து வருடம் விடாது முழுகி முருகனை வணங்கி லெய்துமென மேலோர் விளம்பினர். அந்தத் தீர்த்தத்துக்குத் திருநாமங்கள் சொல்லுங்கால், சிவஞான முத்தி தீர்த்தம், சிவதீர்த்தம், மோனதீர்த்தம், பத்திதீர்த்தம், பாலசித்த தீர்த்தம், இஷ்டசித்தி தீர்த்த மெனப்பலவாம்.

அன்றியும் சந்நிதானத்தின் நேர்கீழ் திசையில் இந்திரனாலமைக்கப்பெற்ற தீர்த்தமொன்று உள்ளது. அதன்பெயர் வாசவ தீர்த்தம். அதனின் முழுகுவோர் இந்திரலோகமடைவர். ஆக்னேயதிக்கில் அக்கினியா லுண்டாக்கப்பட்ட அக்னி தீர்த்தத்தில் முழுகினோர் முடம்தீரும். தென்றிக்கில் உள்ள தரும தீர்த்தத்தில் முழுகினோர் சத்துருபய நீங்கிச் சுகமடைவர். நிருதி திக்கிலுள்ள நிருதிநதியின் பெருமைகூற முடியாது. மேற்றிசையிலுள்ள வருண தீர்த்தத்தின் பெருமை முருகக் கடவுளல்லது வேறு யாவர் காணவல்லார். வாயுதிக்கிலுள்ள வாயுதீர்த்தத்தில் முழுகினோர் விஷபீடையின்றிச் சுகமுறுவர். வடதிக்கிலுள்ள குபேரதீர்த்தத்தில் முழுகினால் இழந்த பொருளனைத்தும் பெறுவர். வடகீழ்த்திசையிலுள்ள ஈசான தீர்த்தத்தில் முழுகினால் அஞ்ஞானத்தை நீக்கிச் சிவலோகத்தைக் கொடுக்கும். மலைச்சரிவில் வள்ளிதெய்வானை தீர்த்தமொன்றுண்டு அதன் புகழ்பல. என விரிவுபடச் சூதமுனிவர் கூறிமுடிக்க, வினவிய முனிவர் ஆனந்த பரவசமடைந்து விளங்கினர்.

வேலுமயிலுந்துணை

உ

குருவே துணை

இனாம் பொம்மயபாளையம்

பெரியமடம் இரண்டாவதுபட்டம்

ஸ்ரீலஸ்ரீ

# சிவஞானதேசிகப்பிரதாபம்

இஃது

திருவாமாத்தூர்க் கௌமாரமடாலயம்

மஹான் வண்ணச்சரபம்

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் குமாரர்

தி. மு. செந்தினாயகம் பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டது.

மயூராசலபுராணத்தின் அநுபந்தமாக

சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டது.

உ

குருவே துணை

# சிவஞானதேசிகப்பிரதாபம்

## பாயிரம்

### விநாயகர்துதி

திருமலியுங் கயிலைமலைச் சங்குகன்னன் சிவனுரையாற் சேயாய்ப்பூவில், வருபெருமைப் பாலசித்தன் றனக்குமுதற் சீட னென வாய்ந்தமேலோன், பொருவிலருட் சிவஞான பாலையன்சீர் தமிழ்க்கவியாற் புகலற்கைங்கைத், தருவனைய மதமலைமா முகக் கடவு ளிருசரணந் தலைமேல் வைப்பாம். (க)

### முருகக்கடவுள்துதி

குஞ்சரி வள்ளியென்னுங் கோதைய ரிடைவேலேந்தி
வஞ்சமில் லடியார்காண மயின்மிசை வயங்கும்வள்ளால்
தஞ்சமென் றுனையுட்கொள்ளுந் தவச்சிவ ஞானிதன்சீர்
மிஞ்சணித் தமிழினுயேன் விளம்பிடத் தயைசெய்வாயே (உ)

### கலைமகள்துதி

விருத்தகிரித்தியாகரா சக்கவிஞன்மயூரகிரி மேன்மைதன் னிற், றிருத்தகுமெய்ப்பாலசித்தன் றன்புகழ்ச்சீர்நன் கமைத்துச் செப்பியுள்ளான், பொருத்தமுற மவனருள்சேர் சிவஞானி பெருமையதிற் புகலாவாற்றுற், கருத்தில்விளங்கிடவுணர்த்திக் கருணைபுரிவாய்தவளக் கலைமின்னுளே. (ங)

### அவையடக்கம்

ஒருமாங்கனிதா னெடுத்ததுகண் டுள்ளஞ்சினந்து தொடு மொருவன், கருமாமநலி வசமாகக் கவிகூறியபா வலனனையார், திருவாருணர்விற் றெரிந்தோதுஞ் சிவஞானியின்சீர் சிறுமதியே,

ளுருவாரேுதத் துணிந்ததெண்ணி லுலகிற்பெரியோர் நகைப்ப ரன்றே. (ச)

துலங்கெமதுகுருவாகுந் திருப்புகழோன்கவுமாரத், தொகை யூடந்நா, ணலங்கொள்சிவஞானபா லயன்பெருமை சொலித் துதித்த ஞாயத்தாலே, மலங்குதுயரறுத்தருளு மவன்பெருமை யானுமிங்கு வழுத்தலுற்றேன், சலங்குலவுகடற்புவியிற் சற்சனர் நன்கேற்பரென்கை சரதந்தானே. (ரு)

பாயிரமுற்றிற்று

---

## நூல்

### எழுசீர் விருத்தங்கள்

நிலப்பொருந்திய பலபலநாட்டினு நிறைபல சிறப்பெல்லா, நலம்பெறப்பொலிந் துளதருட்கன்னட நாடதாம்வசவேசன், றுலங்கியெண்ணிலாச் சிவனருட்சங்கமர் தோய்ந்துபல் விளை யாடல், விலங்கனர்களுந் தெரியவாற்றியதொரு விதந்தெரித்திடு மாதோ. (க)

அல்லமன்றிரு வருளுருக்கொண்டுதன் னடித்தொழும்புறு தொண்டர்ச், கல்லல்போக்கிநன் ருற்றியபெருமைமுன் னும்புக ழினதாகும், வல்லகந்ததேசிகனெனோர்பெரியனம் மகிமைநாட் டினைநீங்கி, வல்லிபாகர்மல் லிகார்ச்சுனகிரித்தலம் வந்துதங்குபு போற்றி. (உ)

சிவபிரானருள் சென்னியேற்றன்புடன் றென்றிசைதனிற்செல்கா னவமிகும்பொழின் மலையனூரெனும்பதி நண்ணிநீரிடையாழ்ந்த வுவமைதீர்மர கதத்திருக்கடகந்தன் னுயர்கரத்தினிற்றுனைச் சிவனுமாறருள் காட்டவந்நாட்டிறை சிந்தையன்பதுபொங்கி. (ரு)

சிவிகையானைமா முதற்பல விருதுகள் சிறப்புடன்றரக்கொண்டே யவிவுறுப்புகழ்த் தில்லையம்பதியில்வந் தன்பினர்தொழவாழ்ந்து புவியுளோர்பச்சைக் கந்ததேசிகனெனப் புகலவுற்றனன்னோன் றிவியநன்மர பினிற்பிறந்தவளொரு சேயிழைதிருப்போல்வாள்.

## அவதாரம்

அவண்மணப்பரு வத்தினாயகன்கடி யாற்றியுமகப்பேற்றி
னுவகையெய்திடா மையினுளஞ்சலித்ததா னுயர்மலைப்பெருமுக்கல்
சிவமுறத்திகழ் பாலசித்தன்புடை சென்றடிபணிந்தன்னா
னவமதாயுண வவனுரைப்படிதின நற்சதுரக்கள்ளி. (௫)

என்னுமோர்மரத் தமைந்தபால்கறந்துவந் தினிதளித்திடு
தொண்டே, தன்னுரித்துறு தவமெனப்புரிந்திருந் தனனெடுநாட்
செல்கான், மன்னுபாலசித் தேசனோர்தினந்திரு மனத்தருள்சுரந்
துண்ட, பின்னுயர்ந்தபாற் சேடமாம்பகுதியப் பெய்வளையுணத்
தந்தான். (௬)

அதனைவாங்கியன் புடன்பணிந்துண்டதா லம்மைவைப்பெயரம்மை
மதனைநீற்றுகட் பரனருள்கொடுதனோர் வயிற்றிடைகருவாகி
விதனமின்றியீ ரைந்துதிங்களிலதி வியப்புறுமதிரூபச்
சுதனைநல்கினள் சுரர்மலர்தூர்த்தனர் துதித்தனர்புவியோரே. (௭)

## முருகன் அநுக்கிரகம்.

அந்தமாதவச் சுதனிதமாவளர்ந் தழகுமிக்குறதங்கிச், சொந்
தமாரருட் சித்தர்தம்பணித்தொழி றோய்ந்திருந்தனனந்நாள், கந்
தநாயகன் பாலசித்தன்றனுட் கருத்தினைநிறைவேற்றச்,செந்தகைத்
திரு வுளங்கொடச்சிறுவன்மேற் றிருக்கண்ணோக்கஞ்சேர்த்தே.

அரியசந்நியா சாச்சிரமங்கொடுத் தாசிரியத்தன்மைக்
குரியனாமபி டேகமும்புரிந்துதன் னொருகலையமைவித்துப்
பிரியமாகநீ பாலையுண்டருணெறி பேணியெண்ணறுதொண்டர்
பெரியதோர்சிவ ஞானதேசிகப்பெயர் பேசவாழ்கெனக்கூறி. (௯)

வளங்கொள்பொம்மமா புரத்தினிலமைந்தநன் மடாலயத்
திடைவைத்துக், கிளர்ந்தவித்தலம் பிரமமாபுரமெனக் கிளர்க
வென் றுரைத்தப்பால், விளங்குபாலசித் தன்றனோடருண்மயில்
வெற்பில்வந்தொருசூர, னுளங்களிக்கவோ தியபடிதேவிமா ருட
னமர்ந்தனன்மாதோ. (௧௦)

### பாலசித்தர் ஐக்கம்.

அந்தவாறிருக் கையிலருட்சித்தன்றா னாணிமாதத்தூடே
வந்தவாதிரை நாளில்வேற்குகன்றளி வயங்குதென்புறந்தோயுஞ்
சுந்தரத்தனி யிலிங்கமாமதனிடை தோய்ந்திரண்டறநின்றான்
செந்தகைத்திரு வருள்பெறுமேலவன் சீரெவர்தெரிவாரே. (கக)

தனதுதேசிக னாமுதற்பாலசித் தன்சிவவடிவாகிக்
கனமிகுந்திரு மயிலவெற்பதனிடை கவின்றசீர்தெரிந்தன்பால்
மனநெகிழ்ந்தெழிற் பொம்மையபுரத்திடை வதிந்தபாலையனெய்தி
யனகமெய்த்துதி பலசொலித்தலைபுவி யதிற்படப்பணிந்தானால்.()

### தோத்திரம்

கயிலையிற்சிவ கணத்தலைபாஞ்சங்கு கன்னநாயகபோற்றி,
சயிலமாமக ளுரைப்படிவாவிவாய் தங்குகாவலபோற்றி, பயிலு
மீசனைத் தடைசெயாதிருந்தனோன் பகர்சொலேற்றவபோற்றி,
மயிலமாமலைத் தலைமிகுதவம்புரி வள்ளலுன்கழல்போற்றி. (கங)

வள்ளிதேவகுஞ் சரியெனுமிருவரும் வலிதடைந்திடக்கண்டே
தெள்ளிதிற்புதல் வியரெனக்கொடுபுரந் திடுதிறத்தினைபோற்றி
கள்ளியைந்தபூங் கடம்புடைக்குமரனோர் காளையாய்ப் படைதாங்கி
நள்ளியுட்புக வருதல்கண்டருஞ்சமர் நடத்து மாரதபோற்றி (கச)

அவன்றன்மெய்யரு ளாலவனடிதொழ லமையுமென்றருள்வேத
நுவன்றவாறுபின் குகனெனத் தெரிந்தமா நுண்ணறிவினைபோற்றி
சிவந்தவேலவன் றனக்கவன்றேவியர் சேரநன்மணமாற்றி
நிவந்த வெற்பினின்றுலகெலாஞ் சிவநெறிநிறுத்துமாதவபோற்றி.

என்னையுன்னரு ளுணவின்பாற்சேடத்தா லிகத்துதித்திடச்செய்து
பின்னைவேலவன்கடைக்கண்மெய்யருளுறப் பெரிதுதவினைபோற்றி
தென்னைசூழ்மயி லாசலக்குசனருட் டிருவிளக்கொளியாகி
யன்னைபோலடி யவர்விருப்பனைத்துநல் கருட்குருபரபோற்றி. ()

சிவனுமால்குகன் சிவையுமைங்கரத்தனுஞ் செங்கதிரவனாதி
யவருமுன்றனை யலதிலையெனுநிச மறிந்தனனெனப்பல்வா
றுவமைதீர்துதி பகர்ந்துபொம்மயநக ருயர்மயின்மலையென்னுந்
தவநலப்பதி யிரண்டினுமுரியநற் றருமமியாவையுஞ் செய்தான். ()

### வேறு விடபீடைநீக்கல்

அந்தவா றிருந்தசிவ ஞானதேசிகன்று
னருண்மலிவாற் காஞ்சிநக ரடைந்துசிவை தழுவச்
சந்தமா ருருக்குழைந்து வடுச்சுமந்தமேனி
தாங்குதிரு வேகம்பன் றன்னெதிர்நின் றிறைஞ்சிக்
கந்தமா மலர்கொடருச் சனைபுரிந்து வணங்கிக்
கவின்றிடநா ளங்கொருவன் கட்செவியின் விடத்தால்
வந்ததீங் கறநீறு வழங்கியரு ளினனவ்
வயினென்றும் விடபயம்பின் வராதறச்செய் தனனே. (கஅ)

### சூலைநோய் நீக்கல்

அருள்விளையா டலின்விவரம் வினவியந்நா ளரசா
யந்நாட்டுற் றிடுதுலுக்க னையம்வியப் படைந்து
பொருவருதன் மனையவட்கெய் தியசூலைப் பிணிதான்
போகவரு ளுதியென்னப் புகன்றுவணங் கினனு
விருள்செறியன் னவனசைகண் டுன்னதகச் செருக்கா
லேகம்ப நாதர்தளிக் கிருந்தபொரு ளிபந்த
மருகவப கரித்தனைமுன் போல்விடுகென் றோதி
யங்கைவெண்ணீ றீந்தந்நோ யகற்றியரு ளினனே. (கக)

அம்முனிவன் றன்னருளான் மனைவியினோய் தீர்ந்த
ததுதெரிந்தம் மிலேச்சமன்ன னகமகிழ்ச்சி பொங்கிக்
கைம்முகிழ்த்து வணங்கியே கம்பர்திருக் கோயிற்
கடமையைமுன் னினுமதிகங் கவினவமைத் திந்தச்
செம்முனிவன் றனக்குநிலம் விடுத்துமட மமைத்தான்
சேர்ந்தடியார் புகழவன்ன தானமுத வியற்றி
நம்முரிமைச் சைவநெறிப் பயிர்தழைய நீர்பெய்
நன்முகில்போ லருண்மாரி நயந்துபொழிந் திருந்தான். (உ0)

உண்ணலுடுத் திடலுறங்க லுலவல்பொரு ளசைமுன்
னோதும்வினைக் கிலக்காய்வந் ததித்தவரே லுவப்பாய்
நண்ணலுற்றங் கிருந்திடுவ ருலகிலன்பர்க் குண்மை
நன்குதுலக் கித்தவச்சீர் நல்கவவ தரித்த

பண்ணவனுஞ் சிவஞான பாலையமா முனிவன்
பதிக்காஞ்சி விடுத்துவெளிப் படர்ந்துபல்லூர் சென்று
திண்ணமனத் தினர்பலர்வாழ் சேயூர்வந் தணைகாற்
சிலர்வீர சைவநெறித் திறலறியா தந்தோ. (உக)

மணலைச் சீனியாக்கல்

உளத்திடைவஞ் சகமழுக்கா றுற்றிருமட் குடத்தி
னுபசார முறையெனவெண் மணலொடுகல் லடைத்தே
தளப்புதுமா மலர்மாலை கலைதரித்துக் கொணர்ந்து
சந்நிதிமுன் செலுத்திமுக மன்புகன்றூரதனைக்
களக்கமறும் விளக்கமதா னுணர்ந்துகுகப் பெருமான்
கழல்கருதி யொருவனைக்கொண் டெடுத்தெவர்க்கு மளிக்கக்
குளக்கசிவுங் கற்கண்டுச் சுவையுமுறக் கண்டு
கும்பிட்டார் வம்பிட்ட குழுவினர்யா வருமே. (உஉ)

திருவருளின் செயலறிந்து தமதுபிழை தீரச்
சிவஞான முனிவனுளஞ் சிறந்தமகிழ் வெய்தப்
பொருவருசெய் வழங்கியன்னு னிருக்கமடஞ் செய்து
போற்றினரக் காரணத்தாற் செய்யூரென் றுலகோர்
தருபெயரப் பதியமைந்த தங்குசில காலந்
தங்கிமகேச் சுரபூசை தவத்திருவா டல்கள்செய்
திருளறுதென் றிசையின்வழி யேகியணித் தில்லை
யிறைவனரு ணடம்புரிபொன் னெழிற்சபைகண் டனனே.

சிதம்பர தேரிசனம்

புலியொடுபாம் பாமிரண்டு முனிவர்தொழப் பரமன்
பொற்புமலி சிவகாமி யம்மையெதிர் காண
வொலிதருவே தச்சிலம்பு புலம்பநடம் புரியு
முயர்பரமா னந்தநிலை யுத்தமன்கண் டிறைஞ்சி
நலிவறப்பல் காலிருந்து பின்னரிதி னீங்கி
நலமலிகா விரிவடபாற் றலம்பலகண் டப்பாற்
சொலிபுகழ்த்தென் பாற்சிவன்வாழ் கோயில்களுந் துதித்துச்
சோணாடு கடந்துதமிழ்ப் பாண்டிநா டடைந்தான். (உச)

## மதுராபுரி சேர்தல்

### வேறு

பொங்கழலுருவ னங்கயற்கண்ணி பொருந்தவாழாலவாயி தென, மங்கையர்க்கரசி யுடன்குலச்சிறையார் மாண்பமைத் தெமதுசம்பந்தர், சங்கைதீரருமைப் பதிகத்திற்றுதிக்குந் தமிழ்த் திருமதுரையம்பதியிற், கொங்கைமாதர்கண்மா லாதியேடணைதீர் குணங்கொள் பாலையமுனிகுறுகி. (உரு)

சுகம்பொலிமலயத் துவசன்வேள்வியினிற் றுலங்குமுத்தனத் துடன்றோன்றி, யிகம்பெறுமரசர் பலர்தொழமுடிபூண் டிருந்தநற் றடாதகையம்மை, நகம்பெறுசிலையார் தம்மெதிர்நாணி நன்மண முடித்தரசளித்தே, யகந்தவிருரிமைக் குறளுணவுணவன் றளித் திடமுடிவுறுதங்கு. (உசா)

வருந்திடவிறைவ னன்னவான்குழிதான் வருத்திப் பின் னழைத்ததாம்வையைப், பெருந்துறைபடிந்து பூசனைதியானம் பிழையறவிதிப்படிமுடித்துப், பொருந்துநல்வாத புரித்தவனிமித் தம் புராரிமண்சுமந்து வேத்திரத்தாக், கருந்தியமகிமை யாதிய கருதி யருள்கொள் சுந்தரேசன்முன்படைந்தான். (உஎ)

## மகப்பேறு வழங்கல்

அன்பதுபெருகத் தொண்டர்கண்முறையி லனந்தமாத்து தித்து மீனேக்கி, நன்பதுமத்தாள் பணிந்துசின்னுடா னயந்திருந் தனனந்தநகரின், மின்பயிலறுபா னன்கருளாடல் விளக்குமோர் சித்திரப்படாந்தான், வன்பறுமொருதை யற்றொழிலாளன் வனைந் தனன் மகப்பெறன்மதித்து. (உஅ)

அப்படாந்தனையம் பிகைசிவஞானிக் களித்திடுகெனப் புகன் றனள் கண், டெய்ப்பகன்றுவகை மலிவுடன்வணங்கி யினிதளித் தனன்கொண்டுஞானி, கைப்படிதிருநீ றுதவலான்முதுமை கழிந் துநல்யௌவனப்பருவச், செப்பமுமரிய புத்திரப்பயனுஞ் செல் வமும் பெற்றனனவனே. (உகூ)

## போம்மபுரமடைதல்

அன்னவாறனந்தந் திருவருளாட லன்பர்களறிதரவாற்றிப், பின்னமின்மகிமைத் தவச்சிவஞானி பெருமைகொள் பழமலைப்பதி போய்க், கன்னல்வில்லியையீற் றியசிவனுமையாள் கழல்பணிந் திருந்துபின்கடனீர், நன்னரோலிடலாற் செயந்திமாபுரம்போ னலங்கொள்பொம்மயபுர நயந்தான். (௩௦)

நல்லவரொருவ ருளரெனிலவரான் ஞாலமெல்லாமழைபெ யக்கொண், டல்லலற்றுய்யு மெனுமறைப்படியிவ் வருட்சிவஞான தேசிகனால், வல்லதம்விருப்பம் பெற்றவர்தீங்கு மாறிமேல் வழி தெரிந்திட்டோர், சொல்லவோரளவி லடங்கிடாதன்பர் துதித் திடச்சிலகதை சொலலே. (௩௧)

தெய்வமின்றருளின் றுத்தமநூல்கள் செப்பியவறங்கள் வினொன்று, பொய்வளரகத்தாற் புகன்றுழன்றிடும்வெம் புலைய ருக்கிவையெலாய்பொருந்தா, கைவருதவத்தா லெதிரருட்சித்தி காட்டுபுகடிதலேகடனு, மெய்வருமுளத்தோர்க் குறுதிதந்திடவே விளங்குநூலினங்கள் வாய்த்தனவால். (௩௨)

முகிலினந்தனக்கோர் பயன்விழைவின்றி முறைபெறப்புவி யுயிர்முளைத்துத், திகிலறவளர்ந்து செழித்திடமழைபெய் திர மெனப்பெருந்தவர்தாமு, மகிலமீதொன்றும் பெறவிரும்பாரா யருளினுக்கொருபெருஞ்சான்றுப், பகிர்முகத்தடிமைப் பண்பதுங் காட்டிப் பரத்திலொன்றுய்க்கலப்பாரே. (௩௩)

## உலகினர் பயன்பேறல்

வருக்கைதான்பழுக்கி லீத்திரண்மணத்தால் வந்துமொய்த் திடுதல்போல்வனத்தின், மருப்பொலிமலர்தான் விரியில்வண் டினங்கள் வலியவந்தினியதேனுணல்போ, லுருக்கமாருளத்திற் பெருக்கநல்லருட்சீ ருறுசிவஞானதேசிகன்றன், விருப்புடன்பகை யற் றுயர்தவத்தமைந்து விளங்குநாள்வினைந்தமைவிள்வாம். (௩௪)

கருணையேவடிவா முனிவன்பாலடைந்து கண்ணிலார்செவியி லார்கைகா, லருகியமுடவர் வாயிலாமூக ராதியோர்களுங்கொடுஞ் சூலை, பெருகுகாமாலைவெப்புடன்குட்டம் பிழைபடுகாசமாதிய

நோய்ப், பருவரலினரும் பணிந்துநீற்றெடுகட் பார்வைகைப் பரிச நல்வாயால். (௩௫)

வழங்கும்வார்த்தைகள்பெற் றக்குறைதவிர்த்து மகிழ்ந்தன ரதுவுமல்லாமன், முழங்குமந்திரவா தர்கண்மொழிக்கடங்கா முரட்கொடும்பேய்வசமாகி, யுழன்றவரிந்தப் பெரியனுலத்துன் பொழிந்துவந்தனரந்தவாய்மை, தழங்கலாலொருவூ டனுட்பொ ருமையினிற் றயங்கிப்பினிதுசெய்வான்மன்னே. (௩௬)

அரசன்மகள்குழல்நரை மாற்றல்.

செஞ்சியென்பதியி லரசியல்செலுத்துந் திரியம்பகப்பெய ரிறைபா, லஞ்சியேயோய்கின் றுன்னதாளுகைக்குளமைந்தபொம் மயபுரமதனின், மிஞ்சியகபடத் தினனொருதவசி விளம்புபேரோ சிவஞானி, வஞ்சியாவுலகர் தனைவணங்கிடப்பல் வகைபுரிந்தே நடித்துள்ளான். (௩௭)

உண்மையும்பொய்யு முணர்ந்துநன்றினைவைத் தொழிந்தனை விலக்குதலுலகாள், வண்மைதோயிறைவர் கடமையாதலினவ் வகைதெரிந்தவனைநீக்குகவென், றெண்மைகொண்டவன்போலியம் பல்கேட்டிறைவ னினியதன்மகளிளமைமுதல், வெண்மையார் குழல்வாய்ந் தவளையுமுடன்கூய் வியன்செறிபொம்மமாபுரத்தில்.

சரவணோற்பவசண் முககுருபரன்றன் றனிக்கலையாய்ச்சிவ வேடக், குரவனுத்திகழுந் திருச்சிவஞானி குளிரருட்டிருமுன்பு குறுகிக், கரவறுசரதப் பத்திகொண்டடியிற் கனகமாமுடிபடப் பணிந்து, பரவியோர்தனது குறையினைப்பயந்து பகர்ந்துவேண் டினன்முனிப்பார்த்து. (௩௯)

இருளுமஞ்ஞானக் கறையெலாந்தவிர விலங்குமெஞ்ஞான மெய்யொளிதந், தருள்புரிதனது கையினுற்றிருநீ றள்ளியம்மக டலைமிசைதூய்த், திருமலிநுதலிற் றீட்டினன்சிகிமேற் றிகழ்குக னருட்பெருந்திறத்தாற், கருமுகிலனைய நிறங்கொடுகூந்தல் கவின் றதுகண்டனர்பலரும். (௪௦)

மனத்தழுக்காறு கொண்டவர்க்கிகலோர் வாதைசெய்திடத்
தவறிடினுங், கனத்ததீங்களித்தற் கஃதொன்றேசாலு மெனுங்
கவின்மறைக்கொருகரியாய்ச், சினத்தகைப்பதித னெவ்விதத்தே
னுந் திருமலிமுனிவனைப்பதிவிட், டநத்தமெய்தறவோட் டிடுத
லுட்கருதி யரசன்பாலிதுசொல்வான் பின்னும். (சக)

## கடல்கடந்து கரைசேர்தல்

இந்தவோர்முனிவன் செயலருள்வலியன் றியைந்ததந்திரத்
தொழிலேயாஞ், சொந்தமாமெனது திறமுமின்னவன்றன் றுக
ளுறு நிலையுநீதெரிவான், சந்தநீர்க்கடலி னிடையெமைக்கொடு
போய்த் தள்ளுதிபுரையறக்கரையில், வந்தமைந்திடுவோர் தகுதி
கண்டப்பால் வணங்குதியென்றனன்மாதோ. (சஉ)

அரசனம்மொழிகேட் டருமகள்குழற்பண் பறிந்ததேசாலு
மென்றறையா, தூரமூறுமுனிவன் குறிப்புமவ்வாற்றிற் கொத்த
தோர்ந்தொருபெருந்தோணி, விரவவம்முனிவன் றன்னைமாந்திரிக
வீணனுமவனுடனேற்றிப், பரவையுட்சேய்த்தாச் சென்றுநீரிடை
யே பதியவிட்டிருங்கரைசார்ந்தான். (சங)

பிறப்பினோடிறப்பாங் கடலினைத்தவமாம் பெரும்புணைத்
துணைகொடுதாண்டிச், சிறப்பதாங்கதியெய் திடப்பலர்க்கருளுந்
திருவருட்சீர்ச்சிவஞானி, மறப்பகைக்கொடியோன் றுன்புரிதிறத்
தால் வாரிதிப்புனலிடைமூழ்கி, யிறப்பனோவரசற் கறப்பயனளி
ப்பா னிறைவன்வந்திடுமுன்வந்திருந்தான். (சச)

## மாந்திரிகனைக் காத்தருளல்

அத்திறந்தெரிந்த மன்னன்மாமுனிவ னடிமலர்பலதரம்
பணிந்து, சத்தியப்பரமாங் குருபரவுனது தன்னிகர்பெருமை
யோர்ந்தமையும், புத்தியற்றவன்வா ரிதிப்புனல்விடுத்துப் புவிபுரு
தென்னெனவினவ, மத்தியிலொருமீன் றனக்கிரையாகி மரித்தன
னெனச்சொனான்மன்னே. (சரு)

அதுதெரிந்திறைவன் முனிகழல்வணங்கி யறிவிலாவவன்
பிழைபொறுத்துன், பொதுநிலைக்குணத்தா லுயிர்பெறமீட்டுன்
புகழ்பகர்ந்துயச்செயென்றிரந்தான், விதுவுறழ்கருணைத் தவனவா

றழைக்க விரைந்துமாந்திரிகன்வந்திறைஞ்சிக், கதுமெனவடிமைத் தன்மையுற்றடியார் கணத்திடைகலந்தமைந்தனனே. (௪௬)

சமணர்வாகீசர் தமைக்கலோடிணைத்துச் சலதியிற்றள்ளின ரவர்தாம், விமலவைந்தெழுத்தின் பதிகமோதுபுபார் மீதுவந்தன ரெனுஞ்சரதங், குமரநாயகன்மெய் யருள்கொளின்னவனுற் குன் றின்மேற்சுடரெனக்குலவி, நமதுசற்குருவாம் பெரியன்மீதன்பு நன்கமைந்திடச்செயுமன்றே. (௪௭)

தீயர்பாலுறவா யிருக்கினுமின்னல் செறிந்திடப்புரிவருள் ளுண்மைத், தூயர்தமிடத்திற் பகைக்கினுநலமே தோயுமென்றிடு நிசமிந்த, மாயமாந்திரிக னுடன்சிவஞானி வயின்விளங்கியதெனப் பலருஞ், சேயருட்பெருமை புணர்ந்தனராகித் திருமலிதொண்டு செய்திருந்தார். (௪௮)

அரசன் மடாலய நிபந்த மமைத்தல்

வேறு

இவ்விதமகிமைத் திருவிளையாட லினையோர்ந்த
செவ்வியதிரியம் பகனெனுமன்னன் றிகழ்நெஞ்சி
லொவ்வியமகிழ்வுற் றச்சிவஞானி யுறைதற்காந்
திவ்வியமடநற் றொண்டர்கள்பூசை செயுமேடை. (௪௯)

சற்சாத்திரபா டங்களுரைத்திடு தனிமேடை
நற்சாரப்பல விதவமுதடியவர் நனியுண்ணும்
பொற்சாலைப்பொலி வாதியவமையப் புரிவித்தே
கற்சாபப்பர சிவனருள்வாழ்வது கைக்கொள்வான். (௫௦)

விளைநிலமானிய மாதியசாதன மிகநல்கித்
துளைடடுகைக்கரி பரிமுதல்விருதுக டோய்வித்தா
னிளையகுமாரக் கடவுளொர்கலையா கியமேலோன்
றளையவிழ்மலரா ளருளவன்மேவத் தவைசெய்தான். (௫௧)

இவையுமலாமற் சிலநகரங்கட் கிடைநல்லோர்
சுவைமலியன்னமு ணத்திருமடமொடு தொகுபூமி
நவைதவிர்ச்சிவ ஞானி மிசைக்கொளு நல்லன்பாற்
சிவையொருபாகத் தரனெனநாடிச் செய்தானே. (௫௨)

அவ்வளவுஞ்சாந் தானிகமுறையற மாக்கொண்டு
செவ்வடிவேன்மன் னணையடியாரொடு சேர்த்தாண்டான்
பௌவமதற்கரு கவிர்பொம்மபுரப் பதியூடுங்
கௌவரவச்செஞ் சிகிமலையின்சின கரமூடும். (ருந)

நித்தியநைமித் திகமெனுமுயரற நிகழ்வித்துச்
சித்தியனந்தந் தினமுமியற்றிச் சிவஞானி
சத்தியவானந் தத்திருநிட்டை தனிற்றேய்ந்தா
னத்தியநடுநாட் டினிலுயர்பழமலை நகராள்வோன். (ருச)

## சிதம்பரபூபதிக்கருளல்

சிதம்பரபூபதி யென்றிடுபேருள சிறுமன்னன்
சுதந்தரமார்தன தாட்சியையந்நியர் தொகைகொள்ள
மிதந்தகளிப்பறு நெஞ்சுடனையம் விழைந்தேற்றுண்
டிதந்தருமேலவர் தொண்டுசெய்துயனல மெனவுன்னி. (ருரு)

துணிவொடுபொம்மபு ரச்சிவஞானிது ணைப்பர்தம்
பணிகுபுதொண்டுபு ரிந்துறுநாளவன் பக்கத்தி
லணிதருசேனைகொ டிகலவரைச்செற வணிநீறு
தணிவில்புகழ்த்தவ சீலனளித்தத் தகைசெய்து. (ருசா)

அங்குசிதம்பர வண்பெயர்கொண்டவ ருந்தொண்டன்
மங்குதலின்றிய செம்பணிகொண்டுவ யங்கன்பர்
கொங்குமலிந்திடு கஞ்சநிகர்ந்தகு ணந்தங்குங்
குங்குமகந்தப தந்தொழுவங்குகு ளிர்ந்தானே. (ருஎ)

அண்ணல்வளம்பொலி பொம்மபுரந்தனி லருள்வீர
ரெண்ணவிளங்கின னெண்ணறுவிந்தையி லங்கிற்றல்
வண்ணநலங்குல வும்விரிசெந்தமிழ் மதிமேயோர்
பண்ணமையுந்துதி பன்னிவிரும்பிய பயனுற்றார். (ருஅ)

## சிவப்பிரகாசசுவாமிகள் வரலாறு

### வேறு

கச்சிநகருறைபவனோர் வேளாளன்சிவாகமநற் கலைகடேர்ந்
தோ, னச்சிதமாஞ்சமயவிசே டங்கணிருவாணமெனு முயர்

முத்தீக்கை, மெச்சிடப்பெற்ருசிரியா பிடேகமுங்கொண்டருளி லிங்கம் விளங்குபூசை, நச்சியியற்றிடுமுதியோ னருணைபணிந்திட விழைந்தந் நகர்சேர்நாளில். (௫௯)

தன்னதுபூசைக்குரிய பெட்டகங்காணுதுமனந் தயங்கித் தன்பா, னன்னருறுபரிசனரை வினவமுன்றங்கிடைமறந்த நவை சொற்றிட்டா, ரன்னவரிலொருவனையஃ தெடுத்துவரச்செலுத்தி யுண்ணு தயர்ந்துசோர்ந்தான், கன்னன்மொழியுமைபாகர் கனவி லவிர்ந்திவ்வாறு கழறலானுர். (௬0)

அங்கமுநல்லிலிங்கமும்வெவ் வேருவைத்தருச்சனைசெய் ததனுலிந்தச், சங்கடமெய்திடநேர்ந்த திரண்டுபடாதங்கலிங்க தாரணஞ்செய், திங்கரியபூசைபுரிந் திடும்வீரசைவநெறி யிசையக் கொண்டு, பங்கமறவாழ்கவுன்பூ சைப்பேழைவைகறைநின் பால் வந்தெய்தும். (௬௧)

இந்தவருணைத்தலத்தி லின்னவன்பாற்ருரணங்கொண் டிடு கென்ருேதுஞ், செந்தகையமொழிவினவி மகிழ்ந்தவணம்வரப் பெற்றுச் சிவலிங்கத்தை, நந்தலில்வீராகமநூல் வழிகுரவன்றர வுரத்தி னன்குபூண்டு, சொந்தமுறுபலர்க்குமது புரிந்துதன்னூ ரடைந்துபலர் துதிக்கவாழ்ந்தான். (௬௨)

அன்னவனுக்கரனருளா லுதித்தசுதர்களின்முதலா வமைந்த மேலோன், பின்னமிலாநுண்ணுணர்வோன் சிவப்பிரகாசப்பெயர் தான் பிறங்கக்கொண்டோ, னுன்னதச்சீர்வெள்ளியம்ப லப்பெய ரோனிலக்கணநூ லோதப்பெற்ருேன், றன்னதுதேசிகற்கிகலோ னஞ்சநிரோட்டப்பனுவல் சாற்றிவென்ருேன். (௬௩)

வெங்கைநகர்க்கோவையுலா கலம்பகமும்விருத்தகிரி விமலன் சீரு, மங்கையிலிங்காபிடே கத்தொடையாதியும்புகன்றே யவிருமந் நாள், சங்கையின்மேன்மைப்பொம்ம மாபுரத்திற்றவக்கொலுவிற் சாருஞானி, நங்கையர்மாமயலாதி வெறுத்துளவந்நாவலன்சீர் நன்குதேர்ந்தான். (௬௪)

## தடுத்தாட்கோள்ளல்

தன்னதன்பர் துதித்துவக்க வவனையுளத்தயையதனாற் றடுத் தாட்கொள்ள, வன்னவன்வாய்ப்பனுவலொன்று வேட்டவித மொருவனைக்கொண் டறிவித்திட்டா, னின்னமொழிவினவியன் னேன் மனிதர்மிசைபாடுகிலே னெனச்சீற்றிட்டான், பன்ன லுணர்ந் தஞ்சியவன் போய்ச்சிவஞானிக்கிதனைப் பகர்ந்தான் கேட்டு. (௬௫)

அறுவதனம்பன்னிருதோ ளிருசரணங்கதிர்வேல்கொண் டணியார்தோகை, பெறுமயின்மீதிருமகளி ரிடைகுலவுங்குகனை யுள்ளிற் பெரிதுநாடி, யிறுதியிலாவுனதசைவே யாவுமெனினீங் கியல்வதென்னென் றுள்ளிற், சிறுசினமெய்தினனேர்சிவப் பிர காசன்றன்கனவிற் செவ்வேற்பெம்மான். (௬௬)

சுகந்தமலர்வகையொடுநார் கரங்கொடுசென் றெனதுகலை தோய்ந்துஞானச், சுகங்கொள்சிவஞானியென்னில் வேறலனத் தூயன்மிசை துதிப்பாமாலை, யுகந்தணிதலாகுமுனக் கென்சொலி சையாதமுர னுறுமேலிந்தச், சகந்தெரிபூமாலையையா யினுந் தொடுத்துச்சாத்துகெனச் சாற்றலானான். (௬௭)

நனவுதித்துச்சிவப்பிரகா சப்புனிதன்மனம்பதறி நானென் செய்தேன், சினவரவத்தண்டைமயிற் குமரகுருபரனருள்சேர் சிவஞானிக்கென், றனதுகவிகழறவிணங் காதுரைத்தபிழையகற்றத் தகுமாறீதென், றநகநறுந்தமிழ்கொடுதா லாட்டுநெஞ்சுவிடுதூது மறைந்துசென்றான். (௬௮)

சென்றுநீள்பொம்மபுரத் திருமடாலயத்தொளிருஞ் சிவ ஞானிப்பேர்க், குன்றுபோல்வான்முனடி யற்றமரமெனப்பணிந்து குவித்தகையுங், கன்றுதாய்ப்பசுவையடைந் தாங்குடலநெக்குரு கக் கனிந்தநெஞ்சு, மொன்றுநாவலனையருள் விழியுறப்பார் தெழுகவென வோதிநீறு. (௬௯)

தன்கரத்தாலளித்திருத்திக் குகனருளின் றிறகினைத்துத் தமிழ்ப்பாநூல்க, ணன்கறையக்கேட்டுவகை நனியடைந்துநின் னுரி மை நயந்துகொண்டே, னென்கருணைமொழிகூறித் தன்னடியா

களிற்சிறப்புற் றிடவைத்திட்டான், றென்கயிலையெனும்பொதி யைத் தமிழ்கொடுபிள்ளைக்கவி நூல் செப்பிப்பின்னும். (எ0)

திருப்பள்ளியெழுச்சியொடு கலம்பகமாதியபனுவல் செப்பிப் போற்றி, விருப்பினொடுவெறுப்புமிலா ஞானநிலையடைந்துலகின் மேன்மைதோய்ந்து, பொருப்பவிர்காளத்தியின்சீர் பிரபுலிங்கலீலை முதற் புகன்றுவாழ்ந்தான், குருப்பரமன்றனையடைந்த சிவப்பிர காசப்புலமைக் குரிசின்மாதோ. (எக)

## குமார மகிமை

அன்புருகிப்பலகாலந் தவம்புரிவார்தமக்குமெளி தருளா தெண்ணில், வன்புறுசோதனைபுரியு நீதிதெய்வத்தினதுளத்தில் வாய்ந்ததாகும், புன்புலவாசனைவசப்பட் டுழலுமென்போல்வாரை யும்பல் புனிதவாய்மை, யின்புறச்சொற்றுளுமுயர் கருணைகுருபர னிதயத் தியைந்ததாமால். (எஉ)

தெய்வவடிவினைக்கருதி யொருவனருள்பெறுவதினுந் தெய் வத்தன்பா, மெய்வழிசொற்றருள்குரவன் றெண்டுபுரிந்தேத்தியன் னேன் வியனூர்கோல, நைவறச்சிந்தித்தெதுவு மவனலதின்றெனு முறுதி நயந்தான்மாயைப், பொய்வறளூற்றருள்பெருகிச் சித்தி முத்தியெனுமிரண்டும் பொருந்துமாதோ. (எங)

குமாரனென்றுங் குருவென்றும் புகல்வதுநிட்களபரத்தின் கூறுய்வேறு, சமானமிலாதொளிர்சகளத் தினுக்குமுயரருள்வலி சேர் தவத்தினோற்குந், தமாதெதிர்நின்றுரியதவ நெறிபகர்மேல வற்குமெனச் சாற்றலாகு, முமாபதிமால்களிறுகுகன் சிவைபரிதி வெவ்வேறென் றுரைக்குநூலே. (எச)

*அவைமுழுதும்வீணன்றன் றூரம்பபக்குவத்தோர்க் கக நிலைத்தே, யிவைநமதென்றுரிமைகொடு வழிபடுதற்கெனமுன்னோ ரிசைத்ததாகு, நவைதவிர்பக்குவமுதிர்கா லனைத்துமொன்றுய்த் தானுமதா ஞாயந்தோன்றுஞ், சுவையலவென்றிகழ்ந்தொதுக்கி லேணியின்றிமேடையுறத் துவக்கல்போன்மே. (எரு

## ஐக்கியப் பேறு

அங்கவனவ்வா றிருப்பச் சிவஞானதேசிகனே ரைஞ்ஞூ றுண்டு,
மங்களமெய்யருள்வாழ்விற் றிகழ்ந்துபின்சீர்மலிதருவை காசித்
திங்க, டிங்கள்பதினாறுகலை நிறைபருவம் விசாகவுடுச் சேர்ந்த
நாளிற், சங்கரன்மெய்யருளைநினைத் துரியதன்சீடனுக்குபதே
சங்கள்சாற்றி. (எசு)

ஆசிரியத்தகையபிடே கம்புரிந்துபொம்மபுர மணிமயிற்குன்
றேசில்புகழுறத்தரும பாலனங்கள்புரிந்துவரு மினிமைத்தொண்
டர், மாசில்கவிவலைபுலவோ ராதுலராதியர்தகுதி மதித்துச்செய்
யட், பேசியுடலருட்டிருநீ றுயொளிரவிலிங்கமதுட் பிறங்கினனே.

## கால அளவைக் குறிப்பு

முதற்கயிலைக்கணத்தலையா யவிர்ந்துலகிலயோனிசன முனைத்
தசித்தன், சதத்தளவேதியன்விதிபோய்ச் சகத்திரவாண்டிருந்து
கள்ளி தன்பான்மாந்தி, மதப்பிரிவின்பிணக்ககற்றி யிருந்திலிங்க
மாயினனவ் வல்லோன்றன்கண், ணிதத்தலையயாலுதித்தசிவஞானி
யைஞ்ஞூறுண்டிருந்தே யேய்ந்தான்முத்தி. (எஅ)

அதன்பினிருந்திதுவரையாண் டோரைஞ்ஞூறுயினவென்
றறைவர்மூன்றுச், சுதந்தரமெய்தியபெரியோ னனபாலையன்முன்
னோர் சொல்லுமாறே, விதம்படுபல்லறம்விளைத்துப் பின்றனதன்
பனுக்களித்து மேவினனை, விதம்பெறுமம்முறையினிலெண் பதி
னைந்தா யினைந்தவனே ரினியவேந்தல். (எகூ)

## பதினைந்தாவது பட்டம்
## சிவசுப்பிரமணிய பாலைய சுவாமிகள் மகிமை

அன்னவன்றன்பெயர் சிவசுப்பிரமணியபாலையனென் றறை
வாருண்மை, மன்னவெழின்மயூரகிரிக் குமரனாலயத்தரும வகை
கள்செய்து, பொன்னணிமாமேருவெனப் பொலிதருமற்புதத்
திருக்கோபுரமும் வேலன், றன்னரியசிறப்புவிழா மண்டபமுஞ்
சுரர்வியப்பச் சமைத்தான்பின்னும். (அ0)

அக்குமரன்றனதுமயூ ராசலத்துற்பவஞ்சித்த னமைந்தவாறு
திக்குணரப்பிடிமகளை யறமகளைக்குகன்மணந்த சிறப்புமுன்னு

மிக்குளமான்மியமுழுதுந் தமிழ்க்கவியிற்புராணமெனவிளம்புமாறு
தெக்குடையானனுகரிய பழமலைவாழ்தியாகராசப்பேரோனே. ()
ஏவியரங்கேற்றியற்றி யவைத்தலைமைவகித்தவற்கா மின்சீர்நல்கிப்
பூவினுளோர்முழுதறிய வதனையச்சிற்பதித்தரிய புத்தகங்கண்
மேவிடவெங்கும்பரப்பி யிருந்ததன்றியெங்குருவாய் வேய்வனத்தி
லாவிகொடுவந்ததண்டபாணி திருப்புகழ்க்குரிசி லங்குநேர்கால்.

கலம்பகம் பாடுவித்தல்

வேறு

தனன தானதன தந்ததன தந்தன.

பெரிய தோர்மகிழ்வு கொண்டுமுக மன்களே
பிரியமேவுறவி ளம்பியமர் கின்றநா
ளரிய வானவிட யங்கள்பல விண்டுநீ
யறுமு கேசன்மிசை வண்டமிழ்வ ளங்கொடே
விரியு மேதருக லம்பகமி யம்பெனு
விழையு மோர்செயல றிந்துதடி செங்கைதோய்
துரிய மாதவன ரும்பொருள்பொ ருந்துமா
சுகம்வி ராவிடவ றைந்தனன தன்றியே. (அரு)

தனன் தானதன தத்ததன தத்தன.

பதிக மோரிருவி தத்தினினு ரைத்துநீள்
பயனெ லாமிடுதி ருப்புகழ்வ ழுத்தியே
நிதிகொள் பாலையமு னிக்கொர்பதி கத்தைமா
நியம மேவிடவ ழுத்தினன வைக்கணே
புதிய நூல்களையு ரைத்துரைவி ரிக்கவே
புளக மோடுவின விக்குகன ருட்செய்சீர்
மதியி னுலறித ரக்கலைத ரித்தரு
மகிமை நீறதும ளித்தனனெ டுத்தரோ. (அசு)

தான தத்தனத் தனதன தனதன.

பாலை யப்பெயர்ப் பெரியவன் மயிலம்வாழ்
பார குக்குடக் கொடியினன் மகிழவோர்
நாலை மெய்த்திருப் புகழ்முனி சொலவின்சீர்
நாத னக்கவித் தொடைபுனை தாமுனுள்

வேலை வைத்தகைக் குகனொரு கவிவலான்
மேவு நிட்டையிற் பகர்செயல் கருதியே
கோலை யொத்தகட் கலைமக ளறிவிலே
கூடி நிற்குநற் புலவர்க ளுணர்வரே. (அரு)

தய்ய தானனத் தன்னன தனதன.

செய்ய தாமரைக் கண்ணரி மருகனார்
தெவ்வர் வாதறப் பண்ணிடு குமரனார்
வையம் வானகத் துண்ணிக ரறுகலூர்
வள்ளி வாரணப் பெண்மகிழ் கணவனூர்
பொய்ய ராமவர்க் கெண்ணவு மரியவூர்
புள்ளி மாமயிற் பண்ணவன் மருவுமூர்
நைய வோருயிர்க் கின்னல்செய் கிலர்தமூர்
நல்ல பாலையப் புண்ணியன் மயிலமே. (அசு)

தனன தானனத் தானன தனதன

அடிய ராமவர்க் காகிய குரவனே
யமல மோனநிட் டாபர முதல்வனே
யிடியை நேர்தொனிப் பாவலர் துணைவனே
யெனைய னருமெய்ப் பேறுற வருள்வனே
கடிகொ டாமரைப் போதுறு திருவுநீள்
கலைமி னளுநத் தாதர மகிபனே
மடிகொள் பாலுடைத் தேனுவை யனையசீர்
மயில மாமலைப் பாலைய முனிவனே. (அஎ)

வேறு

அந்தப்பாலைய முனிவன்சிவகதி யடையுந்ததியினி லடியார்கள், சொந்தம்பெறவளர் சுதனுமவன்மிசை தோயுந்தயைகொடொர் சொற்கூறிக், கந்தன்றிகழ்மயி லத்தும்பொம்மபு ரத்துந் தருமங் களைநன்கு, சந்தம்படநட வற்கதிகாரந் தந்தணிலிங்கத் தகையானன். (அஅ)

பதினாறுவதுபாலையசுவாமிகள்மகிமை

அதுபெற்றிட்டவ னருளியனுலகிய லாகுமிரண்டும றிந்திட்டோன், புதுமையுறப்பல பணிகளிகத்தினர் பொருள்கொண்டணி மயி லக்கோயிற், கதுலமுறச்செய் தணிநிலநீர்நிதி யமைதல்புரிந்துபனுடங்கிச், சதுரனெனப்பலர் புகழவிளங்குபு தண்டணிகைச் சரபன்முன்னுள். (அகூ)

ஓதுகலம்பக நூலிணையெழுதா வுயர்பொறியிற்புத் தகமாக்கிச், சாதுசனத்தொகை யோர்புலவோர்கொடு சந்தோடிக்கவளித்திட்டான்,கோதுதவிர்ந்தத மிழ்ப்பனுவற்பொருள் கூறிவிளக்குகு ணத்தீரன், பாதுகையிட்டப தத்தனிலிங்க பதத்திலமைந்து பதிந்தானே. (கூ0)

பதினேழாவதுபாலையசுவாமிகள்மகிமை

பதிந்திடுமன்னபெ ருந்தவன்வாழைப ரம்பரையாவளர் பண்பேபோல், வதிந்திடுதொண்டுறு மைந்தனிடந்திரு மறையபிடேகமு டிப்பித்திட், டதிர்ந்தகுரற்குரு கார்புயவேல னருட்கலைசாரவமைத்தானுன், முதிர்ந்தசிரத்தை யமைந்தறமியாவு முடித்துவிளங்கினன் முதுபாரில். (கூக)

பொம்மபுரத்திலி ருந்தணிமயிலப் பொற்கிரியதனிடை புகுகிற்பான், செம்மயிலக்கிரி யுற்றுயர்பொம்மத் திருநகர்நாடுபு செல்கிற்பான், மைம்மலிசோலைகொள் சேய்நகர்கச்சி வளப்பதியாதியவயின்மேவுங், கைம்மலிதொண்டுறு பலமடமன்பர் கணங்கவனிக்கவகுத்தானே. (கூஉ)

பொங்குவளஞ்செறி கொங்கமைசிரவண புரநகரிடைகவுமாரப்பேர், தங்குமடந்திகழ் பிங்கலமன்றிடை தவமுயனுமிராமானந்தன், செங்குணநிதியனை யான்மயிலத்திடை சேரமகிழ்ந்து திறற்செவ்வேள், கங்குதவிர்ந்தகல் சந்நிதி பூசனை கண்டுகலம்பக மெனுநூலை. (கூங)

மறுமுறையச்சில மைத்திடுபுத்தகம் வந்திடுதொண்டர்பெறத்தந்து, நறுமலர்மாலைகள் கண்டொடுசந்தன நன்குவழங்கிநலஞ்செய்து, குறுநிலமன்னவ ரன்னவரன்பொடு கும்பிடநீறு

கொடுத்தேதீங், கறுதமிழ்நாவலர் பாவினமோதுத லன்பொடு
வினவிம கிழ்ந்தானே. (கூசு)

## பதினெட்டாவது பாலையசுவாமிகள் நிகழ்ச்சி

### வேறு

இன்னணம்பல் காரியஞ்செய் திருந்து பொன்னுசாமிப்பேர்
பன்னநிகழ் பாலையன் பதினேழாம் பதவியினி
னன்னர்வசித் திருந்துகதி நன்கடையுக் தினநேர்காற்
கொன்னகுகல் வித்திறமார் குமாரசாமிப் பெயரோன். (கூரு)

உலகவியல் வேதவிய லுலைவில்பொது வியலனைத்துஞ்
சலனமறத் தெரிந்தியற்றுஞ் சதுரப்பா டுறுமேலோன்
கலகமத வாதர்சொல்லாற் கலங்காமற் கவுமார
நலமதனைப் பொதுச்சிறப்பி னன்குபொருந் துறக்கொண்டோன்.

சத்துமுதன் மூன்றுமாஞ் சற்குருவே யெல்லாமென்
றுய்த்துணர்ந்து கொலைபுலையற் றுளிர்புரா ணச்சரித
நத்துமடிப் படையென்ன நவின்றுரிய வீரசைவ
வித்துவசே கரனுகி விளங்குதவத் துறைசெல்வோன். (கூஎ)

அன்னவனுக் குளதன்மடத் தாதீனத் தலைமைதர
முன்னமைந்த பெரியோர்செய் முறையிலுப தேசமது
பன்னலுடன் றவவேடம் பரிப்பவளித் தாசிரிய
னென்னவபி டேகமுநன் கியற்றியிலிங் கமதானன். (கூஅ)

இந்தவித மியலல்கலி யிசையுமையா யிரத்திருபான்
வந்த வொன்பதெனும் பிரபவப்பெயராண் டன்றுமுதல்
வெந்தகுவர் குலம்பொடித்த வேலவன்றன் மயிலத்தும்
பொந்தவிர்மாம் பொழின்மலிவார் பொம்மபுரத் திருமடத்தும்.

சிறப்பொடுபூ சனைபலவுஞ் சிந்தையுவப் பொடுநடத்தி
யறத்தலையா மெனமறைசொ லன்னதா னமும்புரிந்து
குறப்பெண்ணொடுசுரர்பிடியுங் கொள்குமர குருபரவே
ளுறத்தகுதென் மயூரகிரிக்கொருவிளக்கொத் தொளிர்ந்துள்ளான்.

சித்தர்புகழ் தருகுகவேள் சீர்திகழ்பங் குனிமதியி
னுத்தமர்கண் டுயக்கொள்ளு முயர்விழா வினிற்செலுத்தும்
வித்தகத்தேர் முதலியபல் வியன்பணிக ளியற்றியியற்
புத்தகக்கை வாணியருள் பொருந்திவிளங் குகின்றனே. (கoக)

திருமகளாற் பொருட்பொலிவுஞ் சீர்கொள்கலை மகளாகு
மருமகளாற் கல்விநல மதுவுமெழிற் பரையெனச்சொ
லொருமகளா லருள்வளமு முறக்குலவுஞ் சிவஞானி
பெருமரபு குகனருளாற் பெரிதுலகிற் பிறங்குகவே. (கoஉ)

முதற்பால சித்தனருண் முதிர்ந்துவரு சிவஞானி
யிதப்பாரில் விளைத்தகதை யின்னமளப் பிலவெனலாஞ்
சுதப்பான்மைத் தொண்டர்சொலுங்தொகுப்பினுள வரைதுலக்கிப்
பதப்பாவா லதன்றொடர்பும் பகர்ந்தொருவா முடித்தேனால். ()

கலியையா யிரத்துமுப்பா னிரண்டெனக் காசினியோர்
சொலிவழங்கு மெழிற்பிரமோ தூதத்தின் மாசிமதி
மெலிவில்புகழ்க் குமாரசாமிப்பெயர்ப்பாலையனுரையான்
மலியருட்சீர்ச் சிவஞானிமான்மியமியான் வகுத்தேனே. (கoச)

மந்திநேர் மனத்தொடர்பால் வருந்தியருட் குருபரன்றாள்
புந்தியாற் றினம்பரவும் புனிதர்திரு வடிக்கன்பார்
சேந்திநயகப்பெயரோன் செப்பியவிந் நூற்பிழைகள்
சிந்தியா தேற்றருள்க செந்தமிழ்ப்பா வல்லோரே. (கoரு)

சிவஞானதேசிகப்பிரதாப முற்றிற்று
பாயிரம் உட்பட, கவி - ககo.

---

வாழ்த்து வேண்பா

மயிலைமலை வாழ்கபொம்ம வண்புரமும் வாழ்க
கயிலைமலைப் பாலசித்தன் கண்பா—லயினுஞ்
சிவஞானி வாழ்க திருநீறு கண்டி
தவசீலர் வாழ்க தழைந்து.

குருபாதமேகதி

வேலுமயிலுந்துணை.

(வசனம்)

சகல வளப்பங்களும் பொருந்தியதாய் விளங்கும் கன்னட தேசத்திலிருந்து சிவபிரானுரைப்படி மல்லிகார்ச்சுன பர்வத முதலிய தலங்களைத் தெரிசித்து அருளடைந்து, அரசராதியோரால் அன்புகூர்ந்து அளிக்கப்பட்ட பல சிறப்புகளுடன் சிதம்பரத் தலத்தில் மடாலயம் வகுத்து அடியார்கள் மகிழ விளங்கியவர் ஸ்ரீ பச்சைக்கந்த தேசிகர் என்னும் வீரசங்கம ரொருவர். அவரது மரபில் அம்மவையென்னும் பெயருள்ள ஓரம்மையார் பிறந்து பருவமடைந்து மணவினைமுற்றி யில்வாழ்க்கையி லமைந்தும், புத்திரப் பேறில்லாத குறையால் மனச்சலிப்புற்று, ஆன்ம ஈடேற்றத்துக் குரிய தவமுயற்சியை விரும்பி, அக்காலத்தில் சங்குகன்னருடைய அவதாரமாய்வந்து முருகப்பெருமான் றிருவருட்பெருஞ் செல்வத்திலமைந்து சித்திகளியற்றி விளங்கும் ஸ்ரீ பாலசித்தரைச் சரண்புகுந்து விண்ணப்பிக்க, அவர் கருணைமிகுந்து தமக்கு நித்தமும் சதுரக்கள்ளியின்பால் கறந்து சமர்ப்பிக்கும் பணிவிடைபுரியக் கட்டளையிட்டனர். அம்மவையார் அவ்வாறு நியமத்துடனியற்றிவந்தனர். ஓர்நாள் சித்தர் தாம் உண்ட நிவேதன சேடமாகிய கள்ளிப்பாலைக் கொடுத்து, உண்ணுமாறுகூற அணுவளவும் தடையின்றி யுண்டனர். அது முதல் அம்மவையார் தெய்வீகக் கருவடைந்து அரியவொரு புத்திரனைப் பெற்றதுகண்டு தேவராதியோர் புகழ்ந்து வாழ்த்தினர். அம்மகன் மிகச் சிறப்பாக வளர்ந்து சித்தரது தொண்டிலமைந்து நின்றனன்.

சித்தர்பெருமானது விருப்பத்துக்கு முன்னமே அருள் செய்தபடி முருகன் அந்தப் புத்திரனுக்குக் குருவடிவக் காக்ஷியளித்து, உண்மைஞானமும், தவவேடமும், குருத்துவமும், சிவஞானதேசிக னென்னும்நாமமும் வழங்கிப், பொம்மபுரத் திருமடத்திற் பரம்பரையாகத் தொண்டர்கள் பரவ விளங்குக என்றறைந்துபின் சித்தரும் தாமும் மயூராசலம்வந்து, முன்சூரபன்மனுக்குக்கூறிய வுரைப்படி உபயதேவியர்சகிதம் திருக்கோயில் கொண்டமர்ந்தருளினர்.

அவ்வாறு சித்தருடன் விளங்கிப் பலநாளமர சித்தருக்கு ஆயிரம் வருடம் நிறைந்ததால் முருகன் கருப்பகிரகத்தின் றெற்கிலுள்ள சிவலிங்கத்தில் திருவுருவைமறைத்து ஐக்கமாயினர். இவ்விவரங்கள் தெரிந்து பொம்மய புரத்திலிருந்த சிவஞான முனிவர் மயூராசலம் வந்து முருகன் எதிரிலும் பாலசித்தர் ஐக்கஸ்தானமான சிவசந்நிதியிலும் வணங்கிப் பலவாறு அன்புடன் றுதித்துச் சிலநாள் தங்கிப்பின் மயூரகிரியிலும் பொம்மபுரத்திலுமாக நித்திய நைமித்திக தருமங்களைக் குறைவின்றி நடத்தியிருந்தனர்.

அவ்வாறிருக்கையில் உலகிற் பக்திமான்களுக்கு அருள்புரியும் சங்கற்பத்தால் அன்பினர் சூழப்புறப்பட்டுக் காஞ்சீபுரத்தை யடைந்து ஸ்ரீ ஏகம்பநாதரைத் தெரிசித்துத் தங்கியிருந்தனராக, அங்குள்ள வொருவன் சர்ப்ப விடத்தால் மயங்கியது கண்டு திருநீறளித்தனர். உடனே அது தெளிந்து பிழைத்தனன். இது விஷயம் பலர் கூறக் கேள்வியுற்று அந்நாட்டுக்கு அப்போதரசனுயிருந்த மிலேச்சன் சுவாமிகளை யடைந்து தனது மனைவிக்குள்ள சூலை நோயை நீக்கும்படி வேண்ட, சுவாமிகள் நீ ஏகம்பநாதராலய நிபந்தங்களைக் குறைத்தனை அவற்றை விடுக என்றோதி, தமது திருக்கரத்தால் விபூதிகொடுத்தனர் உடனே அந்நோய் முற்றும் நீங்கிற்று அவ்விசேடங்கண்ட அரசன் மகிழ்ச்சிமிகுந்து மேலும் பன்மடங்கு ஆலயத்துக்கு நிபந்தமமைத்துச் சுவாமிகளுக்கும் திருமடம், பூமிகள் விருதுகள் அநந்தம் ஏற்படுத்தி வணங்கினன்.

சிலகாலம் அங்கு வசித்து அன்னதான முதலிய தருமங்களியற்றிவந்து, பின் அவிடம் விட்டுப் பல இடங்கள் சென்று, செய்யூரென்னும் பதிக்குச்சென்றனர். அங்குள்ளார் சிலர் இவரது தவப்பெருமையறியும் தகுதியின்றி வீரசைவரென்று வெறுத்து, வஞ்சகங் கலந்த மனத்தால் இரண்டு மட்குடத்தில் வெள்ளைக் கல்லையும் மணலையும் நிறைத்து மூடிக்கொண்டுவந்து வைத்து வணங்கினர். இவ்விதம் அருளாலுணர்ந்த சுவாமிகள் ஒருவரை நோக்கி அவற்றை எடுத்து அனைவருக்கும் விநியோகிக்கும்படி ஆக்ஞாபித்தனர். அப்போது கற்கண்டும் சீனியுமாயிருக்கக்கண்டு வியந்து மகிழ்ந்து பணிந்து அநேக நிலங்கள் வழங்கி மடாலயமும்

அமைத்துச் சமர்ப்பித்தனர். அவற்றையேற்றுக்கொண்டு சில காலம் தங்கிப் பின் சிதம்பரம் சென்று சிவகாமசுந்தரி சமேத நடராஜப்பெருமானது பஞ்சகிர்த்திய நடனம் தெரிசித்து ஆனந்தபரவசராய்ப் பலநாளிருந்து பின் காவேரி வடகரைச் சிவதலங்கள் பல, தென்கரைத் தலங்கள் பல, தெரிசித்துப், பாண்டிநாட்டின் முகம்போன்று சிறந்து ஞானசம்பந்தாதி சமயாசாரியர்களாற்றுதிக்கப் பெற்றதான மதுராபுரியடைந்து வையையாற்றில் நீராடி நியமங்கள் முடித்து, ஸ்ரீ மீனாக்ஷியம்மை சோமசுந்தரக் கடவுள் சந்நிதிகளிற் தெரிசித்துக்களித்திருந்தனர்.

அந்நாள், அந்நகரத்தில் ஒரு தையல் வேலையாளன், அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் அரிய சித்திரப்படாம் ஒன்றில் அமைத்துத்தைத்து மீனாக்ஷிசந்நிதியிற் சமர்ப்பித்து, அவளருளாற் புத்திரப் பயன்பெற விரும்பிவந்தனன். அம்பிகை அவனிடம் தோன்றி அந்தப் படாத்தைச் சிவஞானமுனிவருக்குக் கொடுக்கும்படிகூற, அவ்வாறு அவன் சமர்ப்பித்து விண்ணப்பித்தனன். அதுகண்ட சுவாமிகள் கருணையுடன் மீனாக்ஷியம்மையைச் சிந்தித்து விபூதியுதவினர். உடன் அவன், இளமைப்பருவமும் மகப்பேறும், செல்வமும் பெற்று மகிழ்ந்தனன்.

அவ்வாறு பல அற்புதங்களியற்றியிருந்து பின் தமது ஆஸ்தானமாகிய பொம்மபுரத் திருமடஞ் சேர்ந்தனர்.

சுவாமிகளுடைய திருவருள் மகிமை தெரிந்துவந்து வணங்கி விண்ணப்பித்து மனக்குறை தீர்ந்தோரும், நோய் நீங்கினோரும், பூத பைசாசபீடிதந் தவிர்ந்திருந்தோரும், உத்தமவுபதேசம் பெற்றோரும், அளவிலராயினர். அதுகண்டு அங்குள்ள மாந்திரிகனொருவன் அழுக்காறுகொண்டு சுவாமிகளை நாட்டைவிட்டகற்ற எண்ணி, செஞ்சிநகரில் அப்போது அரசாண்டிருந்த திரியம்பகனென்பவனிடம் சென்று வணங்கிநின்று உனது ஆளுகைக்குட்பட்ட பொம்மபுரத்திற் சிவஞானியென்னும் ஒருபோலித் தவசியுள்ளான், பலரை வஞ்சித்துத் தன்னிடம் அருளிருப்பதாக நடித்து வருகின்றனன். அவனைச் சோதித்து அப்புறப்படுத்துக என்றனன்.